## கையேடு 1.2 வீட்டுவேலையில் சிறுவர் தொழிலாளர்கள் என்றால் என்ன?

### 1.வீட்டுவேலை என்றால் என்ன?

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமாநாட்டின் 189 வது பிரிவில் குறிப்பிட்டதன் பிரகாரம் வீடு அல்லது வீடுகளில் செய்யப்படுகின்ற வேலை என வரயறை செய்கின்றது. வீட்டுபணியாளர் ஒருநபராக வேலைச்சூழலுக்குள் வீட்டுப்பணியினை செய்வதற்க்கு உடன்படுகிறார். வீட்டுவேலையானது மிகப்பரந்துபட்ட வேலைகளையும் சேவைகளையும் உள்ளடக்கியுள்ளதுடன் இவை நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக காணப்படுகிறது. இது வயது, பால்நிலை, சமூகபின்புலம், வேலையாட்களினுடைய இடப்பெயர்வு நிலை, கலாச்சாரம் மற்றும் பொருளாதாரம் போன்றவற்றின் அடிப்படையில் வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது. வீட்டுவேலைக்குள் சுத்தம் செய்தல், சமைத்தல, கழுவுதல், பிள்ளைகளை அல்லது மாற்றுத்திறனாளிகளை பராமரித்தல், வாகனம் ஓட்டுதல், வீடு அல்லது வீட்டுத்தோட்டத்தினை பாரமரித்தல் என்பன உள்ளடங்குகின்றன.

### 2.சிறுவர் எனப்படுபவர் யார்?

குறிப்பிட்ட சில நாடுகளினுடைய சட்டத்தில் சட்டரீதியான இளைஞருக்கான வயது குறிப்பிட்டாலே தவிர 18 வயதிற்கு குறைந்த நபரை சிறுவர் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் மாநாடு மற்றும் சிறுவர் தொழிலாளருக்கான சர்வதேச தொழிலாளர் அமைப்பு (Nos 138 மற்றும் 182) என்பன சிறுவர் என வரையறுக்கின்றது. ஆசியா பசுபிக் பிராந்தியம் உட்பட பல நாடுகள் இளைஞருக்கான சட்டரீதியான வயதினை 18 ஆக கொண்டிருக்கின்றது.

### 3. சிறுவர்களால் அவர்களுடைய சொந்த வீட்டில் செய்யப்படும் வீட்டுப்பணிகள் சிறுவர் வீட்டு வேலைக்குள் உள்ளடக்கப்படுமா?

சிறுவர்களுக்கு நெருக்கமானவர்களின் மேற்பார்வையில் மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையில் சிறுவர்களால் அவர்களுடைய சொந்த வீட்டில் செய்யப்படும் வேலைகள் வளருகின்ற குடும்ப வாழ்க்கையினுடை ஒரு இணைந்த பகுதியாக காணப்படும். ஆனால் அந்த வேலையானது சிறுவர்களுடைய கல்வியில் தலையிடுமானால் அல்லது நீண்ட கடுமையான வேலையாக இருக்குமானால் அது சிறுவர் தொழிலாளரை ஒத்த நிலைமையாக காணப்படலாம். சிறுவர்கள் அவர்களுடைய சொந்த வீட்டில் வேலை செய்தல் மற்றும் வீட்டுப்பணியில் சிறுவர் (முதலாளியினுடைய வீட்டில்) ஒரே வேலைகளை செய்வதாக இருக்கலாம். இந்த முதல் நிலையில் வேலைவாய்ப்பு கூடுதலாக இழக்கப்டுகின்றன. ஆகையால் நாம் இந்த சூழ்நிலைகளை வீட்டு வேலையுடன் தொடர்புபடுவதை தவிர்க்க வேண்டும். ஏவ்வாறாயினும் அனுமதிக்க முடியாத நிலைமைகளின் கீழ் குடும்பத்துக்காக சிறுவர்கள் வீட்டு வேலைகள் செய்ய

வேண்டுமென பெற்றோர் எதிர்பார்க்கும் பொழுது இது வீட்டு வேலையில் சிறுவர் தொழில் என கருதபபடுகின்றது ஆனால் இது தவிர்க்கப்பட வேண்டும்.

**4. சிறுவர் வீட்டு வேலை என்றால் என்ன?**

சிறுவர் வீட்டுவேலை என்பது ஒரு பொதுவான பதமாகும். வீடுகளிலே சிறுவர்கள் வேலையாட்களாக பணிபுரிதல் சிறுவர் வீட்டுவேலை என்பதாக கொள்ளப்படுகிறது. இந்த பொதுவான எண்ணக் கருவானது சட்டரீதியாக அனுமதிக்கபட்ட மற்றும் சட்டரீதியாக அனுமதிக்கபடமுடியாத சூழ்நிலைகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. சட்டரீதியாக அனுமதிக்கபட்ட சூழ்நிலைகளாக பின்வருவன காணப்படுகிறது.

- சிறுவர்களால் செய்யப்படும் வேலையின் தன்மைகள் மற்றும் வகைகளுக்கான ஆகக்குறைந்த சட்டரீதியான வயது எல்லைக்கு மதிப்பளித்தல்.
- சிறுவர்களுடைய கல்வியில் குறுக்கிடாமை மற்றும் வேலையினுடைய தன்மை அல்லது வேலை மேற்கொள்ளப்படும் சூழ்நிலைகளின் காரணமாக சிறுவர்களுக்கு உள மற்றும் பௌதீக ரீதியாக ஆபத்தினை ஏற்படுத்தாமை

**5. வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்களள் என்றால் என்ன? சிறுவர் தொழிலாருடைய ஒரு மிகவும் மோசமான வடிவமாக எப்பொழுது இது கருதப்படுகின்றது?**

சிறுவர்களின் வயது, வேலையினுடைய மணித்தியாலங்கள், வேலையின் தன்மை, வேலையின் வகை, செய்யப்படுகின்ற நிலைமைகள் என்பவற்றின் அடிப்படையில் வீட்டுவேலையினுடைய குறிப்பிட்ட வடிவத்தினை சிறுவர் தொழிலாளர் என அழைக்கமுடியும்.

## Box-1 சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் என்றால் என்ன?

வீட்டுப்பணியில் சிறுவர் ஊழியர் என்பது அனுமதிக்க முடியாத வேலைச் சூழ்நிலைகளில் அதாவது அனர்த்த நிலைமையில் அல்லது அடிமைப்படுத்தப்படும் சூழ்நிலையில் குறிப்பிட்ட வயதை விட குறைந்த சிறுவர்களால் வேலை செய்யப்படுவதைக் குறிப்பிடுகின்றது. வீட்டுப்பணியில் சிறுவர் தொழிலாளர் சூழ்நிலைகளில் சிறுவர்கள் அவர்களுடைய சிறுவர் பராயம் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் மதிப்பு போன்ற அவர்களுடைய அடிப்படை விடயங்களை இழக்கின்றனர்.

- அவர்கள் அவர்களுடைய இளவயது காரணமாக சட்டத்தால் அனுமதிக்கப்பட முடியாத வேலைகளை செய்கின்றனர்.
- அவர்கள் செய்கின்ற வேலையின் தன்மை மற்றும் அது மேற்கொள்ளப்படும் நிலைமைகளினால் அவர்களுக்கு பௌதீக மற்றும் மன ரீதியான பாதிப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

- அவர்களுடைய வேலையானது பாடசாலைக்கு செல்வதற்கான அவர்களுடைய வாய்பினை தடுப்பதுடன் முற்கூட்டியே பாடசாலையிலிருந்து விலக்குவதற்கும் கட்டாயப்படுத்தப்படுகின்றது. அல்லது பாரிய நீண்ட வேலைச்சுமையுடன் பாடசாலைக்கு செல்ல வேண்டிய தேவையை ஏற்படுகின்றது.

## குழந்தை தொழிலாளரின் மோசமான வடிவங்கள்

சா்வதேச தொழிலாளா் ஸ்தாபனமாநாட்டின் ஆக்கம் 3 இல் 182ம் பிரிவானது பின்வருமாறு குழந்தை தொழிலாளருடைய மோசமான வடிவத்தை வரையறுக்கின்றது.

- குழந்தைகளை கடத்தல் மற்றும் விற்பனை செய்தல், கடனுக்காக அடிமையாக வைத்திருத்தல், ஆயுத போராட்டத்திற்கு கட்டாயப்படுத்தி பயன்படுத்தல் போன்ற அடிமைத்தனத்திற்கு ஒப்பான நடைமுறைகள் அல்லது அடிமைத்தனத்தினுடைய எல்லா வடிவங்களாகும்.

- விபச்சாரம் மற்றும் ஆபாசபட உற்பத்திக்காக அல்லது ஆபாசபட செயன்முறைக்காக சிறுவா்களை வழங்குதல் அல்லது வலிந்து பெற்றுப் பயன்படுத்தல்.

- குறிப்பிட்ட உற்பத்திக்காக் போதைப்பொருள் கடத்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளுக்காக சிறுவா்களை வழங்குதல் அல்லது வலிந்து பெற்றுப் பயன்படுத்தல்.

- வேலை மேற்கொள்ளப்படும் போது அதனுடைய இயல்பு மற்றும் சூழ்நிலைகளால் சிறுவா்களுடைய உள பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் பாதகமான பாதிப்புக்கள் ஏற்படுத்தல்.

சிறுவா் வீட்டுத் தொழிலளாருடைய மோசமான வடிவமானது வீட்டு வேலைக்குள் உள்ள எந்த சிறுவருடைய சூழலையும் உள்ளடக்கியது. அடிமையாக இருத்தல் அல்லது அடிமை போன்ற சூழ்நிலையில் இருத்தல். பாலியல் ரீதியாக துஸ்பிரயோகம் செய்தல் அல்லது துன்புறுத்தல்.

**சிறுவர் வீட்டுத் தொழிலளாருடைய எல்லா மோசமான வடிவங்களும் அனுமதிக்கக்கூடியதாக காணப்படுவதுடன் அவை கட்டாயமாக வெளியேற்றப்பட வேண்டும்**. முன்னுரிமை அடிப்படையில் இது போன்ற சூழ்நிலைகளில் இருந்து சிறுவர்கள் நீக்கப்பட வேண்டும்.

## 6. சிறுவர் வீட்டு வேலையின் சில காரணிகள் மற்றும் புள்ளி விபரங்கள்

- சிறுவர் வீட்டு வேலையில் சிறுவர் ஊழியர் என்பது ஆசியா பசுபிக் பிராந்தியம் உள்ளடங்கலாக உலகளாவிய ரீதியில் பரந்துபட்டதாக காணப்படுகின்றது. இதற்கான போதிய ஆதாரங்கள் காணப்படுகின்றது.

- முதலாளியினுடைய அல்லது மூன்றாவது நபருடைய வீட்டில் ஊதியம் பெறும் அல்லது ஊதியம் பெறாத˙ வீட்டு வேலையில் 17.2 மில்லியன் சிறுவர்கள் காணப்படுகின்றார்கள்.

- அவர்களில் சிறுவர்கள், சிறுவர் தொழிலாளர்கள் என்ற சூழ்நிலைகளில் காணப்படுகின்றார்கள்.

- அவர்களில் 3.7 மில்லியன் சிறுவர்கள் ஆபத்தான வேலையில் இருக்கின்றார்கள்.

- அதிகமான 5.7 மில்லியன் இளம் பருவத்தினர்˙ சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட வேலையில் இருக்கின்றார்கள். ஆனாலும் அவர்கள் துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஆரோக்கியமான வேலைச்சூழல் வழங்கப்பட வேண்டும்.

- மேலும் கடத்தி கட்டாயப்படுத்தி வேலைக்கு அமர்த்துவதன் விளைவாக தீர்மானிக்க முடியாத எண்ணிக்கையிலான சிறுவர்கள் வீட்டு வேலையில் அமர்த்தப்படுகின்றனர்.

- 20.9 மில்லியன் மொத்த கட்டாயப்படுத்தி வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களில் 17வயது மற்றும் அதற்கு குறைவானவர்கள் 26% ஆக காணப்படுகின்றனர். (அல்லது 5.5 மில்லியன் சிறுவர்கள்)

- மொத்த சிறுவர் வீட்டுப் பணியாளர்களில் 67.1 சதவீதமானவர்கள் பெண்களாவர். 16 வயதிற்கு உட்ப்பட்ட அதிகமான பெண்கள் ஏனைய வேலையயைவிட வீட்டுப்பணியில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- மொத்த சிறுவர் வீட்டுப் பணியாளர்களில் 65.1 சதவீதமானவர்கள் 14 வயதிற்கு குறைவாந்தவார்களாகவும் 7.4 மில்லியன் பேர் 11 வயதிற்குட்பட்டவர்களாகவும் 3.8 மில்லியன் பேர் 12-14 வயதிற்குட்பட்டவர்களாகவும் உள்ளனர்.

**7. சிறுவர் வீட்டு வேலையினுடைய பொதுவான அம்சங்கள் மற்றும் ஆசியா பசுபிக்கில் சிறுவர் வீட்டுப் பணியாளர்கள்.**

- சிறுவர் வீட்டு வேலைக்காரர்களுடைய வயது 12 மற்றும் அதனைவிட கூடுதலாக இருக்க வேண்டும். ஆனால. பலர் இளவயதில் வேலையை ஆரம்பிக்கின்றனர்.

- பெண்களில் பெரும்பான்மையானவர்கள் தமது நாளாந்த வேலையினுடைய ஒரு பகுதியாக பின்வரும் வேலைகளை செய்கின்றனர். சிறுவர் பராமரிப்பு, சத்தம் செய்தல், சலவை செய்தல், சமைத்தல், நீர் மற்றும் எரிபொருள் எடுத்து வைத்தல், செல்லப்பிராணிகள் மற்றும் கால்நடைகள் பராமரித்தல், உணவுப் பொருள்களை வாங்குதல், வயதானவர்களை பராமரித்தல், சிலவேளைகளில் அவர்கள் சிறுவர்அகம் அல்லது வணிகத்திற்கு உதவுகின்றார்கள்

- ஆண்கள் எங்கே வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள்?

- பொதுவாக ஆண்கள் வீட்டுக்கு வெளியில் வேலை செய்கிறார்கள் (தோட்டவேலை, நிலத்தை துப்பரவு செய்தல், வாகனத்தினை கழுவுதல்)

- வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாமையினால் பங்களாதேஷ் பாகிஸ்தான் இலங்கை போன்ற நாடுகளில் அடிமைகளாக பல சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள்

- அவர்களுடைய அதிகாரமளித்தலுக்கு குறிப்பிட்ட தடையாக அவர்களுடைய தவறான நிலைகள் அடையாளப்பட்டிருப்பதனால் சிறுவர் வீட்டு வேலையாளர்களிடையே பதட்டம் மற்றும் குறைந்த சுயமரியாதை ஏற்படுகின்றது.

- கல்வி வாய்ப்புக்களின் கிடைக்ககூடிய தன்மை மற்றும் பாடசாலையினை தொடர்தல் போன்ற சிறுவர் வீட்டு பணியாளர்களுக்கு மிகவும் கடினமானதாக காணப்படுகிறது. சிறுவர்கள் பாடசாலை மற்றும் வேலைக்கு செல்வதனால் அவர்களுடைய பாடசாலை வீட்டு வேலை செய்வதற்கான இயலாமையில் குறுக்கிடுகின்றது.

- சிறுவர் வீட்டு வேலையாளர்களுடைய தேவைகள் தொடர்பாக பாடசாலைகள் விழிப்புணர்வற்றதாக காணப்படுகிறது.

- குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சிறுவர் வீட்டு பணியாளர்கள் பழங்குடிகள் மற்றும் சிறுபான்மை இனம் அல்லது கீழ் சாதி அல்லது கீழ் வகுப்பினரிலிருந்து வருகின்றனர்.

- எழுத்து மூலமான வேலை ஒப்பந்தங்கள் அதிகமாக வழமையற்றதாக காணப்படுகிறது.

- வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு பொதுவாக குறைந்தளவு சுதந்திரம் காணப்படுகிறது. ஊதாரணமாக முதலாளியினுடைய வீட்டில் சிறுவர் வீட்டுவேலைக்காக சென்றவர்கள் எந்த சமூக தொடர்பும் அல்லது குறைந்தளவிலான சமூக தொடாபுடன் இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

- பல சிறுவர்கள் வேலை வழங்கிய குடும்பத்தினுடைய கலாச்சாரம் மற்றும் மொழி போன்றவற்றுக்கு கட்டாயமாக பின்பற்ற பழகிக் கொள்கின்றனர்…

- அம்மா பணிப்பெண்ணாக காணப்படும் குடும்பத்தில் உள்ள சிறுவர்கள் அதிகளவில் தாங்களும் வீட்டுவேலை செய்பவர்களாக வர விரும்புகின்றனர்.

**8. சிறுவர் வீட்டுவேலை ஏன் மறைக்கப்படுகின்றது மற்றும் ஏன் அதனை தடுப்பதும் கடினமாக உள்ளது?**

சமூக மற்றும் கலாசார கோலங்கள் தொடர்பு காரணமாக சிறுவர் வீட்டுவேலையானது மறைக்கப்படுவதுடன் அதனை தடுப்பதும் கடினமாக உள்ளது.

சமூக மற்றும் கலாசார காரணிகள் பல நாடுகளில் சிறுவர்கள் வீட்டுவேலையானது சமூக மற்றும் கலாசார ரீதியாக அனுமதிக்கப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. இது சிறப்பாக பெண்களுக்கு பாதுகாப்பான வேலையினுடைய வகையாக காணப்படுகிறது. வீட்டிற்கு உள் மற்றும் வெளியே பாரம்பரியமான பெண்களுடைய பங்கு மற்றும் பொறுப்புணர்வு பற்றிய நீண்ட சமூக ரீதியான மனப்பாங்கின் காரணமாக சிறுவர் வீட்டுவேலையானது நல்கி வருகின்றது. வீட்டு பணியானது இளம் பராயத்தினர் மற்றும் திருமண வயதை உடைய பெண்களுக்கான முற்கூட்டிய ஒரு பகுதியாக பொதுவாக கருதப்படுகின்றது.

## Box 2 பால்நிலைப் பரிமாணம்

ஊலகளாவிய ரீதியில் 5-17 வயதிற்கிடைப்பட்ட 100 மில்லியனுக்கு மேற்பட்ட பெண்கள் சிறுவர் தொழிலுக்காக உள்வாங்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது. இதில் அரைப்பங்கிற்கும் அதிகமானவர்கள் (53 மில்லியன்) ஆபத்தான வேலையுடன் தொடர்புபட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டாயப்படுத்தி தொழிலாளராக அமர்த்தல் மற்றும் விபச்சாரம் போனறன சிறுவர் தொழிலாளருடைய அதிகளவான ஆபத்தான வடிவங்களில் பெண்கள் பெரும்பாலான பங்கில் உள்ளனர். இது ஒரு கவலைக்கிடமான காரணியாகும்.

சிறுவர் வீட்டுவேலையில் பாலநிலை மத்திய காரணியாக உள்ளது. பல கலாசாரங்களில் வீட்டுவேலைகாரியாக அடிப்படையில் பெண்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இளவயதில் வீட்டுவேலையானது அவர்களுக்கு அது ஒரு இயற்கையாக கருதப்படுகின்றது. கல்வியிலிருந்து வீட்டுவேலையானது ஒரு பெறுமதியானதாக பாாக்கப்படுகின்றது. சிறப்பாக பெற்றோர் அவர்களுடைய எந்த பிள்ளைக்காக எப்படி பணத்தை கட்டுவது என கணக்கு பார்க்கும் போது அவர்களால் பாடசாலை கட்டணங்களை கட்ட முடியும். இது பொதுவாக ஆண் பிள்ளைகளுக்கு உரியதாக இருக்கின்றது. மேலும் பாடசாலையில் பாரபட்சம் மற்றும் வினைத்திறனற்ற பாடத்திட்டத்தால் ஓரம்கட்டுதல் நிகழ்கின்றதோ மற்றும் ஆசிரியர்களால் பாலியல் தொந்தரவு ஏற்படுகின்றதோ அந்த பாடசாலைகள் பெண்களுக்கு ஒரு அச்சுறுத்தலாக காணப்படுகின்றது. முற்றிலும் அவர்களுடைய பால்நிலை காரணமாக பல பெண்கள் பாடசாலையிலுருந்து விலக்கப்படுகின்றார்கள். பாடசாலைக்கு வெளியே 110 மில்லியனுக்கு அதிகமான சிறுவர்களில் 3 இல் 2 பங்கினர் பெண்கள். இது உலகளாவிய படிப்பில்லாத சனத்தொகையில் 3 இல் 2 பங்கினராக ஏன் பெண்கள் காணப்படுகின்றனர் என்பதை விளக்குகின்றது.

பெண்கள் அவர்களுடைய குடும்பத்தால் வேறு வீடுகளுக்கு வேலைக்கு அனுப்பப்படும் பொழுது அவர்கள் அந்த முதலாளி அல்லது உறவினர்களின் முற்றுமுழுதான கட்டுபாட்டுக்குள் இருக்கினறனர். சிறுவர்களுடைய உரிமைகளை செயற்படுத்துவதற்கான எந்த ஒழுங்குமுறையும் இல்லாமையினால் பாதிக்கப்படக் கூடிய இளம் பெண்கள் வாய்மூலமான மற்றும் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதுடன் முதலாளிகளால் துன்புறுத்தப்படுவதுடன் மிருகத்தனமாக நடத்தப்படுகின்றனர். தவிர்க்க முடியாமல் துஸ்பிரயோகத்திற்கு தொடர்ந்து கீழ்படிவதனால் பெண்கள் சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க முடியாமல் இருப்பதுடன் தங்களை பெண்கள் ஒரு தாழ்வானவர்களாக நினைக்கின்றனர். இச் செயற்பாடானது அவர்கள் அவர்களுடைய சுயமரியாதையை இழப்பதற்கு வழிவகுக்குன்றது.

வீட்டுவேலையில் பால்நிலை பாகுபாடு சிறுவர் தொழிலாளர்களுடைய பாதுகாப்பு மற்றும் சிறுவர் தொழிலாளரைத் தவிர்த்தல் மற்றும் தடுத்தல் பற்றி விளங்கிக்கொள்ளுதல் அவசியமாகும். மேலும் பால்நிலை பாகுபாட்டை முன்கூட்டியே தவிர்ப்பதற்கு சட்டரீதியான சீர்திருத்தங்கள் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்தல் அவசியமாக காணப்படுவதுடன் சிறுவர் வீட்டுவேலையால் சமூக பொருளாதார மற்றும் சுகாதார விளைவுளை மதிப்பிட வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

**வீட்டு வேலையில் தனிமைப்படுத்தல்** : ஒதுக்கிய மற்றும் தனிப்பட்ட வேலையினுடை ஒழுங்குபடுத்தலின் காரணமாக வெளியிலிருந்து அவதானிக்க முடியாத ஏனைய சூழ்நிலைகளைவிட அதிகளவில் வீட்டுச் சூழலில் சிறுவர் தொழிலாளர்களுடைய மோசமான வடிவங்கள் தோன்றுகின்றன. எனவே பௌதீக உணர்வு மற்றும் பாலியல் துஸ்பிரயோகங்களால் துன்புறுத்தப்படும் சிறுவர்கள் மற்றும் ஆபத்தான வேலைச் சூழ்நிலைகளின் வெளிப்பாடு என்பவற்றை பாதுகாக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இளம் சிறுவர்கள் குறிப்பாக முழுமையாக அவர்களுடைய தங்கியிருப்பார்கள் மற்றும் ஏனைய பெற்றோரில் தங்கியிருப்பவர்களை பொறுத்தவரை இது உண் மையானதாகும்.

**வீட்டு வேலையின் படிமுறையான நடைமுறைகள் :** வீட்டு வேலையின் சமூக படிமுறையானது (சமூகத்தில் மக்கள் கூட்டத்தின் படிமுறை) ஆழமாக வேரூன்றி உள்ளது. தொழிலானது தனிப்பட்ட சேவையினுடைய செயற்பாடுகளால் வரையறுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வீட்டுப் பணியாளர்கள் ஏழைக் குடும்பங்கள் கீழ் வகுப்பு அல்லது சாதி சிறுபான்மை பழங்குடியினர் மற்றும் கிராம புறங்களிலிருந்தும் வேலைக்கு வருகின்றனர். அவர்களுடைய முதலாளிகள் நடுத்தரவர்க்கம் அல்லது சாதியை சேர்ந்தவர்களாக காணப்படுவதுடன் பட்டப்படிப்பினை முடித்தவர்களாக உள்ளனர். முதலாளியினுடைய விருப்பின் அடிப்படையிலேயே முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான அதிகார உறவு காணப்படுகின்றது.

ஏனைய வேலைலைகளைப் போலவே வீட்டுவேலை செய்பவர்களும் சம உரிமையினை கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலாளி வர்க்கம் ஒப்புக்கொள்வதில்லை. உண்மையாகவே எல்லா மொழிகளிலும் வீட்டுத் தொழிலாளர் என்ற பதம் அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றது. வீட்டு வேலைக்காரர்கள் பொதுவாக பணிப்பெண்கள், பையன்கள், வீட்டு உதவியாளர்கள், எனவே அழைக்கப்படுகின்றனர். அவர்களுடைய பிரதான வேலையின் அடிப்படையிலேயே இது குறிப்பிடப்படுகிறது. சலவை செய்யும் பெண் சமையலகாரர், ஆயா பராமரிப்பாளர் துப்பரவு செய்வோர் தோட்டக்காரர் அல்லது பாதுகாப்பாளர் அவர்கள் செய்கின்ற வேலையானது திறமையற்ற அதிகளவு

அல்லது திறமை தேவையில்லாத அதாவது கீழ்த்தர வேலையாக கருதப்படுகின்றது.

சிறுவர் வீட்டு வேலையாளர்கள் சமூக ஏணியின் கீழ்படியில் இருக்கின்றார்கள் இளம் ஆட்களாக இருப்பதால் அவர்கள் உற்பத்தி திறனுடையவர்களாக இருப்பதில்லை. முதலாளிகள் அவர்களுக்கு மிக குறைந்த ஊதியம் வழங்குகின்றனர். அல்லது ஊதியத்திற்கு பதிலாக தங்குமிடம் மற்றும் உணவுகளை வழங்குகின்றனர். முதலாளிகள் தங்களுடைய சிறுவர் வீட்டு வேலையாளர்களை தங்களுடைய மகன் அல்லது மகள் போன்று நடத்துவதாக அடிக்கடி கூறுகின்றனர். இதனை பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் காட்டி நிற்கின்றது. ஆனால் இந்த கூற்று ஆதாரமற்றதாக உள்ளது. சிறப்பாக இளவயது சிறுவர்கள் மற்றும் பெற்றோர் அவர்களை நடத்தும் விதம் பற்றி புகார் வழங்குவதற்கு தயங்குகின்றனர். சிலர் அவர்ளுடைய குடும்பத்தால் ஒப்படைக்கப்பட்ட அவர்ளுடைய முதலாளிகடு தாம் கடமைப்பட்டவர்கள் என உணர்கின்றனர்.

### Box 2 **வீட்டு வேலையில் அதிகார உறவுகள்**

வீட்டுத் தொழிலாளர்களின் உள்ளார்ந்த அதிகாரபூர்வ உறவுகளின் காரணமாக பெண் சிறுவர்கள் வீட்டில் இளம் ஆண்கள் அல்லது வயதானவர்கள் அல்லது அந்நியர்களால் துஸ்பிரயோகம் செய்யப்படலாம் மேலும் பெண் சிறுவர்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளிகள் மற்றும் வீட்டு உதவியாளர்களால் துஸ்பிரயோகம் செய்யப்படலாம். வீட்டு வேலையில் இருக்கும் சிறுவர்கள் அவர்ளுடைய வேலையை மெதுவாக செய்தல், இணைந்து செயற்படாமை, அல்லது பிழைவிடுதல் போன்ற காரணங்களுக்காக தண்டனையை பெறுவதுடன் சில பிழைகளை சுட்டிக்காட்டுவதற்காக அடிக்கப்படுதல் போன்ற நேரடியான பௌதீக துஸ்பிரயோகங்களால் துன்பப்படுகின்றனர். சிறுவர்கள் சுடப்படுதல் மற்றும் சித்திரவதைப்படுத்தல் போன்ற பிரச்சனைகளை குடும்பத்திலிருக்கும் இளம் நபர்களால் மட்டுமல்ல சிறுவர்கள் ஏனைய வீட்டு உதவியாளர்களாலும் எதிர்கொள்கின்றனர்.

### **சிறுவர்கள் குறிப்பாக பெண்கள் ஏன் வீட்டு வேலைக்குள் தள்ளப்படுகிறார்கள் அல்லது இழுக்கப்படுகிறார்ககள்?**

சிறுவர் வீட்டு வேலைக்கு பல காரணங்கள் காணப்படுகின்றது. பொதுவாக நாம் தள்ளுவிசை காரணிகள் இழுவிசை காரணிகள் என வகைப்படுத்த முடியும். தள்ளுவிசை காரணிகள் சிறுவர்களை வீட்டு வேலைக்குள் தள்ளுகின்றது. பிரச்சனைகளை தீர்வாக சூழ்நிலை காரணமாக சிறுவர் வீட்டு வேலைக்கு செல்வது இழுவிசை காரணிகளாகும்.

**பின்வருவன தள்ளுவிசை காரணிகளாக உள்ளன.**

- வறுமை மற்றும் சமூகத்திலிருந்து விலக்குதல்(வளங்கள் உரிமைகள் வாய்ப்புக்கள் பொருட்கள் மற்றும் சேவைகளுடைய குறைந்தளவிலான தன்மை)
- கல்வி மற்றும் கல்வி வாய்ப்புக்களின் பற்றாக்குறை
- பால்நிலை நிறம் மதம் தேசிய பிரிவினைகள் சமூகத் தோற்றத்தின் அடிப்படையில் பாகுபடுத்தல்
- சிறுவர்கள் அவர்ளுடைய சொந்த வீட்டில் வன்முறைகளால் துன்பப்படுதல்
- இடம்பெயர்தல்(ஆயுதப் போராட்டம், உள்ளகக் கலவரம், மனிதஉரிமை மீறல், இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தம் காரணமாக)
- பெற்றோரை இழந்த சிறுவர்கள் முரண்பாடு அல்லது நோய் காரணமாக கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம்பெயர்தல்

**இழுவிசை காரணிகளாக பின்வருவன காணப்படுகின்றன.**

- பெற்றோாகள் தங்களுடைய கடனை திருப்ப செலுத்த முடியாமையினால் அவர்களுடைய பிள்ளைகளை கடன் பெற்றவரின் வீட்டுக்கு அடிமை வேலையாட்களாக அனுப்புதல்.
- அதிகரிக்கின்ற சமூக பொருளாதார சமமின்மை
- சமூக கலாச்சார அனுமதி மற்றும் எதிர்பாாப்புக்கள் சிறுவர்களுக்கு குறிப்பாக பெண் சிறுவர்களுக்கு பொருத்தமானது பாதுகாப்பானது என நினைத்தல்.
- முதலாளி உறுப்பினர்களை அதிகரிப்பதுடன் சிறுவர்களுக்குக்கான பாதுகாப்பான சூழலை வழங்குவார்கள் என்ற கருத்து நிலவுதல்.
- இளம் வேலையாட்களுக்கான திடமான கேள்வி காணப்படுகின்றது. ஏனெனில் அவர்களை மலிவாக பெறக்கூடியதாக இருப்பதுடன் முதலாளிக்கு அவர்கள் குறைந்த ஆபத்தினை வழங்குகின்றார்கள். தனியார் மற்றும் தனிநபர் வேலை ஒழுங்குபடுத்துவார்கள் வசப்படுத்தக்கூடிய வேலையாட்கள் வேலையிலிருந்து வெளிறேறுதல் மற்றும் இடம்மாற்றுதல் இலகுவானது.
- வீட்டு வேலைகள் சிறுவர் வேலைக்காரர்களுக்கு கல்விக்கான வாய்ப்பினையும் சிறுவர்களுகடைய சொந்த எதிர்கால அபிலாசைககைளையும் வழங்குவது போன்ற மாயையை தோற்றுவிக்கின்றது.

## Box -4 ஒரு குடும்பம் போன்ற ஒரு தெளிவற்ற உறவு

பெற்றோர் தமது சிறுவர்களை புதிய குடும்பத்தில் வேலைக்காக அனுப்பும் போது அவர்கள் சிறுவர்களை வேலைக்காரர்களாக இல்லாமல் புதிய குடும்பத்தின்

ஒரு மகன் அல்லது மகளாகவே அனுப்புகின்றனா் ஆனாலும் கூட பெற்றோருக்கு அவா்களுடைய சிறுவா்கள் அங்கு வேலை செய்வாா்கள் என்பது தெரியும் பெற்றோருக்கும் முதலாளிக்கும் இடையில் மறைமுகமான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

தமது பிள்ளைகள் கவனிக்கப்படுகின்றார்கள் என்ற எண்ணம் தொடர்வதற்கு பெற்றோரை அனுமதிக்கின்றது. எவ்வாறாயினும் இந்த சுரண்டல் ஒழுங்குபடுத்தலை மறைத்தல், வன்முறை மற்றும் துஸ்பிரியோகத்தை மறைத்தலால் இது சிறாருடைய விருப்புக்கு எதிராக வழமையாக வேலை செய்கின்றது.

குடும்ப உறுப்பினர்களை அதிகரிப்பதற்காக பிள்ளையை எடுத்து வளர்த்தல் அல்லது இனம் தெரியாதவர்களால் பிள்ளையை தத்தெடுத்தல் போன்றவற்றை செய்யும் முதலாளிகள் தாராள மனங்கொண்ட உதவி செய்யும் பண்புடையவர்கள் என்ற எண்ணம் பசுபிக்அல்லது ஆசியாவின் சில சமூகங்களில் நிலவி வருகின்றது. இது வளரும் சிறுவர்களுக்கான சமூக சுகாதார மற்றும் சொந்த உறவுகளுடைய பராமரிப்பு என்ற கருத்தினை உருவாக்குகின்றது. உண்மையில் வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்கள் தோன்றுவதால் ஏற்படும் ஆபத்தினை மறைக்கின்றது.

**10. வீட்டு வேலையில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுடைய வாழ்க்கை நிலை மற்றும் வேலை நிலைமைகள் எவ்வாறு காணப்படுகின்றது?**

வீட்டு வேலையில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுடைய வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகள் தொடர்பான ஆய்வுகள் அண்மைக்காலங்களில் ஆசிய அல்லது பசுபிக் பிராந்தியம் உட்பட உலகின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுகள் வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளருடைய மோசமான வடிவங்கள் பரவலடைந்திருப்பதை உறுதிபடுத்தியுள்ளன.

- சிறுவா்கள் நீண்ட வேலை நேரத்ததை கொண்டுள்ளனா்(10-12 மணத்தியாலம்)
- அவா்கள் பெரும்பாலும் ஒரு கிழமையில் 6-7 நாட்கழுக்கு வேலை செய்கின்றனா்
- அவா்கள் பெரும்பாலும் பிரதானமான உணவுக்காக குறிகிய இடைவேளையினையே கொண்டுள்ளனா்
- தொடர்ச்சியாக விடுமுறை இல்லாமல் இருத்தல்(உதாரணமாக இந்தியாவில் 91 சதவீதமானவர்கள்)

- பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊதியம் வழங்குதல் அரிதாக காணப்படுவதோடு சில சமயங்களில் ஊதியம் வழங்கபடாமை அல்லது ஊதியம் நிறுத்தி வைக்கப்படுகின்ற தன்மைகள் காணப்படுகின்றன.

- குடும்பம் மற்றும் சகோதரர்களிடமிருந்து பிரிக்கப்படுதல் மற்றும் சமூகத்தில் பழகி நண்பர்களை உருவாக்குவதற்க்கான வாய்ப்புக்கள் குறைவு சிறுவர் வீட்டுப்பணியாளர்கழுடைய இலக்கற்ற உணர்வுளழுக்கு பாதிப்பு ஏற்ப்படுதல்

- மனிதக்கடத்தல் மற்றும் வீட்டுவேலைகளில் சிறுவர்கழுக்கிடையில் தெளிவான தொடாடர்பு காணப்படுகின்றது. (மக்கள் முகவர்களால் கைப்பற்றப்பட்டு பின் தொழில் அல்லது பாலியல் தேவைகழுக்காக பிள்ளைகளை வாங்குபவர்களிடம் விற்க்கப்படுகின்றனர்)

- சிறுவர்கள் போசாக்கின்மை, குறைந்த தனிஉரிமை, உளிவியல் ரீதியிலான தனிமைப்படுத்தல், உரிய நேரத்தில் மருத்துவ வசதி கிடைக்க பெறாமை, குறைந்த கல்வி நேரம் போன்றவற்றால் துன்பப்படுகின்றனர்.

- அவர்கழுக்கு கல்வி கிடைக்கபெறாத தன்மை அல்லது குறைவாக கிடைக்கப்பபெறுகின்ற தனஸ்மையும் காணப்படுகிறது

Box 5 **வீட்டு வேலை சிறுவர்கழுடைய கதைகள்**

- நான் அதிகாலை 5மணிக்கு எழுந்து சமைத்தல், சுத்தம் செய்தல், பாத்திரங்களை கழுவுதல், தரையை துப்பரவு செய்தல் போன்ற வேலைகளை செய்வேன் சிறுவர்கள் நித்திரை விட்டு எழுந்தபின்னர் நான் அவர்களை குழிப்பாட்டுவேன். சிறுவர்கள் நித்திரையான பின்னர் குழந்தை நித்திரயாக இருக்கும்போது வயதான பாட்டிக்கு குழிப்பதற்கு உதவி செய்வேன். நான் சமயலை முடித்தபின்னர் சிறுவர்களை பராமரிப்பேன் பெற்றோர்கள் வேலுலையிலிருந்து திரும்பி வந்தபின்பு அவர்கழுடைய ஆடைகளை சலவைசெய்து பின்னர் இரவிற்க்கான உணவினை தயர்செய்வேன். - இந்தோனேசியாவில் இருந்து சிறுவர் வீட்டு பணியாளர்.

- நான் எனது 12 வயதில் வேலயை ஆரம்பித்தேன் அன்றுமுதல் இன்றுவரை நான் என்னுடைய குடும்பத்தை பார்த்ததே இல்லை. வீட்டு நோய்(Home sickness) எனது பெரிய எதிரியாகும்.நான் மனிலாவில் வேலை வேலை செய்துகொண்டிருப்பதாக என்னுடைய முதலாழி எனது அம்மாவிடம் கூறிய பொழுது எனது அம்மா மட்டும் என்னை பார்த்தார். அவர்கள் எப்பொழுதும்

என்னை அடித்து துன்புறுத்துவதனால் வேறுயாரும் என்னை பார்ப்பதற்கு முதலாழி அனுமதிப்பதில்லை. நான் எப்பொழுதும் என்னுடைய பெற்றோருக்கு இந்தவாழ்க்கை கடினமானதாக இருந்தது என்பதை கூறவேண்டும். ஆனால் எந்த மாற்றமும் இருத்ததில்லை. - பிலிப்பைன்சில் இருந்து சிறுவர் வீட்டுப்பணியாளர்

- எனக்கு 13வயதாக இருக்கும்போது என்னுடைய அப்பா இறந்துவிட்டார். எனது குடும்பத்தினது உணவுத்தேவையினை பூர்த்தி செய்வதற்க்காக நான் எனது மாமாவின் நெல் வயலில் வேலை செய்தேன். அவர்கள் என்னை வேலயிலிருந்து நிறுத்தியபோழுது நான் வேறு வேலை தேடவேண்டிய தேவை ஏற்ப்பட்டது. குறிப்பாக எனது அம்மா விபத்தின் பின்னர் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டதன் பின்னர் நான் வேலை தேடவேண்டிய கட்டாயத்திலிருந்தேன். நான் ஒருநபரை சந்தித்த போது அவர் எனக்கு தாய்வானில் வேலை பெற்றுதர முடியும் எனகூறினார். நான் தரையை துப்புரவுசெய்தல், உடுப்பு தோய்த்தல், பாத்திரம் கழுவுதல், போன்ற வேலைகளை செய்யும் ஒரு வீட்டு சேவகனாக பாங்கொங்கில் வேலைக்குச் சேர்ந்தேன். என்னுடைய முதலாழி ஒரு வயதானவராக இருந்தார் நான் அவரை நிமிர்ந்துபார்த்தால் அவர் என்னை உதைப்பார். அவருடைய மனைவி அன்பானவர். அவர் என்னிடம் என்ன பிரச்சினை நடந்ததென கேட்ப்பார் ஆனால் நான் அவரிடம் சொல்வதில்லை. மூன்று மாதங்களாக ஒவ்வொரு இரவும் நான் அழுதேன. நான் அங்கே வேலை பார்த்தபோது எந்தவிதமான சம்பளத்தினையும் நான் பெற்றிருக்கவில்லை இறுதியில் நான் அங்கிருந்து ஓடி விட்டேன். வீட்டுக்கு திரும்புவதற்க்கு முதல் எங்கு புதிய திறமைகளை கற்றுக்கொண்டேனோ அந்த குடியிருப்பு மையத்தை தயய்வான் பொலிசாரின் உதவியுடன் அடைந்தேன். - லியோருக்கள் சனநாயக குடியிருப்பல் இருந்து சிறுவர் வீட்டு பணியாளர்.

- என்னை அதிகம் காயப்படுத்துகின்றது. அது வாய் மற்றும் பௌதீகரீதியான தண்டனையாக கூட இல்லாது இருக்கலாம். அவர்கள என்மேல் சிறிதளவான அன்பு மற்றும் மரியாதை காட்டாமல் இருந்தும் கூட நான் அங்கு கடுமையாக வேலை செய்கின்றேன். பிள்ளைகளை பாடசாலை மற்றும் பூங்காவிற்கு கூட்டி செல்லும்போது அந்த பிள்ளைகள் போன்று என்னாலும் அவர்கழுடன் விளையாட முடியவில்லயே என்னு எண்ணி கவலையடைகிறேன். - பங்களாதேசில் இருந்து வீட்டுவேலை செய்யும் சிறுவர்.

- நான் எங்கழுடைய வீட்டிலே வாழ்ந்துவந்தபோது ஒரு பெண்ணணாக நான் சமைத்தல், துப்பரவு செய்தல், வீட்டைப்பராமரித்தல் போன்ற வேலைகளை நான் செய்யவேண்டும் என எனக்குச் சொல்லப்பட்டது. இந்தநேரத்தில் வேலைவாய்ப்பு நிறுவனமுகவர் ஒருவர் டெல்லியில் இருந்து எனக்கு ஒரு வேலை தேடிக்கொண்டு வரும்போது எனது பெற்றோர் தமக்கு மேலதிகமாக காசு வரப்போவதை இட்டு மகிழ்ச்சிஅடைந்தனர். -இந்தியாவில் இருந்து சிறுவர் வீட்டு வேலை பணியாளர். (தரவு- பக்க எண் 10)

சிறுவர் வீட்டுவேலையுடன் பல அனர்த்தங்கள் தொடர்புபட்டிருக்கின்றன. சில நாடுகள் 18 வயதைவிட குறைந்த வயதை உடைய சிறுவர்கள் என்ன வகையான வேலையை செய்யலாம் என்பது தொடர்பில் தேசிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளை உருவாக்கி அனுமதி பெற்றிருக்கின்றன. பின்வருவன வீட்டுவேலையில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பொதுவான ஆபத்துக்களாக காணப்படுகன்றன.அவர்கள் அவர்கழுடைய முதலாளியினுடைய வீடுகளிலே வசிக்கும் போது இந்த ஆபத்துக்கழும் அவர்கழுடன் இணைந்திருப்பதாகவே காணப்படுகிறது.

- நீண்ட கடினமான வேலை நாட்கள் மற்றும் குறைவான தூக்கம்
- நச்சு இரசாயனங்களை பயன்படுத்தவேண்டி இருத்தல்
- நீர், எரிபொருள், துணிகள், மருந்துகள், மற்றும் ஏனை சிறுவர்கள் உட்ப்பட பாரமான பொருட்களை தூக்குதல்
- கத்திகள், கோடாலிகள், சூடான சட்டிகள் போன்ற ஆபத்தான பொருட்களை கையாளவேண்டி இருத்தல்
- ஏணிகள், வக்கியூம் கிளீனர், அடுப்பு, எரிவாயு கலன், சலவை இயந்திரம் போன்ற கருவிகளை இயக்குதல் அல்லது பயன்படுத்துதல்
- குறைந்தளவான உணவு மற்றும் குறைந்தளவான இடவசதி
- பௌதீகரீதியான மற்றும் வாய்மொழி மூலமான வன்முறை, பாலியல் துஸ்பிரயோகம் உள்ளடங்கலான அவமானப்படுத்தும் கீழ்த்தரமான செயற்பாடுகள்

இந்த சூழ்நிலைகளில் வேலைசெய்வதால் சிறுவர்களுடைய நல்வாழ்வு மற்றும் உடல் உளரீதியான பெருமளவிலான பாதிப்புக்கள் ஏற்ப்படுத்தப்படுகின்றது. இது போன்ற பாதிப்புக்களை சிறுவர்கழுக்கு ஏற்ப்படுத்துவதென்பது அவர்கழுடைய

அடிப்படை உரிமை மறுக்கப்படுவது போன்றதாகும். துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பு பெறுதல், ஓய்வு, மற்றும் விளையாடுதல், அவர்கழுடைய பெற்றோர் மற்றும் நண்பர்கழுடன் வழமையான தொடர்பை வைத்திருத்தல், வெற்றிகரமாக கல்வியை தொடர்தல் என்பவை அவர்களது அடிப்படை உரிமைகழுள் சிலவாகும்.

## 11. வீட்டு வேலை தொழிலில் இருந்து சிறுவர்களை தடுப்பதற்க்கு கல்வி ஏன் அவசியமாகின்றது.

ஒரு பிள்ளை ஒரு ஆசிரியர் ஒரு புத்தகம் ஒரு பேனாவினால் இந்த உலகையே மாற்றிவிட முடியும்.(மலாலா யூசபப். பெண்களின் கல்விக்காக குரல்கொடுக்கின்ற பாகிஸ்தானிய பெண். கடந்த 2014 ல் நோபல் பரிசை பெற்றுக்கொண்டவர்.)

கல்வி சிறுவர்கழுக்கு கிடைக்ககூடி தன்மை மற்றும் சிறுவர்களை வீட்டு வேலைதொழிலில் இருந்து வெளியேற்றுதல் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்பை உடயவை ஆகும். கல்வியானது இலவசமான, தரமான, மற்றும் கட்டாயமானதாக இருக்கின்றபொழுது அது சிறுவர் தொழிலாளர்களை குறைப்பதற்க்கு பெருமளவு உதவிரியும். எவ்வாறாயினும் ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளை பொறுத்தவரை இது மிகவும் கடினமானதொன்றாகும். அடிப்படைக் கல்வியை இலவசமாக கொண்ட நாடுகளில்கூட சிறுவர்கழுடைய கல்வி என்பது ஆதிலும் குறிப்பாக ஏழைக் குடும்பங்களை பொறுத்தவரை அது சுமையாகவே உள்ளது. உதாரணமாக சட்டத்தின்பிரகாரம் பங்களாதேசில் கல்வியானது தரம் 5 வரை கட்டாயமானதாகவும் இலவசமானதாகவுமே உள்ளது. ஆனால் சிறுவர்கள் ஆரம்ப கல்வியைகூட பூர்த்திசெய்ய முடியாமைக்கு, அதிகளவிலான மாணவர் ஆசிரியர் விகிதாசாரம், 2-3 மணத்தியாலங்களை உடைய குறைந்த வேலைநாட்கள், மற்றும் புத்தகம், உடைகள், உணவு, போக்குவரத்து, போன்றவற்றுக்கான செலவு, ஆசிரியருக்கான ஊதியம் நிறுத்திவக்கப்படடிருத்தல் போன்ற பலகாரணிகள் செல்வாக்குசெலுத்துகின்றன. பிலிப்பைன்ஸ் போன்ற இந்த பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் சட்டரீதியாக இலவசகல்வியை கொண்டிருந்தாலும் மேற்க் கூறப்பட்டநிலைமைகள் அந்தநாடுகளிலும் காணப்படுகின்றது. மேலும் கிராம பிரதேசங்களில் மாணவர்கழுக்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக இடைநிலைகல்விக்கு செல்லும்போது இன் நிலையானது அதிகமாக காணப்படுகிறது. பல ஏழைக்குடும்பங்கள் அவர்கழுடைய பிள்ளைகழுக்கு கல்வி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கழுடைய பிள்கைகளை குறிப்பாக பெண்களை செல்வம் நிறைந்த உறவினர்கள் அல்லது ஏனையவர்களது வீடுகழுக்கு வீட்டு பணியாயளர்களாக அனுப்புகின்றனர். ஆனால் சிறுவர் தொழிலாளர் என்பது கல்விக்கு மிகப்பெரிய தடையாகும். சிறுவர்கள் யாரெல்லாம் பதட்டமான சூழ்நிலையில் நீண்டநேரம் வேலை செய்கின்றார்களோ அவர்களால் சாதாரணமாக பாடசாலைக்குகூட சமூகமளிக்க முடிவதில்லை. சிறுவர்கள் குறைந்த நேரம் வேலை செய்வது விரும்பத்தக்கது ஏனெனில்

பாடசாலையில் இருந்து நன்மைகளை பெறமுடியும். மேலும் பெரும்பாலான கவ்விப் பாடத்திட்டங்கள் சிறுவர் குடும்பவேலைப் பணியாளர்கழுடைய முறைசார மணத்தியாலங்களிற்கேற்ப்ப இடமளிப்பதற்கு கட்டமைக்கப்படவில்லை.

கல்வியைப் பெறுதல் என்பது ஒரு சிறுவருடைய அடிப்படை உரிமையாகும். அவனுடைய அல்லது அவழுடைய ஒட்டுமொத்த அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வுக்கான தெரிவுகளை கல்வியானது அதிகரிக்கின்றது. அத்தோடு எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையினை கொடுக்கின்றது. மற்றும் நீண்டகால வீட்டுவேலையிலிருந்து பாதுகாப்பாக தப்பிப்பதற்க்கான வாய்ப்பினை வழங்குவதோடு பாடசாலைக்கு ஒழுங்காக செல்லுதலானது சிறுவர்கழுக்கு பாதுகாப்பினை வழங்குவதுடன் இளைஞர் ஆதரவு சமூக செயற்பாடுகள், நண்பர்களை உருவாக்குதல் போன்ற சமூக நன்மைகளையும் வழங்குகின்றது. அத்துடன் பாடசாலைகள் மேலதிகமாக இரண்டு முக்கிய பங்கினை வகிகிகின்றன. முதலாவது பாடசாலை வரவினை கண்காணிப்பதன் ஊடாக ஆசிரியர் சில சிறுவர் வீட்டுவேலையாளர்களை அடையாளம் காண முடிவதுடன் பாலியல துஸ்பிரயோகம் மற்றும் நெருக்கடிகள் தொடர்பான பிரச்சினைகளை கண்காணிக்கமுடியும்.

இரண்டாவது பாடசாலையில் இலவச உணவு வழங்கலானது சிறுவர் தொழிலாளர்களை குறைப்பதற்க்கான வினைத்திறனான ஒன்று என நிருபிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கழுக்கான இலவச மதிய உணவு வழங்கலானது ஒரு வினைத்திறனான முறையாகும். இவ்வாறு மதிய போசனம் வழங்கபடுவதன் காரணமாக பெற்றோரே அவர்கழுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இதனால் ஏழைக்குடும்பங்களது உணவுக்கான செலவும் குறைக்கப்படுகிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் சிறுவர் தொழிலாளர்களை குறைப்பதற்க்கான செயற்திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். பிலிப்பைன்சில் அரச நிதியுடன் மேற்க்கொள்ளப்படும் பன்ராவிட் செயற்திட்டமானது நாளாந்தம் பாடசாலைக்கு சமூகம் அளிக்கும் சிறுவர்கழுக்கு குறிப்பாக வறுமையான குடும்பங்கழுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பணத்தினை வழங்குகின்றது. இதேபோன்ற செயற்திட்டங்கள் இந்தோனேசியாவிலும் மேற்க்கொள்ளப்படுகின்றன.

ஆசிய பசுபிக் நாடுகளில் குறிப்பாக தென்னாசியாவில் கல்விக்கான முதலீடு மிகவும் வருந்தத்க்க அளவில் குறைவாக உள்ளது. பங்களாதேஸ், பாகிஸ்தான், வங்களாதேசம், பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் முறையே 2.6, 2.7, 3.3, வீதம் மட்டுமே தேசிய வருமானத்திலிருந்து கல்விக்காக ஒதுக்கப்படுகிறது. இந்தியா 445 மில்லியன் சிறுவர்களையும், பங்களாதேஸ் 64மில்லியன் சிறுவர்களையும், பாகிஸ்தான் 70மில்லியன் சிறுவர்களையும் கொண்டுள்ளன. உலகில் உள்ள

சிறுவா்களில் 1/3 பங்க சிறுவா்களை இந்த 3 நாடுகமும் கொண்டுள்ளன. உலகிலேயே இந்தியா மற்றும் பாகிஸ்தானிலேயே மிக அதிகமான சிறுவா்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்ற தன்மையானது அதிகளவில் காணப்படுகிறது. பெண்கழுக்ககு எதிராக பரந்தஅளவில் அவா்களை பாகுபடுத்தி பாா்க்கின்ற தன்மையினை குறைத்தல் மற்றும் கல்வியின் கிடைக்ககூடிய தன்மையை அதிகரித்தல் என்பன மிக முக்கியமானதாகும். பெண்கழுடைய கல்விக்காக முதலிடுதல் குறிப்பாக அவா்கழுடைய தனிப்பட்ட அபிவிருத்திக்கு மட்டுமல்ல பொதுவாக பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக வளா்ச்சிக்குஆதரவு வழங்குதல்.

## Box 6 : கல்வியறிவுடைய பெண்களினால் கிடைக்கும் நன்மைகள்

**பெண்கழுடைய கருவளவாக்கம் குறைவடைதல்** : முறைசாா்ந்த கல்வியறிவுடைய பெண்கள் முறைசார கல்வியறிவுடைய பெண்களைவிட தாமதமாக திருமணம் செய்வதுடன் தாமதமாக கா்ப்பமடைகின்றனா்.அத்துடன் அவா்கள் குறைந்த எண்ணிக்கையான சுகாதார ஆரோக்கியமுள்ள பிள்ளைகளை பெற்றெடுக்கின்றனா்.

**சிசு மரண வீதம் மற்றும் சிறுவா் இறப்பு வீதம் குறைவடைதல** : முறைசாா் கல்வி அறிவுடைய பெண்கள் பெரும்பாலும் தேவையான மருத்துவ பராமிரிப்பினை தேடிப்பெறுவதுடன் தமது பிள்ளைகழுக்கு போடவேண்டிய தடுப்பூசிகளினையும் சரியானமுறையில் போட்டுக்கொள்கின்றனா். அத்துடன் சிறுவா்கழுடைய போசாக்கான உணவுதொடா்பில் சிறப்பான தெளிவினை கொண்டுள்ளதுடன் துப்பரவு நடைமுறைகள் தொடா்பில் பூரணவிளக்கத்தை கொண்டுள்ளதுடன் அவற்றை சிறப்பாகவும் நடைமுறைப்படுத்துகின்றனா். இதன்பயனாக அவா்கழுடைய குழந்தைகள் ஆரோக்கியமான குழந்தைகளாக இருப்பதுடன் நீண்ட ஆயுட்காலத்தினையும் கொண்டிருக்கின்றன.

**பிரசவத்தின் போதான இறப்புவீதம் குறைவடைதல்** : கல்விஅறிவுடைய பெண்கள் சுகாதாரப்பராமரிப்பு தொடா்பில் போதுமான அறிவினை கொண்டிருக்கின்ற காரணத்தினால் அவா்கள் தாம் இளவயதில் கருத்தரிப்பதனை குறைவாகவே விரும்புகின்றனா். அத்துடன் அவா்கள் குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகளை பெற்றுக்கொள்ள விரும்புவதுடன் ஒவ்வொரு பிள்ளைக்கும் இடையிலான இடைவெளியினை சரியான முறையில் பேணிவருவதுடன் குழந்தை பிறப்பதற்க்கு முன்பும் குழந்தை பிறந்தபின்பும் குழந்தை பராமரிப்பு தொடா்பில் சரியான அறிவினை கொண்டுள்ளனா்.

**ஏச்.ஐ.வி/ எயிட்ஸ் தொற்றுக்கு எதிரான பாதுகாப்பு :** ஏச்.ஐ.வி/ எயிட்ஸ் நோய்த்தொற்றினால் பெண்கழுக்கு ஏற்ப்படக்கூடிய பாதிப்பினை குறைப்பதற்க்கான மிகச்சிறந்த வினைத்திறனான வழியாக பெண்கழுடைய கல்வி காணப்படுகிறது.

**பெண் தொழிலாளர்களது வகிபங்கு அதிகரித்தல் மற்றும் வருமானம் அதிகரித்தல்** : கல்வியானது பாதுகாப்பான முறையில் அல்லது நேர்வழியில் வருமானம் உழைத்தலை அதிகரித்துள்ளதுடன் தொழில் தருனரது உற்ப்பத்தியினையும் அதிகரித்துள்ளது.

**எதிர்கால அல்லது அடுத்த சந்ததிக்கு உதவுதல்** : தாயினுடைய குறைந்தவருட முறைசார் கல்வியானது விரும்பத்தக்கது ஏனெனில் அவர்கள் அவர்கழுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு நிச்சயமாக அனுப்புவார்கள்.

**Tackling child labour in domestic work. Tamil transilated version.page 19-49**

**செயற்பாடு-A1.1- குழந்தை பராயத்திற்கான பயணம்**

**நோக்கம்-** உங்களுடைய கடந்த காலத்தை நோக்கி மீள பயணித்தலும் சிறுவயது பராயம் தொடர்பான தீர்மானங்களை எடுத்தலும்

**கால இடைவெளி** – தனிநபர் செயற்பாட்டிற்கு 30 நிமிடம்/குழு செயற்பாட்டிற்கு 60 நிமிடம்

**பொருட்கள்**

- தனிப்பட்டவர்களுக்கு- குறிப்பெடுப்பதற்கான பேனா, பேப்பர் இணைக்கப்பட்டுள்ள படிவம்
- குழுச் செயற்பாட்டிற்கு- கலர் பேப்பர் /கலர்அட்டை (இரண்டு விதமான நிறங்கள்)
- 3 கலர் பேப்பர் /கலர் அட்டை (ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட நிற அட்டை)
- அட்டைகளை காட்சிபடுத்துவதற்க்கான சுவர்

**தனிப்பட்டவர்களுக்கான செயல்முறை(சுய வெளிப்பாடு/பிரதிபலிப்பு)**

1. உங்களுக்கு விருப்பமானதும் அமைதியானதும் இடைஞ்சல் அற்றதுமான ஒரு இடத்தை தெரிவு செய்யுங்கள்.
2. உங்களுடைய கண்களை மூடி குழந்தை பராயத்தை ஞாபகப்படுத்திப் பார்க்க முயற்சி செய்யுங்கள்
3. 5 நிமிடங்களின் பின்னர் உங்களுடைய கண்களை திறந்து வழங்கப்பட்ட படிவத்தினைக் கொண்டு உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்களை குறித்துக் கொள்ளுங்கள்.

| உங்களை மகிழ்ச்சிப்படுத்திய விடயம் என்ன? | அதற்கான காரணம் என்ன? |
|---|---|
| | |
| | |
| | |

| உங்களை கவலைக்கு உள்ளாக்கிய விடயம் என்ன? | அதற்கான காரணம் என்ன? |
|---|---|
| | |
| | |
| | |

.

4. மேலே நீங்கள் குறித்துக் கொண்ட விடயங்களில் இருந்து நீங்கள் எவ்வாறான முடிவினை எடுக்கலாம்? அவை கீழே கொடுக்கப்பட்டுள்ள விடயங்களுடன் ஒத்து போகின்றனவா?

**குழுக்களுக்கான செயல்முறை (60 நிமிடம்)**

**படிமுறை 1 - தனிநபர் செயற்பாடு (20 நிமிடம்)**

1. பயிற்ச்சியாளர் ஒரே நிற தாள்கள் 3ஐ ஒவ்வொருவருக்கும் வழங்க வேண்டும். ஆனால் ஒவ்வொருவருக்கும் வேற வேற நிற தாள்களை வழங்க வேண்டும்.

2. பங்குபற்றுனர்கள் தங்களது கண்களை மூடி தங்களது குழந்தை பருவ நினைவுகளை மீட்டிப்பார்க்க முயற்சி செய்ய வேண்டும்.

3. பங்குபற்றுனர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட தாளிலே தாங்கள் நினைவுபடுத்திய விடயத்தை தம் தேவைக்கேற்ப எழுதிக் கொள்ளலாம்.(அதிலே அவர்கள் நபரயோ, நிகழவையோ, பொருளையோ, இடத்தையோ/ செய்பாட்டையோ எழுதலாம்) குறித்த சிவப்பு நிறத்தாளை உடைய பங்குபற்றுனர் தான்˙ நினைவுபடுத்தி(நபர்/ நிகழ்வு/ பொருள்/ இடம்/ செயற்பாடு) எழுதிய விடயம் அவரை மகிழ்ச்சிப்படுத்தியிருப்பின் அது ஏன் தன்னை மகிழ்ச்சிப்படுத்தியது என குறிப்பிட வேண்டும். அதேபோல் நீல நிறத்தாளை உடைய நபர் தான் நினைவுபடுத்திய விடயம் தன்னை கவலைபட வைத்தது என எழுதி இருப்பின் அது ஏன் என குறிப்பிட வேண்டும்.

4. பங்குபற்றுனர்கள் தாங்கள் எழுதிய தாளினை சுவரிலோ அல்லது board ல்லோ மகிழ்ச்சிப்படுத்திய விடயம்/ கவலைக்கு உள்ளாக்கிய விடயம் என இரண்டாக வேறுபடுத்தி ஒட்டி விட வேண்டும்.

**படிமுறை - 2 பொதுவான கலந்துரையாடல்**

5. செயற்பாட்டிலே பங்குபற்றி தங்கழுடைய பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்ட அனைத்து பங்குபற்றுனர்கழுக்கும் நன்றியை தெரிவித்த பின்னர் அவர்கள் எவ்வாறான விடயங்களை எழுதினார்கள் என்பது தொடர்பான கலந்துரையாடலை பயிற்சியாளர் ஆரம்பிக்கவேண்டும். புங்குபற்றுனர்கள் எவ்வாறாக தங்கழுடைய கருத்துக்களை பகிர்ந்தாலும் அவற்றை உரியமுறையில் செவிமடுப்பதோடு அவர்கழுடைய கருத்துக்களிற்க்கு உரியமுக்கியத்துவம் அளித்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்கள் தங்கழுடைய கருத்துக்களையும் அனுபவங்களையும் சுதந்திரமாகவம் சுயமாகவும் பகிர ஊக்கப்படுத்தவேண்டும்.

6. கலந்துரையாடலின் பின்னர் நாம் எவ்வாறான முடிவிற்க்கு வரலாம் என்பது தொடர்பில் அல்லது எவ்வகையான முடிவினை எடுக்கலாம் என்பது தொடர்பில் பங்குபற்றுனர்களிடம் கேட்க்கவேண்டும்.தொடர்ந்து முக்கிய செய்தியிலே சொல்லப்பட்ட விடயங்களை சுருக்கமாகவும் குறித்தும் கூறவேண்டும்.

## முக்கிய செய்தி

- குழந்தை பராயம் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் தருகின்ற காலம்.
- சில சமயங்களில் சிலர் இந்த மகிழ்ச்சியினை தங்களுடைய குழந்தை பராயத்தில் இழந்து விடுகின்றனர்.
- பெரும்பாலான புறச்சுழல் காரணிகள் மற்றும் சூழ்நிலைகளே எமக்கு கிடைக்கப்பெற்ற இந்த குழந்தை பராயத்திற்கு காரணமாகின்றன.
- பொதுவாக சிறுவர்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைக்காக பெரியவர்களில் தங்கி வாழ்பவர்கள் இருப்பினும் சில சிறுவர்கள் இத்தகைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய தங்களை நம்பி இருக்க வேண்டியுள்ளது.

**பயிற்ச்சியாளருக்கான குறிப்புக்கள்**

- இந்த செயற்பாடு பயிற்ச்சியின் தொடக்கத்தில் ice breake செயற்பாடாகவும் செய்ய முடியும்.
- பங்குபற்றுனர்கள் அனைவரும் தங்களது நினைவுகளை ஓவியமாக வரைய விரும்பின் அதனையும் அவாகள் செய்ய முடியும்.
- பங்குபற்றுனர்கள் அனைவரும் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் அவர்களது நினைவுகளை பகிர்ந்து கொள்ளவும் ஊக்கப்படுத்த வேண்டும். பங்குபற்றுனர்கள் தங்களது நினைவுகளை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்துமிடத்து அவர்களது உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். அத்துடன் கூச்சசுபாவம் மற்றும் தயக்கம் காரணமாக கருத்துக்களை பகிர தயங்கும் பங்குபற்றுனர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு A1.2**

**சிறுவர் எனப்படுவர் யார்? சிறுவர்களுக்கு உரிமைகள் இருக்கின்றனவா?**

**நோக்கம்** -

- சிறுவர்கள் என்றால் யார்? பொதுவான ஒரு முடிவுக்கு/கருத்திற்கு வருதல் (கருத்ததை முன்வைத்தல்)
- சிறுவர் உரிமைகள் தொடர்பில் அறிந்து கொள்ளுதல்

**நேரம்** - 120 நிமிடம்

**கையேடு**

- h1.3 சிறுவர் உரிமைகள் : சிறுவர் மற்றும் இளவயது வீட்டுப்பணி புரிவோர் தொடர்பான சர்வதேச தேசிய சட்டங்கள்

**பொருட்கள்**

- ஒவ்வொரு குழுவிற்கும் பிலிப்சாட் பேப்பர் மற்றும் மார்கர்கள்
- பயிற்ச்சியாளருக்கான flip chart board

**செயல்முறை**

குழுவேலை மற்றும் கலந்துரையாடல்

**படிமுறை 1** குழுவேலை 20 நிமிடம்

1. பயிற்ச்சியாளர் செயற்பாட்டின் நோக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தல்
2. பங்குபற்றுனர்களை 5-8 வரையான குழுக்களாக பிரித்தல்.
3. ஒவ்வொரு குழுவும் தங்களது குழுவில் ஒருவரை மதிப்பீட்டாளராகவும் இன்னொருவரை அறிக்கை சமர்பிப்பவராகவும் நியமித்தல்.
4. அனைத்து குழுகளிலும் கீழ்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டும்.
   - சிறுவர்களது பண்புகளை பட்டியலிடல்
   - இப்பண்புகளானவை அனைத்து சிறுவர்களுக்கும் பொருந்தும் என்பது தொடர்பில் ஒவ்வொருவருடைய நிலைப்பாட்டையும் அறியவும் கருத்துக்களை பெறவும் (நாட்டில் உங்களுடைய சமூகத்தில் உங்களுடைய பிரதேசத்தில்)
   - சிறுவர் என்றால் என்ன யார் என்பது தொடர்பில் ஒரு பொதுவான வரவிலக்கணத்தை உருவாக்குதல்.

**படிமுறை 2 அறிக்கையிடலும் பொதுவான கலந்துரையாடலும் - 30நிமிடம்**

5. அறிக்கை சமர்பிப்பவர்கள் தங்களுடைய குழு சார்பில் சிறுவர் தொடர்பான பொதுவான வரவிலக்கணத்தை சமர்பித்தல். இவை சுவரிலோ அல்லது board ல்லோ காட்சியளிக்கப்பட வேணடும்

6. பயிற்றுவிப்பாளர் சிறுவர் உரிமைகள் தொடர்பில் ஜக்கிய நாடுகள் சபையினது வரைவிலக்கணத்தையும் சர்வேதேச தொழிலாளர் நிறுவனத்தினது பிரிவு3 இல 138 மற்றும் 182 தொடர்பாக தெளிவுபடுத்துவதோடு மேற்குறித்த வரவிலக்கணங்களோடு குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரவிலக்கணத்தை ஒப்பிட்டு இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை ஆராய்தல். அத்துடன் பங்குபற்றுனர் அனைவரும் ஜக்கிய நாடுகள் சபையில் மற்றும் சர்வேதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் சிறுவர் தொடர்பான வரவிலக்கணத்தை ஒருமித்து ஏற்றுக்கொள்கின்றனரா என ஆராய்தல்.

**படிமுறை 3 குழுவேலை (30நிமிடம்)**

7. பழைய குழுக்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து தங்களுக்கான மதிப்பீட்டாளரையும அறிக்கை சமர்பிப்பவரையும் நியமித்தக் கொள்ளல்.

8. கலந்துரையாடலை ஆரம்பிக்கும் முன்னர் குழுவிலுள்ள மதிப்பீட்டாளர் ஐக்கிய நாடுகள் சபையின் மற்றும் சர்வேதேச தொழிலாளர் ஸ்தாபனத்தால் கூறப்பட்ட சிறுவருக்கான வரவிலக்கணமாக 18 வயதிற்கு குறைந்த அனைவரும் சிறுவர்களே என்ற வரவிலக்கணத்தை வாசிக்க வேண்டும்.

9. அனைத்து குழுக்களிலும் கீழ்வரும் விடயங்கள் கலந்துரையாடபட்டு பின்வரும் உடன்பாடுகள் எடுக்கப்பட வேண்டும்.
   - மனித உரிமை என்றால் என்ன? சில உதாரணங்கள் குறிப்பிடுக

   - சிறுவர்களுக்கு உரிமைகள் உள்ளனவா? ஏன? ஆம் எனின் சிறுவர்களுக்கு உள்ள உரிமைகளை பட்டியலிடவும். இல்லை எனின் சிறுவர்களுக்கு ஏன் உரிமைகள் இல்லை என்பதற்கான காரணங்களை பட்டியலிடவும்.

## படிமுறை - 4 பொதுவான கலந்துரையாடல் - 40நிமிடம்

10. குழுக்கள் தங்களது பூரணமான அறிக்கையை சமர்பிப்பித்தல்.(ஆக கூடியது 5 நிமிடம்)

11. பயிற்ச்சியாளர் முக்கிய விடயங்கள், பொதுவான யோசனைகள், முக்கிய கருத்துக்கள் என்பவற்றை குறித்து வைத்து கொள்ள வேண்டும். அத்துடன் பங்குபற்றுனர்கள் அனைவரும் கலந்துரையாடலில் பங்குபற்றி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.குறிப்பாக வேறுபட்ட கருத்துக்களை உடையவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மனித உரிமை தொடர்பில் மேலதிக விளக்கம் பங்குபற்றுனர்களால் கேட்கப்படுமிடத்து 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் பிரகடனப்படுத்தப்பட்டு அனைத்துலக நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமை பிரகடனப்படுத்தை மேற்கோள் காட்டி தெளிவுபடுத்தலாம். ஐக்கிய நாடுகள் சபையில் சிறுவர் உரிமை மாநாடு மேற்குறித்த முன்மொழிவை தழுவியதாக உள்ளது.
12. கலந்துரையாடலின் முதலில் பங்குபற்றுனர்கள் அனைவரும் கொடுக்கப்பட்ட குறித்த செய்தியை புரிந்து கொண்டார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

## முக்கிய குறிப்பு

- சிறுவர்கள் என்ற வகையில் அடங்குபவர்கள் (ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை சாசனத்தின் பிரகாரம் 18 வயதிற்கு குறைந்தவர்கள்) தங்கள் சொந்த உரிமைகளை ெந்த நாட்டு குடிமக்களுக்கு நிகராக பெற்றுக்கொள்ள உரித்துடையவர்கள் இருப்பினும் இவ்வாறு 19ம் 20ம் நூற்றாண்டில் மட்டுமே குழந்தைகளின் உரிமை தொடர்பில் அக்கறை செலுத்தி மதிக்க தொடங்கினர். இதற்கு முன்னரான காலப்பகுதியில் சிறுவர் உரிமை தொடர்பில் பெரிதளவான

அக்கறை காட்டப்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதியில் பெற்றோரும் பெரியவர்களும் சிறுவர்ளை ஒரு சொத்து(பொருள்) என்ற கண்ணோட்டத்திலேயே பார்த்தனர். அத்துடன் சிறியவர்கள் பெரியவர்களது கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது.

- இன்று உலகின் பெரும்பாலான பகுதிகளில சிறுவர் உரிமைக்கான அங்கிகாரம் கிடைத்துள்ளதோடு சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதும் அவற்றை மேம்படுத்துவதும் சமூகத்தின் கடமை என்பதனை உலகளாவிய ரீதியில் (ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை சாசனம் மூலம் அங்கிகாரமளிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதை காணக்கூடியதாக உள்ளது. இச் சிறுவர் உரிமைகள் முலம் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் இருந்தும் துஸ்பிரயோகங்களிலிருந்தும் சுரணடலகளிலிருந்தும் பாதுகாப்பை பெற முடிவதுடன் சிறுவர்கள் கல்வி கற்பதற்கான உரிமை வழங்குதல் ஆகிய இரண்டுமே மிக முக்கிய சிறுவர் உரிமைகளாக காணப்படுகின்றன.எனினும் குழந்தை தொழிலாளர்களுக்கு இவ் உரிமைகள் மீறப்படுவதாகவே உள்ளது.
- உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வேதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் கருத்துபடி **18 வயதிற்கிற்குட்பட்ட எவரும் சிறுவராக கருதப்படுவர்**. பெரும்பாலான நாடுகளின் சட்டதிட்டங்களின் படி ஒருநபர் முதிர்ச்சியடைந்து பெரியவராக வரும்போது அவரது சிறுவர் என்ற அந்தஸ்து அதிகாரபூர்வமாக முடிவுறுத்தப்படுகின்றது. பெரும்பாலான நாடுகளின் தொழிலாளர் சட்டங்களின்படி தொழிலாளரது ஆகக்குறைந்த வயது எல்லை 18 ஆக காணப்படுகின்றது. இருப்பினும் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியம் உட்பட சில நாடுகளில் 18 வயதிற்கிற்கு குறைந்த சிறுவர்களும் வேலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் இவ்வாறு வேலை செயபவர்கள் பெரும்பாலான சிறார்கள் 14/15 வயதினை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். (H1.1 ஐ பார்க்க)
- பெரும்பாலான நாடுகளில் மோசமான சூழ்நிலைகளில் குழந்தை தொழிலாளர்களாக உள்ள சிறுவர்களை பாதுகாக்க கடுமையான கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன. இவை சிறுவர்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஆரோக்கியமாக வாழ்க்கை வாழ்வதற்காக செயற்படுத்தப்படுகின்றது. அத்துடன் கீழ்வரும் மிகவும் முக்கியமான இரண்டு விடயங்கள் நினைவில் கொள்ளப்பட வேண்டும்

1. அனுமதிக்கப்பட்ட வயதிற்கிற்கும் குறைந்த வயதில் சிறுவர்கள் வேலை செய்தல் கூடாது. ஏனெனில் அவர்கள் குழந்தை தொழிலாளர்கள் என்னும் நிலையிலேயே காணப்படுகின்றனர். எனவே அவர்கள் குழந்தை தொழிலாளர்கள் என்னும் நிலையில் இருப்பதை உடனடியாக இல்லாது செய்ய வேண்டும். எனினும் சாதாரண வேலைகளில் ஈடுபடும் சிறார்கள் அவ்வேலையில் ஈடுபடுவதால் அவர்களுடைய பாடசாலை கற்றல் செயற்பாடுகள், திறன்கள்,

ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு என்பன பாதிக்கப்படாது காணப்படுமிடத்து அவர்களை சிறிய வேலைகளில் ஈடுபட அனுமதிக்க முடியும்.

2. மேறகூறியவாறு ` சாதாரண வேலைகளை செய்ய சிறார்களை சட்டரீதியாக அனுமதிக்கும் போது(14 15-17) அவர்கள் குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்படும் மோசமான நிலைமைகளில் இருந்து `பாதுகாக்கப்பட வேண்டியது கட்டாயமானது.

- பெரும்பாலான நாடுகள் வேலைதளங்களில் சிறுவர்கள் மற்றும் இளஞைர்களை பாதுகாக்கும் பொருட்டு சட்டங்களை இயற்றி உள்ளன. இதிலே சிறுவர் தொழிலாளர்களை தடை செய்வதற்கான சட்டங்களும் உள்ளடங்கும்.எனினும் துரதிஸ்டவசமாக இவை அனைத்தும் சட்ட அளவிலேயே காணப்படுகின்றன.

- இவை அனைத்தும் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்ற பாரம்பரியங்கள் மரபுகள் மற்றும் கலாச்சார நடத்தைக் கோலங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு கூடியளவான முக்கியத்தை வழங்குவதோடு பெற்றோர் மற்றும் பிள்ளைகளது உரிமைகள். பெற்றோரினதும் சிறுவாரினதும் உரிமைகள் மற்றும் பெற்றோர் சிறுவர் தொடர்பில் சிறுவருக்கும் சிறுவர் தொடர்பில் பெற்றோருக்கும் உள்ள பொறுப்புக்கள் தொடர்பாக நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் பாரம்பரியங்கள் மரபுகள் மற்றும் கலாச்சார நடத்தைக் கோலங்களுக்கு முக்கியத்துவம் அளித்து அவைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் தொடர்பில `தாமே அனைத்து தீர்மானங்களையும் எடுக்கமுடியும் என நம்புகின்றனர். அத்துடன் பிள்ளைகளினது கூடிய ஆர்வத்தை வைத்து அவர்கள் இத்தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். சிலசமயம் பெற்றோர்கள் பொருளாதார காரணங்களுக்காக பிள்ளைகளை வேலைக்கு அனுப்புதல் என்ற முடிவை எடுக்கின்றனர். இது அவர்களுக்கு சிறப்பான வாழ்க்கையை கொடுக்கும் என பெற்றோர் எண்ணுகின்றனர். அவர்களுடைய இந்த செயற்பாட்டால் பிள்ளைகளினுடைய கல்வி பாதிக்கப்படுவதோடு பிள்ளைக்கு துஸ்பிரயோகம் மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாப்பு கிடைக்காது போய்விடும்

**பயிற்ச்சியாளருக்கான குறிப்புகள்**

- சிறுவர் உரிமை தொடர்பான பிரச்சனைகள் எப்பொழுதும் சிக்கல் நிறைந்தவையாகவே காணப்படும் இக்கலந்துரையாடலானது கலாச்சாரமான விவாதமாக கூட அமையக் கூடும். எனவே பயிற்ச்சியாளர்கள் அதற்கேற்றாற் போல் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1. தங்களுடைய பிள்ளைகள் தொடர்பான அனைத்து முடிவுகளும் தங்களாலேயே எடுக்கப்பட வேண்டும்.

2. பிள்ளைகளினுடைய ஆர்வத்தின் அடிப்படையிலேயே சிறந்த முடிவுகள் எடுக்க முடியும்.

- பின்வரும் விடயமானது முக்கியப் படுத்தி கூறவேண்டிய விடயமாக காணபப்டுகின்றது. சிறுவர் பெற்றோர் ஆகிய இரு தரப்பினருக்கும் உரிமைகள் காணபப்டுவதோடு பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர்க்கும் பெற்றோர்கள் தொடர்பில் பிள்ளைகளுக்கும் கடமைகளும் காணபப்டுகின்றன. சில சமயம் பெற்றோர் பொருளாதாரம் காரணமாக பிள்ளைகளை வேறு நபர்களிடம் அனுப்பத் தீர்மானிக்கலாம். இதன்மூலம் பிள்ளைகளுக்கு சிறப்பான வாழ்க்கை கிடைக்குமென பெற்றோர் எண்ணுகின்றனர். அவர்களுடைய இந்த எண்ணப்பாட்டினால் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புதல் என்ற தீர்மானத்தால் பிள்ளைகளினுடைய கல்வி உரிமை பாதிக்கப்படுவதோடு பிள்ளைக்கு துஸ்பிரயோகம் மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாப்பு கிடைக்காது போகலாம்.

- சிறுவர் தொழிலாளர்கள் தங்களுடைய அனுபவங்ளை பகிர்ந்து கொள்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் உரிமை அடிப்படையிலான அணுகுமுறையினை பற்றி பங்குபற்றுனர்கள் அறிந்து கொள்ள முடியும். சிறுவர்களை அவர்களுடைய சிறுபராயத்திலேயே வீட்டுப்பணிக்கு அனுப்புவது என பெற்றோர் எடுத்த முடிவு உங்களுடைய விருப்பத்தின் பெயரில் எடுக்கப்பட்ட முடிவா? உங்களால் அவர்களது இந்த முடிவை மறுக்க முடியுமா? இதைப் பற்றி ஏதாவது கூறமுடியுமா? உங்களுடைய குடும்பத்தை பிரிந்து வேறு வீட்டில் வேலைக்கு செல்லும்போது உங்களுடைய மனநிலை எவ்வாறு இருந்தது? உங்களுடைய வேலைச்சூழல் மற்றும் வாழ்கைச்சூழல் எப்படியானது அங்கே உங்களுடைய கல்வியை தொடரமுடியுமா? அங்கே நீங்கள் கல்வியை தொடருகிறீர்கள் எனின் உங்களுடைய வேலை மற்றும் கல்வியை எவ்வாறு தொடரமுடிகிறது?

- பங்கேற்பாளர்கள் அனைவரும் உணர்வுபூர்வமானவர்களாக இருப்பதால் எப்போதும் அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பங்குபற்றுனர்கள் தங்களுடைய கடந்தகால விடயங்களை பற்றி பேச தயக்கம் காட்டக் கூடும் அத்துடன் தங்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலர் மீது அவர்கள் குற்றம் சுமத்த விரும்பாது போகலாம் தங்களுடைய கடந்தகாலத்தை நினைவுபடுத்துவது வேதனை

மிகுந்ததாக இருக்கலாம் அல்லது தங்களுடைய குடும்ப வறுமை தொடர்பில் பகிர அவர்கள் கூச்சப்படலாம் எனவே அவர்களுடைய திறன்களை வெளிக்கொணர அவர்களை ஊக்கப்படுத்துங்கள். அத்துடன் அவர்கள் அமைதியாக இருந்து தங்களுடைய கடந்தகாலத்தை நினைவுபடுத்த உரிமை உண்டு எனவே அவர்களுடைய அந்த உரிமைக்கு மதிப்பளியுங்கள்.

**செயற்பாடு A1.3 வீட்டு வேலைதொழிலில் சிறுவர் தொழிலாளர்கள் என்றால் என்ன?**

**நோக்கம் - வீட்டுப்பணியும் வீட்டுப்பணியில் சிறுவர் தொழிலாளர்களும் தொழிலாளர்கள் என்பது தொடர்பில் அறிந்து கொள்ளல்**

**நேரம் - 210 நிமிடம்**

**கையேடு**

- **H1.1**- சிறுவர் தொழிலாளர் எனப்படுபவர் யார்?
- **H1.2**- வீட்டுப்பணிகளில் குழந்தை தொழிலாளர் என்றால் என்ன?

**பொருட்களும் தயார்ப்படுத்தலும்**

- **படிமுறை 1** - அறிமுகத்தை power point slide மூலம் காட்சிப்படுத்தவும். இல்லாதவிடத்து முக்கிய விடயங்களை flip chart இல் எழுதிக் காட்டவும்.
- **படிமுறை 2** - கலர் அட்டைகள் அல்லது A4 தாளின் அரைத் தாள்

**செயல்முறை**

அறிமுகம் மற்றும் செயற்பாட்டு அமர்வு குழுவேலை பொதுவான கலந்துரையாடல்.

**படிமுறை 1 - அறிமுகமும் செயற்பாட்டுடனான கலந்துரையாடலும்**

1. பயிற்சியாளர் பயிற்சியின் நோக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தல். முன்னைய கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டதற்கிணங்க - சிறுவர் எனப்படுபவர்

யார் எனபது தொடர்பிலும் (18 வயதிற்கு குறைந்த அனைவரும் சிறுவர்கள்) சிறுவாகளது உரிமைகள் தொடர்பிலும் சிறுவர்களுக்கான அடிப்படைட் உரிமைகள் என்பதன் கீழ் சிறுவர்கள் கல்வி கற்பதற்கான உரிமை மற்றும் பொருளாதார ரீதியாக சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாப்பை பெறுவதற்கான உரிமை தொடர்பில் குறிப்பிட்டு கூறுதல். இவை யாவும் ஜக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை தொடர்பான சமவாயத்திலும் சர்வேதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் உடன்படிக்கையிலும் இடம்பெற்றுள்ளன. (தேவை ஏற்படின் உடன்படிக்கை தொடர்பாகவும் அதன் முக்கியம் தொடர்பாகவும் நினைவுபடுத்தலாம்.)

2. பயிற்சியாளர் செயலமர்வினை ஆரமபிப்பதன் ஊடாக சிறுவர் தொழிலாளர் என்பது தொடர்பில் பங்குபற்றுனர்கள் புரிந்து கொண்டது என்ன என்பது தொடர்பில் வினாவுவர் பங்குபற்றுனர் தங்களது எண்ணங்களை பகிரலாம். உதாரணங்களை கூறவும். கேள்விளை எழுப்பவும், விளக்கங்களை ஆராயவும் தங்களுடைய நிலைகளில் இருந்தவாறே ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அனைத்திற்கும் மேலாக அவர்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வேண்டப்படுகின்றார்கள். குறித்த கலந்துரையாடலின் முக்கிய குறிப்புக்களை தாளிலோ அல்லது board ல்லோ எழுதுவதன் மூலம் குறித்த கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட சிறுவர் தொழிலாளர் தொடர்பான விடயங்கள் குறித்து கொள்ள வேண்டும். பங்குபற்றுனர்களுடைய கருத்துக்களுக்கும் அவர்களுடைய பங்களிப்பிற்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக அது தொடர்பான slide/flip chart ஜ காட்சிப்படுத்தவும்..

**முக்கிய செய்திகள்- சிறுவர் தொழிலாளர்**

- பல நாடுகளில் சிறுவர்கள் பணத்திற்காக பகுதி நேரமாகவும் முழு நேரமாகவும் வேலை செய்கின்றார்கள். குறிப்பாக பண்ணைகள், சந்தைகள், தொழிற்சாலைகள் ,கடைகள் ஏனையவர்களது வீடுகள் ,வீதியோர வியாபாரம், பூக்கள் மற்றும் இனிப்புக்களை விற்பனை செய்யும் இடங்கள், போக்குவரத்து சேவைகள், குப்பைகளை சேகரித்தல் என்பனவற்றில் வேலை செய்கின்றனர். அத்துடன் அவர்கள் தங்களுடைய வீடுகளிலும் ' தனித்தனியாகவும் குடும்ப உறுப்பினர்களுடனும் இணைந்தும் பொருட்களை தயாரிக்கும் வேலைகளிலும் ஈடுபடுகின்றனர் (காலணிகள் வளையல்கள் இனிப்பு பொருட்கள்) இதன்மூலம் கிடைக்கின்ற பணமானது அவர்களது பெற்றோருக்கு அவர்களது பாதுகாவலருக்கு வழங்கப்படுகிறது.

- சர்வேதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் கருத்தின்படி(கைநூால H1.3ஜ பார்க்க) சிறுவர்கள் செய்கினற வேலைகளின் தன்மைகளைக் கொண்டே அவர்கள் சிறுவர் தொழிலாளர்கள் என அழைக்கப்படுகின்றனர். அதனபடி பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.

1) சிறுவர்களது வயது
2) வேலையின் தன்மையும் வேலை நேரமும்(வேலை மணித்தியாலமும்)
3) அவர்கள் செயலாற்றும் சூழ்நிலை. என்றவாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

- குழந்தைத் தொழிலாளர்களாக வேலை செய்யும் சிறுவர்கள் பின்வரும் விடயங்களைச் செய்தல் கூடாது ஏனெனில்

1. அவர்கள் மிகவும் சிறியவர்களாக உள்ளமையினால் இது அவர்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம் அல்லது ஆபத்தானதாக இருக்கலாம்.

2. இவ் வேலையானது சிறுபிள்ளைகளுடைய குழந்தைப் பராயத்தை இல்லாது செய்வதோடு அவர்களுடைய ஆற்றல் மற்றும் திறன் என்பவற்றை மழுங்கடிப்பதோடு அவர்களுடைய உடல் மற்றும் மன வளர்ச்சிக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும்.
3. அத்துடன் இதனால் அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுவதோடு அவர்கள் பாடசாலை செல்வதற்கான வாய்ப்பினை இல்லாது செய்துவிடும். இதனால் அவர்கள் குறிப்பிட்ட வயதிற்கு முன்னரே பாடசாலையில் இருந்து இடைவிலக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே அவர்களுக்கு அதிகளவிலான வேலை இருக்கும் சமயத்தில் அவர்களுடைய பாடசாலை வருகைகைய ஒப்பிட்டுப் பார்த்தல் அவசியம்.

3. பங்குபற்றுனர் அனைவரும் சிறுவர் தொழிலாளர் என்ற எண்ணக்கரு தொடர்பில் போதுமான விளக்கத்தினைப் பெற்றுள்ளனர் என பயிற்சியாளர்களுக்கு பூரண நம்பிக்கை இருக்குமாயின் வேலைக்கு செல்வதற்கான மிகக் குறைந்த வயதெல்லை என்ன என்பது தொடர்பில் விளக்கமளிக்கவும். (கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புச் செய்தியைப் பார்க்கவும்). உங்களுடைய நாட்டு சட்டதிட்டங்களின்படி வேலைக்கு செல்வதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை என்ன? இது தொடர்பில் யாராவது அறிந்திருக்கிறீர்களா? என பயிற்சியாளர் பங்குபற்றுனரிடம் கேட்கலாம். அவர்களுடைய கருத்துக்களை அல்லது அவர்களுடைய பங்களிப்பை ர்1.1ல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கவும்.

**முக்கிய குறிப்புக்கள் - வேலைக்கான ஆகக் குறைந்த வயது**

- வேலைக்கான குறைந்த பட்ச வயதானது பெரும்பாலான இடங்களில் (பெரும்பாலும் 18) வேறுபட்டே காணப்படுகின்றது, பெரும்பாலும் வேலைக்கான குறைந்தபட்ச வயது 18 ஆகக் காணப்பட்டாலும் சில இடங்களில் வேலைக்கான வயது 12- 18 வரையும் காணப்படுகின்றது. சில நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் வேலைக்கான குறைந்த பட்ச வயது சட்ட ரீதியானதாகக் காணப்படவில்லை. எனவே அங்கே சிறுவர்கள் 12 வயது முதலே வேலை செய்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

- சர்வதேச தொழிலாளர் ஸ்தானத்தின் 138வது சரத்தின் வேலைக்கான ஆகக்குறைந்த வயது நிர்ணய தீர்மானத்திற்கு ஆசிய பசுபிக்கைச்சேர்ந்த 23 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன. இந்த ஒப்புதலானது எவ்வாறு காணப்படுகின்றது எனில் தேசிய அரசியல் சட்ட விதிக்கமைவாகவே விதிகள் அமையப்பெற்றிருக்க வேண்டும். அத்துடன் வேலைக்கான ஆகக்குறைந்த வயதெல்லையானது கட்டாயக் கல்விக்கான வயதெல்லையைவிட குறைவாக இருத்தல் கூடாது, மற்றும் எவ்வாறாயினும் ஆகக்குறைந்த வேலைக்கான வயதெல்லை 15யை விட குறைவாக இருத்தல் கூடாது என்பதாகும் ,(ஆக்கம் 2) அத்துடன் அனைத்து வகையான வேலைகளுக்கும் ஆட்சேர்க்கும்போது,∴ அனுமதி அளிக்கும்போது குறித்தவேலையில்∴ வேலைச்சூழலில் அவர்களுடைய உடல்நலம், திறன், சுகாதாரப் பாதிப்பு ஏற்படும் எனில் அத்தகைய வேலைக்கான ஆகக்குறைந்த வயதெல்லை 18யை விட குறைவாக இருத்தல் கூடாது. (ஆக்கம் 3)

4. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் சரத்து 182ன் 24 குழந்தை தொழிலாளர்களது மோசமான நிலைகள் தொடர்பில் பயிற்சியாளர் விளக்கமளித்தல் வேண்டும்.

**முக்கிய செய்திகள் :- சிறுவர் தொழிலாளர்களது மோசமான நிலைமைகள்**

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் 3ம் சரத்தின் 182 வது பிரிவு சிறுவர் தொழிலாளர்களது மோசமான நிலை தொடர்பில் பின்வருமாறு வரையறை செய்கின்றது.

- சிறுவர்களை அடிமைப்படுத்தி வைத்திருத்தல், சிறுவர்களைக் கடத்தி விற்பனை செய்தல், சிறுவர்களைக் கட்டாயப்படுத்தி வேலைக்குப் பணித்தல், கட்டாயப்படுத்தி சிறுவர்களை பாலியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தல் என்பவற்றோடு ஆயுத மோதலுக்காக சிறுவர்களைக் கட்டாயப்படுத்தி ஆட்சேர்ப்பு செய்வதோடு அவர்களை ஆயுதமோதலுக்குப் பயன்படுத்துதல் என்பன சிறுவர் தொழிலாளர்களது மோசமான நிலைகள் என்பதற்கு குறிப்பிடத்தக்கது.

- சிறுவர்களை விபச்சார நோக்கத்திற்கு பயன்படுத்துதல், விபச்சார தேவைகளுக்கு சிறுவர்களை வழங்குதல், ஆபாசப் படங்களைத் தயாரிக்க சிறுவர்களைப் பயன்படுத்தல் மற்றும் ஆபாசப் படங்களில் ஈடுபடுத்தல்
- சட்ட விரோதநடவடிக்கைகளுக்கு குழந்தைகளை ஈடுபட வைத்தல் குறிப்பாக சர்வதேச சட்டங்களின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட வகையான போதைப் பொருட்களை பரிமாற்றம் செய்வதற்றும் சிறுவர்களைப் பயன்படுத்தல்.
- குறித்த வேலைச் சூழலில் சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்பு ஏற்படக் கூடியதும் அவர்களுடைய திறன்களை மழுங்கடிக்கச் செய்யக்கூடியதும் அவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான வேலைச்சூழல்.

5. பங்குபற்றுனர் அனைவரும் சிறுவர் தொழிலாளர் என்ற எண்ணக்கருபற்றியும் வேலை செய்வதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை மற்றும் சிறுவர் தொழிலாளர்களது மோசமான சூழ்நிலைகள் என்ற எண்ணக்கருபற்றியும் போதியளவிலான விளக்கத்தினைப் பெற்றுள்ளனர் என்பதனை பயிற்சியாளர் உறுதிசெய்து கொள்ள வேண்டும். பயிற்சியாளர் கலந்துரையாடலை நெறிப்படுத்தும்போது பங்குபற்றுனர்களது பரந்துபட்ட வகையிலான கருத்துப்பரிமாற்றம் மற்றும் புதியவிதமான கருத்துக்களை ஊக்குவிப்பதோடு பங்குபற்றுனர் அனைவரும் கீழே கொடுக்கப்பட்டுள்ள முக்கிய செய்திகள் தொடர்பில் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளனர் என்பதை உறுதி செய்ததன் பின்னர் அடுத்த கட்டமாக குழுவேலைக்கு அவர்களைத் தயார்ப்படுத்தல் வேண்டும்.

**முக்கிய செய்தி:- வீட்டுப்பணிகளில் சிறுவர் தொழிலாளர்கள்**

- சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் உறுப்புரை 189ன் பிரகாரம் வீட்டுப்பணி.·. வீட்டுவேலை என்பதனால் கருதப்படுவது என்னவெனில் வீடுகளில் செய்யப்படுகின்ற வேலை அல்லது வீடுவீடாகச் செய்யப்படும் வேலை என்பதாகும். அத்துடன் வீட்டு வேலைப்பணியாளர் என்பதனால் கருதப்படுவது ஒருவர் தொழிலாளர் என்ற எண்ணக்கருவின்கீழ் வீடுகளில் வீட்டுப்பணி மேற்கொள்ளுதலாகும்.
- சிறுவர் வீட்டுவேலை – வீட்டு வேலைகளில் சிறுவர் என்ற பொதுவான கருத்தின்மூலம் சொல்லப்படுவது யாதெனில் ஒரு வீட்டில் சிறுவர்கள் வீட்டு எஜமானர்களுக்காக வேலை செய்தல் என்பதாகும். 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் யாரெல்லாம் இந்த வேலையைச் செய்கின்றார்களோ அவர்களே குழந்தை வீட்டு வேலைப் பணியாளர். சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்படாத சூழ்நிலைகளிலும் சிறுவர்கள் வீட்டு வேலைப் பணியாளர்களாகப் பணிபுரிகின்றனர்.

- சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட சூழ்நிலைகள் என்பதன்கீழ்

a) வீட்டு வேலை செய்யும் சிறுவர்களது சட்டரீதியான வேலைக்கான ஆகக் குறைந்த வயது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

b) சிறுவர்கள் பணிபுரியும் வேலைச்சூழலில் அவர்களுடைய உடலுக்கோ அல்லது உளத்திற்கோ அல்லது அவருடைய அன்றாட நடத்தைக்கோ எந்தவிதமான பாதிப்பினையும், எந்தவொரு ஆபத்தினையும் விளைவிக்காதவாறு இருத்தல் வேண்டும்.

- சட்டத்தால் அனுமதிக்கப்படாத சூழ்நிலைகளில் - சிறுவர் வீட்டு வேலைப் பணியாளர் என்பதன் கீழ்

a) வேலைச் சூழல் ஆபத்து நிறைந்ததாகவும் அவர்களுடைய உடல், உள நலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் காணப்படும்.

b) வீட்டு வேலைகளானவை ஆகக் குறைந்த வேலைக்கான குறைந்த பட்ச வயதினைவிட குறைந்த வயதை உடைய சிறார்களால் மேற்கொள்ளப்படும்.

c) அவர்களுடைய கல்விச் செயற்பாடுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படும்.

d) ஆபத்தான இடமாகவும் அடிமைத்தனமாக நடத்தப்படுகின்ற நிலையை உடைய சூழலாகவும் காணப்படும்.

- மோசமான சூழ்நிலைகளில் தொழிலாளர்களாக உள்ள வீட்டுப்பணி சிறுவர்கள், வீட்டு வேலைகளில் அமர்த்துவதற்காக கடத்தப்படுகின்ற சிறுவர்கள், அடிமைத்தனமான முறையில்.∴. அடக்கு முறையில் கீழ் அல்லது அடிமைத்தனத்தால் பணிக்கு அமர்த்தப்படுகின்ற சிறுவர்கள், பாலியல் ரீதியான துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டும் சுரண்டலுக்கு உள்ளாகின்ற சிறுவர்கள், ஆபத்தான மற்றும் அபாயகரமான சூழ்நிலைகளில் வேலைக்கு அமர்த்தப்படுகின்ற சிறுவர்கள் மேற்கூறிய அனைத்து மோசமான சூழ்நிலைகளிலும் சிறுவர்களை வீட்டுப்பணிக்கு அமர்த்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளமையினால் இவ்வாறான சூழ்நிலைகளில் உள்ள சிறுவர்களை அங்கிருந்து வெளியே கொண்டுவருவதற்கு அதிகளவிலான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

**படிநிலை- 2 – குழு வேலை- 40 நிமிடம்**

6. பங்குபற்றுனர்களை 5-8 பேர் கொண்ட குழுக்களாக பிரித்தல். ஓவ்வொரு குழுவிற்கும் ஒரே நிறத்தை உடைய 8 தாள்களை வழங்குதல்.

7. ஒவ்வொரு குழுவும் தங்களுடைய குழுவிற்கு ஒருவரை மதிப்பீட்டாளராகவும் இன்னொருவரை அறிக்கையிடுபவராகவும் நியமித்தல்.

8. குழுக்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் செய்ய வேண்டும்.

a) சிறுவர் தொழிலாளர்கள் உருவாகுவதற்கான 4 பிரதான காரணிகள் அவற்றை ஒரு வசனமாகவோ அல்லது ஒரு சொல்லாகவோ வழங்கப்படட நிறத்தாளிலே ஒரு தாளில் ஒன்று என்றவாறு அறிக்கையிடுபவரால் எழுதப்பட வேண்டும்.

b) சிறுவர்கள் தொழிலாளர்களாக ஆக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய 4 விளைவுகள் ஒவ்வொன்றினையும் ஒரு வசனமாகவோ ஒரு சொல்லாகவோ ஒவ்வொரு தாள்களில் எழுதவும்.

**படிநிலை -3 அறிக்கையிடலும் சுருக்கமான பொதுவான கலந்துரையாடலும் - 50 நிமிடம்**

9. பயிற்சியாளர் ஏதாவது ஒரு குழுவின் அறிக்கை இடுபவரை அழைத்து அவர்களது குழுவின் முதலாவது வினாவுக்கான பதில் அட்டைகளை குறிப்பிட்ட சுவரிலோ அல்லது டீழயசன லோ காட்சிப்படுத்தச் சொல்ல வேண்டும். காட்சிப்படுத்தும் போது ஒவ்வொரு அட்டைக்கும் இடையே போதுமான அளவு இடைவெளி விட்டு காட்சிப்படுத்தச் சொல்ல வேண்டும் முதலில் ஒட்டப்பட்ட அட்டைகள் மூலம் குழுச் செயற்றிட்டமானது ஆரம்பிக்கப்படுகின்றது. தொடர்ந்து ஏனைய குழுக்களின் அறிக்கை இடுபவர்கள் தங்களுடைய அட்டைகளைக் காட்சிப்படுத்துவார்கள். பங்குபற்றுனர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகுவதற்கான பிரதான காரணிகள் தொடர்பில் தங்களுக்கு உடன்பாடு இருக்கிறதா என்பது தொடர்பில் தங்களுடைய கருத்தக்களைப் பகிர முடியும்.

10. முதலாவது வினாவிற்கு பின்பற்றிய அதே நடைமுறையானது பின்பற்றப்பட்டு இரண்டாவது வினாவாகிய சிறுவர்கள் தொழிலாளர்களாக ஆக்கப்படுவதனால் ஏற்படும் விளைவுகள் என்பதற்கான பதில்கள் ஆராயப்படும்.

11. சிறுவர்கள் தொழிலாளர்களாக ஆக்கப்படுவதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் முக்கிய செய்திகள் தொடர்பில் குறிப்பிடப்படுள்ள விடயங்களை அவர்களுக்கு சுருக்கமாகக் கூறவேண்டும். அத்துடன் செயற்பாடு யு1.3 இன் பலன்கள்.'. நன்மைகள் தொடர்பில் தெளிவான ஒரு விளக்கத்தை வழங்குவதோடு, பங்குபற்றுனர்களது சிறப்பான பங்குபற்றுதலுக்கு நன்றி தெரிவித்தல் வேண்டும்.

**முக்கிய செய்திகள்**

**சிறுவர் தொழிலாளர்களுக்கான காரணங்கள்**

- வறுமை – சிறுவர்கள் தொழிலாளர்களாக மாற்றப்படுவதற்கான பிரதான காரணி வறுமையே ஆனால் வறுமையினை மட்டும் காரணங்களாகக் கூறி விட முடியாது. அத்துடன் எல்லா விதமான வேலைகளிலும் அடிமைத்தனமான முறைகளிலும் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுவதை நியாயப்படுத்திவிட முடியாது. குறிப்பாக மோசமான வேலைச்சூழல்களில் சிறுவர்களை ஈடுபடுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.
- கல்வி கற்பதற்குள்ள தடைகள் - கல்வியின் முக்கியத்துவத்தை பெற்றோர்கள் உணராதுவிடின் கல்விக்கான முக்கியத்துவத்தை அவர்கள் வழங்காத போதும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை விட அவர்களை வேலைக்கு அனுப்புவதிலே பெற்றோர்கள் அக்கறை காட்டுகின்றனர்.
- கலாசாரம், பாரம்பரியம், குடும்ப எதிர்பார்ப்புக்கள் - சிறுவர்கள் தொடர்பான பெரும்பாலான தீர்மானங்கள் அவர்களுடைய பெற்றோர்களினாலேயே கொடுக்கப்படுகின்றன. இதன்போது பெற்றோர் சிறுவர் தொடர்பில் எடுக்கும் முடிவுகளானவை அவ்களுடைய பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை அடியொற்றி இருப்பதையே பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பெற்றோர்கள் தாங்கள் தங்களுடைய சிறுவயதுப் பராயத்திலே செய்த வேலைகளை மதிப்பு மிக்கதாகக் கூறி தங்களுடைய எதிர்பார்ப்புக்களை சிறுவர்கள் மத்தியில் நியாயப்படுத்தி விடுகின்றனர். குழந்தையுடைய நேரத்தை மிகப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி கொள்ளலாம் என்பதே தொழிலாளர்களுடைய கருத்து.
- சந்தைக் கேள்வி:- தொழில் வழங்குனர்கள் மத்தியில் சிறுவர் தொழிலாளர்களுக்கான கேள்வி அதிகமாகவே உள்ளது. ஏனெனில் பெரியவர்களைக் காட்டிலும் சிறுவர்களைக் குறைந்தளவு ஊதியத்துடன் வேலையில் அமர்த்த முடியும். அத்துடன் விரும்பியபோது தொழிலாளர்களுடைய தேவைக்கேற்ப மாற்றியமைப்பதும் இலகு.
- சிறுவர் உரிமை மற்றும் சிறுவருக்கான அங்கீகாரம் தொடர்பில் போதியளவு விழிப்புணர்வின்மை – பெரும்பாலான மக்கள் குறிப்பாக பெற்றோர் சிறுவர்களுக்கு உரிமைகள் உண்டு என்பதை இன்னும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய எண்ணப்பாட்டின்படி குழந்தைகள் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் கட்டுப்பாட்டின் கீழே இருக்கவேண்டும் என எண்ணுகின்றனர்.
- குழந்தைகளைப் பாதுகாப்பதற்குரிய சட்டதிட்டங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்படாமை – குழந்தைகளைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டதிட்டங்கள் சரியான முறையில் அமுல்ப்படுத்தப்படாமையினாலும் ∴ நடைமுறைப்படுத்தாமையினாலும் ∴ வினைத்திறனுடன் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையினாலும் சிறுவர்கள் இலகுவாக ஆட்கடத்தல்

காரர்களாலும் தொழில் தருனர்களாலும் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

## குழந்தைத் தொழிலாளர்களால் ஏற்படும் விளைவுகள்

- மில்லியன்கணக்கான சிறுவர்களது ஆற்றல்கள், அவர்களது கௌரவம் என்பவற்றை இது சிறுவயதிலே தடுக்கிறது
.
- அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளில் தலையிடுவதோடு அவர்கள் பாடசாலை செல்வதற்கான சூழலையும் இல்லாது செய்வதுடன் அவர்கள் கட்டாயக் கல்வியை கற்று முடிக்கும் முன்னரே பாடசாலையை விட்டு இடைவிலகச் செய்கிறது. அல்லது அதிகளவிலான வேலைச் சுமையுடன் அவர்களை பாடசாலைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கிறது.

- சிறுவர் தொழிலாளர்கள் ஆபத்தான வேலைச்சூழல் மற்றும் உடல் உள ரீதியாக பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிலைமையில் பணிக்கு அமர்த்தப்படுவதோடு அவர்களுடைய வேலை மணித்தியாலமானது அதிகமாகவும் உள்ளதால் அவர்களுடைய வாழ்க்கை முறையானது மோசமான நிலையிலேயே காணப்படுகிறது.

- ஆபத்தான வேலைச்சூழலில் பணிபுரியும் பெரியவர்களே பாதிப்பிற்கு உள்ளாவதால் அங்கே பணிபுரியும் சிறுவர்கள் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள்.

- உதாரணமாக உடலியல் ரீதியாக அவர்களுடைய வளர்ந்து வருகின்ற எலும்புகள் மூட்டுக்களைப் பாதிப்பதோடு முதுகெலும்புக் குறைபாடுகளையும் ஏற்படுத்துவதோடு நீண்டகாலக் குறைபாடுகளையும் இது ஏற்படுத்துகின்றது.
- சிறுவர் வீட்டுப் பணியாளர்களாக வெளியே வேலை செய்கின்றபோது அவர்கள் வீட்டுநோய், தனிமைப்படுத்தப்படுதல், உடலியல் ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுவதோடு அவர்கள் வன்முறையான மற்றும் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

- இறுதியாக சிறுவர் தொழிலாளர்கள் வறுமையினையே ஏற்படுத்துகிறது.

## பயிற்சியாளர்களுக்கான குறிப்புக்கள்

- இது ஒரு முக்கியமான செயற்பாடாகும். இந்த செயற்பாட்டின் மூலம் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு இச்செயற்பாட்டை 2 அமர்வுகளாகப் பிரிக்கவும். முதலாவது அமர்வானது படிமுறை 1ஐ உள்ளடக்கியதாகவும் அமர்வு 2ஆனது படிமுறை 2, 3ஐ உள்ளடக்கி இருக்கும். பங்குபற்றுனர்களது நிலை, எண்ணிக்கை மற்றும் நேரம் கிடைப்பனவு என்பதைப் பொறுத்து சிறிய இடைவேளையை வழங்கி பங்குபற்றுனர்கள் அனைவரும் அவதானிக்கின்றார்களா என உறுதிப்புடுத்திக் கொள்ளலாம். (குறிப்பாக படிமுறை 1ன் போது)

- செயற்பாட்டுத் தாளிலே கொடுக்கப்பட்ட முக்கிய செய்திக்கு அமைவாக படிமுறை 1ற்கான உங்களுடைய அறிமுகத்தை தயார்செய்து கொள்ளவும். அமர்வானது செயற்பாட்டுக்கு இடையிலானது என்பதை கீழ்வருவன மூலம் உறுதிசெய்யவும்.

1. இந்தக் கலந்துரையாடலில் அனைவரும் பங்குபற்றுகின்றனரா, அதனை உறுதிப்படுத்த அவர்களிடம் அது தொடர்பான கேள்விகளைக் கேட்டுப் பார்க்கவும்.
2. பங்குபற்றுனர்கள் தங்களுடைய கருத்துக்களையும் அனுபவங்ளையும் பகிர்ந்து கொள்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்துவத்துவதோடு அவர்கள் வனாக்களை கேட்டு தெளிவுபடுத்திக்கொள்ள செய்யுங்கள்.

- விவாதிக்கப்பட்ட மற்றும் தெளிவுபடுத்தப்படாத விடயங்கள் தொடர்பில் குறிப்பெடுத்து கொண்டு உங்கழுடைய சுருக்கமான தெனிவுபடுத்தலின்போது அவை தொடர்பில் மேலதிகமாக தெளிவுபடுத்துவதோடு அவர்கள் இந்த வாய்ப்பினை சிறப்பாக பயன்படுத்த அவர்களை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு A1.4 வீட்டு வேலையில் சிறுவர் மற்றும் இளைஞர்கள்

**இலக்கு:**

- சிறுவர் மற்றும் இளைஞர்கள் வீட்டு வேலைத் தொழிலுக்கு செல்வதற்கான காரணங்கள் என்ன என்பது தொடர்பிலும்
- அவர்களுடைய வேலைச்சூழல் மற்றும் வாழ்க்கை நிலை தொடர்பில் விசேடமாகத் தெரிந்து கொள்ளல்

**நேரம்:** 120 நிமிடம்

**கையேடு**

## H1.2 வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்கள் என்றால் என்ன?

**தேவையான பொருட்கள் மற்றும் முன் ஆயத்தம்**

- வண்ண அட்டைகள்.∵. யு4 தாள் (ஒவ்வொரு குழுவிற்கும் ஒரே நிறத்தை உடைய 20 வர்ண அட்டைகள்.∵.தாள்கள் வழங்கப்பட வேண்டும்.
- Flip chat/ அட்டைகளை காட்சிப் படுத்தலுக்காக ஒட்டிவிடக் கூடிய சுவர்/ board

**செயன்முறை**

முழுமையான கலந்துரையாடலும் குழு வேலையும்

**படிமுறை- 1 குழு வேலை (60 நிமிடம்)**

1. பயிற்சியாளரால் செயற்ப்பாட்டின் நோக்கம் தொடர்பில் தெளிவான விளக்கம் வழங்கப்படல் வேண்டும் அத்துடன் முன்னைய கலந்துரையாடல்கள் மற்றும் முக்கிய குறிப்புக்கள் தொடர்பில் மீள நினைவுபடுத்த வேண்டும்.
2. பங்கு பற்றுனர்கள் 5 – 8 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படல் வேண்டும் அத்துடன் ஒவ்வொரு குழுவும் தங்களிற்கென மதிப்பாய்வாளரையும் அறிக்கையிடுபவரையும் நியமிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு குழுவும் உடன்பாடுகளை அடைவதற்கு முன்னர் பின்னர் வரும் விடயங்க்ள் தொடர்பில் குழுவாக கலந்துரையாடுவதுடன் ஒவ்வொருவரும் தங்களது கருத்துக்களை முன்வைத்து தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

- சிறுவர்கள் வீட்டு வேலை தொழிலுக்கு செல்வதற்கான 3 பிரதான காரணிகள் ஒரு வார்த்தை.∵. ஒரு வசனமாக இருப்பினும் ஒவ்வொரு விடையும் அறிக்கையிடுபவரால் ஒவ்வொரு தாளிலே எழுதப்படவேண்டும்.
- வீட்டு வேலைத் தொழிலுக்கான குறைந்த பட்ச வயதெல்லை என்னவாக இருக்க வேண்டும்? ஏன்? குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வயதினை அறிகையிடுபவர் ஒரு தாள் ? அறிக்கையின் மீது எழுத வேண்டும்.
- வீட்டு வேலைத் தொழிலுக்கு சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் செல்வதனால் ஏற்படும் நன்மை, தீமைகள் என்ன? சொல்லப்படுகின்ற கருத்துக்கை அறிகையிடுபவர் தனித்தனியே ஒவ்வொரு தாளிலும் எழுதவேண்டும்.

- வீட்டு வேலைத் தொழிலே பெருமளவிலான பெண்கள் மற்றும் இளம் யுவதிகள் ஈடுபடுவதற்கான பிரதான காரணங்கள் என்ன? ஒவ்வொரு கருத்துக்களையும் தனித்தனி தாளிலே அறிக்கையிடுபவர் எழுத வேண்டும்.
- வீட்டு வேலைத் தொழிலே உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் மற்றும் எதிர்கொள்கின்ற சவால்கள் (ஆகக் கூடுதலாக 5 அட்டைகளிலே, ஒரு அட்டையில் ஒரு கருத்து என்ற வீதம் அறிக்கையிடுபவரால் எழுதப்பட வேண்டும்)

**படிநிலை – 2 அறிக்கையிடுதலும் பொதுவான கலந்துரையாடலும் (60 நிமிடம்)**

4. அறிக்கையிடுபவர் தங்களுடைய குழுவின் கருத்துக்களை முன்வைக்கும் போது பயிற்சியாளர் அட்டைகளை ஒன்றாகச் சேர்க்க வேண்டும்.
5. குழு அறிக்கையில் இருந்து கிடைக்கப்பெற்ற முக்கிய கருத்துக்களை சுருக்காகத் தொகுத்து பின்னர் கலந்துரையாடலை ஆரம்பிக்க வேண்டும். இதன் போது குறித்த விடயம் தொடர்பான செயற்றிறனான விவாதத்தை நடாத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
6. குழுக்களினுடைய பூரணமாண கலந்துரையாடலின் மூலம் பயிற்சியாளர் முடிவுரையினைத் தயார் செய்தல் வேண்டும். அத்துடன் கீழ்வரும் முக்கிய செய்திகளை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

**முக்கிய செய்தி**

- பெற்றோர் தங்களது பிள்ளைகளை வெளியே வேலைக்கு அனுப்புவதற்கான பிரதான காரணங்களாக வறுமை வளப்பற்றாக்குறை வளங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய பெருமளவான தடைகள், வாய்ப்புக்கள் பொருட்கள் சேவைகள் என்பனவே பிரதான காரணிகளாகக் காணப்படுகின்றன. இருப்பினும் அனைத்து வகையான வேலைகள் மற்றும் மோசமான வேலைச்சூழல் என்பவற்றிற்கு வறுமை மட்டுமே காரணம் என கூறி நியாயப்படுத்தி விட முடியாது.

- சிறுவர் வீட்டு வேலைத் தொழிலானது பல நாடுகளிலே சமூக மற்றும் கலாச்சார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்படுவதோடு வீட்டு வேலைத் தொழிலானது பாதுகாப்பான ஒரு தொழில் என்றும் ஏனைய துறைகளை விட குறிப்பாக பெண்களிற்கு பொருத்தமான தொழில் எனவும் நேர் மறையான ஒரு கருத்தானது காணப்பட்டு வருகின்றது. (பெரும்பாலும் சிறுவர்களை வீட்டு வேலைத் தொழிலாளர்களாக உருவாக்குபவர்களாலேயே இக் கருத்தானது கூறப்படுகின்றது.) பொதுவாக வீட்டு வேலைத்தொழில்

பயிற்சியானது வயது வந்த மற்றும் மணம் முடித்த பெண்களுடைய ஒரு அங்கமாகப் பார்க்கப்படுகின்றது.

- இருப்பினும் வீட்டு வேலைத் தொழிலில் உள்ள பெருமளவான சிறுவர்களிற்கு இந்நிலைமையானது உண்மையாக இருந்து வருகின்றது. ஒதுக்கப்பட்ட வேலைகளின் படியும் தனிப்பட்ட வேலை ஒழுங்குமுறைகளின் மூலமும் மோசமான சிறுவர் தொழிலாளருக்கான வேலைச்சூழலின் மூலமும் ஏனைய துறைகளை விட வீட்டு வேலைத்துறையில் சிறுவர்களை இலகுவில் பாதிப்படையச் செய்கின்றது.
- இருப்பினும் பல முதலாளிகள் தங்களுடைய சிறுவர் வீட்டுத் வேலைத் தொழிலாளர்களை தங்களுடைய சொந்த மகன் மகள் போலவும் நடத்தப்படுவதனை பல நாடுகளில் மேற்கொள்ளப்படட்ட ஆராய்ச்சி முடிவுகளின் படி காட்டி நிற்கின்றது. ஒரு சில விதி விலக்குகள் இருப்பினும் அவை பெரிய விடயமாகக் கொள்ளப்படுவதில்லை. மேலும் சிறுவர்கள் குறிப்பாக இளம் சிறுவர்கள் தங்களுடைய முதலாளிகளால் தாங்கள் நடாத்தப்படுகின்ற விதம் தொடர்பாக அவர்கள் முறைப்பாட்டை.ஃகுறைகூறும் நிலையில் இல்லை.
- பெரும்பாலான சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் துஸ்பிரயோகத்ததிற்கு உள்ளாக்கப்பட்டவர்கள். இதனுள் உடல் ரீதியான துன்புறுத்தல் மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் சுரண்டல் என்பன உள்ளடங்கும். அவர்களுக்கு கூடிய வேலை நேரம் (ஒரு நாளில் 10-12 மணித்தியாலம்) குறைந்தளவான ஓய்வு, விடுமறை இல்லாத தொடர்ச்சியான வேலை, உணவிற்கான மிகக் குறைந்த இடைவேளை, கல்வி கற்பதற்கு குறைந்தளவான வசதி, கல்வி கற்க முடியாத நிலை என்பன காணப்படுகின்றன. அவர்கள் குறைந்தளவான ஊதியத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். அல்லது ஊதியம் இன்றி வேலை செய்கின்றனர். உணர்வு பூர்வமாக பாதுகாப்பற்ற நிலை, குடும்பம் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டிருத்தல், ஊட்டச்சத்து குறைபாடு, குறைந்ததளவான தனியுரிமை, உளவியல் ரீதியாக தனிமைப்படுத்தப்படுதல், குறைந்தளவான ஓய்வு நேரம், நண்பர்களுடனான தொடர்பின்மை என்பவற்றால் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

- பெண்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான பாகுபாடுகளானவை சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கழுக்கான ஒரு பிரதான காரணியாக அமைந்து விடுகின்றது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய சிக்கலான நிலமையானது வீட்டு வேலைத் தொழிலில் உள்ள சிறுவர்களை பாதுகாப்பதற்கும் அவர்களை அந் நிலமைகளில் இருந்து வெளியேற்றுவதற்கும், சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்களைத் தடுப்பதற்கும் சிக்கலான ஒன்றாகக் காணணப்படுகின்றது.

**பயிற்சியாளருக்கான குறிப்புக்கள்**

- இச் செயற்ப்பாடனது வீட்டு வேலைத் தொழில் சிறுவர்கள் இளைர்கள் தொடர்பான எந்தவொரு கலந்துரையாடலுக்கும் இது ஒரு தொடக்கப் புள்ளியாக இருக்க முடியும். எனவே நேரம் மட்டுப்படுத்தப்படினும் இச் செயற்ப்பாட்டை முதலில் செய்யுங்கள்.

- இச் செயற்ப்பாடடின் மூலம் கிடைக்கப்படடுள்ள முக்கியமான குறிப்புக்களும் முடிவுகளும் இரண்டாம் அத்தியாயத்திலுள்ள கலந்துரையாடலுக்கான ஒரு சிறப்பான அடித்தளத்தை அமைக்கும்.

**செயற்பாடு A1.5 சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கள ்- தேசிய படம்**

**இலக்கு**: எங்களுடைய நாட்டிலே சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர் நாம் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும் என்பதை கண்டு கொள்ளுதல்.். தெரிந்து கொள்ளுதல்

**நேரம்** 60 நிமிடம்/ 90 நிமிடம்

**கையேடு**

- H1.2- வீட்டு வேலைத் தொழிலில் சிறுவர் தொழிலாளர் என்றால் என்ன?

**தேவையான பொருட்கள் மற்றும் முன் ஆயத்தம்**

- வழங்கப்பட்ட அட்டவணையின் 2 பிரதிகள்
- பயிற்சியாளர் பூரணப்படுத்துவதற்கான ஒரு அட்டவணையினை டீழயசன ல் வைக்கப்பட வேண்டும்.
- மாக்கர்

**படிமுறை**

- குழு வேலையும் பொதுவான கலந்துரையாடலும். தெளிவுபடுத்தல்.

**படிநிலை- 1 குழுவேலையும் வழிப்படுத்தலும் 30 நிமிடம்**

1. பயிற்சியாளரால் பயிற்சியின் நோக்கம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட வேண்டும். அவர் பங்குபற்றுனர்களை ஒவ்வொரு குழுவிலும் 6 பேருக்கு குறையாதவாறு குழுக்களாகப் பிரிப்பார். ஒவ்வொரு குழுவும் இணைக்கப்பட்ட

அட்டவணையின் இரண்டு பிரதிகளை பெற்றும் கொள்ளவும். இரண்டு அட்டவணையில் ஒன்றை மதிப்பீட்டாளருக்கும் இன்னொன்றை அறிக்கை இடுபவருக்கும் வழங்க வேண்டும்.

2. குழுவிலுள்ள மதிப்பீட்டாளர் அட்டவணையில் உள்ள கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாக குழுவில் உள்ளவர்களிடம் கேட்க வேண்டும். குழுவில் உள்ளவர்கள் தங்களுடைய குழுவிற்குள் கலந்துரையாடி பதில்களுடன் இணங்க வேண்டும். அறிக்கை இடுபவரால் வழங்கப்பட்ட அட்டவணை குழுவின் உதவியுடன் நிரப்ப வேண்டும். குழுவிலே கலந்துரையாடப்பட்ட விடயங்களின் விபரம் தேவை அற்றது.

**படிநிலை – 2**

3. பயிற்சியாளர் அட்டவணையில் உள்ள கேள்விகளை ஒவ்வொன்றாக வாசித்து அவற்றுக்குரிய பதில்களை 2 அல்லது 3 குழுக்களின் அறிக்கை இடுபவரிடம் வினாவ வேண்டும். தொடர்ந்து குறிப்பிட்ட அறிக்கை இடுபவர் தங்களுடைய குழு சார்பான விடையை ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிவிக்க வேண்டும். அறிக்கை இடுபவர்கள் பதில்களை மாற்றி கூறவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். பயிற்சியாளர் ஒவ்வொரு குழுவினது பதில்களையும் ஏற்கனவே தயார்ப்படுத்தி வைத்திருந்த குடனி ஊாயவ அட்டவணையில் குறித்துக் கொள்ள வேண்டும்.

4. வளவாளர் பதில்களை தெளிவுபடுத்துவதோடு அவற்றை உறுதிப்படுத்தவும் வேண்டும். தேவை ஏற்படின் காணப்படுகின்ற இடைவெளிகளைப் பூரணப்படுத்தவும் முடியும்.

5. பயிற்சியாளர் கலந்துரையாடலின் முக்கியமான விளைவுகளை சருக்கமாக கூறிமுடித்தபின் பின்வருவன தொடர்பான கேள்விகளைக் கேட்க வேண்டும்.
பதில்கள் உண்மைக்கு அமைவாக இருக்கின்றனவா? வீட்டு வேலைகளில் சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பில் நாம் எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றோம்?

**படிநிலை – 3 தெளிவுபடுத்தல் (தேவைப்படின் 30 நிமிடம்)**

6. குறித்த பிரச்சினை தொடர்பான நன்கு அறிந்த ஒரு நபரை வளவாளராக அழைக்கவும் (தொழில் சங்கங்களில் இருந்தோ, அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்தோ, சிறுவர் பாதுாப்பு தொடர்பில் பணியாற்றும் அரச அதிகாரியாகவோ, தொழிலாளர் அல்லது சமூக அக்கறை உடையோர், பல்கலைக்கழகங்களில் இருந்தோ) குறித்த விடயம் தொடர்பான விளக்கத்தை அவர்கள் மூலம் பெற்றுக்கொள்ளவும் (15 நிமிடம்) குழுவேலையின் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் கேள்வி, வினா மூலமான செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்கலாம்.

**பயிற்சியாளருக்கான குறிப்புக்கள்**

- இச்செயற்பாட்டிற்கு தேவையான தகவல்களை சேகரித்து இச் செயற்பாட்டிற்கு தயாராகுங்கள். சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் தொடர்பாக தங்களுடைய நாட்டிலே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கட்டுரைகள் என்பவற்றை தேடிப் பெற்றுக்கொள்ளுங்கள், அத்துடன் நீங்கள் தகவல்களை திரட்டுவதற்காக வீடியோ துணுக்குகள், ஆக்கங்கள், கட்டுரைகள், விளம்பரங்கள் சம்பவத்திரட்டு (Case Studies) என்பவற்றை பயன்படுத்த முடியும்.

- இச் செயற்பாட்டிற்கு முன்னதாக நீங்கள் குறிப்பிட்ட படிவத்தை நிரப்பிக் கொள்ளுங்கள். படிமுறை 2ல் இதற்கான முறையைப் பார்க்கவும்.

- படிமுறை 3ற்காக நீங்கள் ஒரு வளவாளரைத் தெரிந்தெடுத்திருப்பின் படிமுறை 2ல் உள்ள குறித்த படிவத்தை சரியான வடையுடன் பூரணப்படுத்தி தரும்படி அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

- செயற்பாடுகளின் முடிவில் பங்குபற்றுனர்கள் அனைவரும் சரியான தகவலுடன் கூடிய அட்டவணையினைக் கொடுக்க முயற்சியுங்கள்.

## A1.5 அட்டவணை

சிறுவர் வீட்டுத் தொழிலாளர்கள் தொடர்பில் எங்களுக்கு தெரிந்தவற்றை தெரியப்படுத்துவதற்கான திட்டம்.

நாடு ..............................

**குறிப்பு**:- உங்களுடைய நாட்டிலே வேலை செய்வதற்கான ஆகக் குறைந்த வயதினை தெரிந்து கொள்ளவும். (பெரும்பாலான நாடுகளில் இது 15-18 ற்கும் இடைப்பட்டது.)

| அறிக்கைகள் / கூற்றுக்கள | ஆம் | இல்லை | தெரியாது | கருத்துக்கள் |
|---|---|---|---|---|
| 1.பெரும்பாலான சிறுவர்கள் வீட்டுவேலை தொழிலாளர்களாக இருக்கின்றனர். | | | | |
| 2. 8 வயதிற்கு குறைவான சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக இருக்கின்றனர் | | | | |
| 3. 9-14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். | | | | |
| 4. 15-17 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். | | | | |
| 5.பெரும்பாலான பெண்களே சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். | | | | |
| 6.பெரும்பாலான சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக வருவது. | | | | |
| a) கிராமப் புறங்களில் இருந்து. | | | | |
| b)வறுமைக்குட்பட்ட குடும்பங்களிலிருந்து | | | | |
| c) குறைந்த நடுத்தர வர்க்கக் குடும்பங்களிலிருந்து | | | | |
| d) ஏனைய நாடுகளில் இருந்து (ஆம் எனில் எந்த நாடுகள் எனக் குறிப்பிடவும்) | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7.சிறுவர் வீட்டு வேலை தொழிலாளர்கள் | | | | |
| a)முழுநேர பாடசாலைக்குச் செல்கின்றனர். | | | | |
| b)பகுதியளவில் பாடசாலைக்குச் செல்கின்றனர். | | | | |
| c)அவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. | | | | |
| 8. சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் அவர்களது உரிமையாளர் வீட்டிலேயே வாழ்கின்றனர். | | | | |
| a) 50% ற்கும் அதிகமானவர்கள | | | | |
| b) 50% ஆனவர்கள | | | | |
| c)50% லும் குறைவானவர்கள். | | | | |
| 9.சிறுவர் வீட்டுவேலை தொழிலாளர்களது உரிமையாளர்களாக இருப்பது | | | | |
| a) பெரும்பாலும் அவர்களுடைய உறவினர்கள்/ குடும்ப நண்பர்கள். | | | | |
| b) பெரும்பாலும் அவர்களுடைய குடும்பத்துடன் தொடர்பற்றவர்கள | | | | |
| 10. பெரும்பாலான சிறுவர் வீட்டு வேலை தொழிலாளர்கள் | | | | |
| a) தங்களுடைய பெற்றோருடன் இணைந்து வேலை செய்கின்றனர். | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| b) தனியாக வேலை செய்கின்றனர். | | | | |
| 11. பெரும்பாலான சிறுவர் வீட்டு வேலை தொழிலாளர்கள் இளம் வயதினராக உள்ளனர். (8 வயதிற்கு கீழ் உள்ளவர்கள்) அவர்கள் இலகுவான வேலைகளையே செய்கின்றனர்.(கூட்டுதல், துடைத்தல், மரங்களுக்கு தண்ணீர் ஊற்றுதல், சமையலறையில் உதவுதல்) | | | | |
| 12. 8 -12 வயதான சிறுவர்கள் உள்ளடங்கலாக பெரும்பாலன சிறுவர்கள் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் கடுமையான வேலைகளையும் செய்கின்றனர்..∵.பெரியவர்களுக்கு உரித்தான வேலைகளையும் செய்கின்றனர். (குழந்தைகள், சிறுவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், வயது முதிர்ந்தவர்களை கவனிக்கும் பிரதான வேலை, குடும்பத்திற்காக சலவை செய்தல், ஆடைகளை சலவை செய்தலும் உலர்த்துதலும், தோட்டங்களைப் பராமரித்தல், வீட்டு உரிமையாளர்கள் வீட்டில் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| இல்லாத சமயத்தில் முழு வீட்டையும் கவனித்தல், கடினமான மற்றும் சிக்கலான இலத்திரனியல் உபகரணங்களைக் கையாளுதல்) | | | | |
| 13. பெரும்பாலான சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கு | | | | |
| a) பணமாக ஊழியம் வழங்குதல் (நேரடியாக அல்லது மருத்துவர் மூலமாக வழங்குதல்) | | | | |
| b) வேறு முறையில் ஊதியம் வழங்குதல் (உடைகள், பாடசாலைக் கட்டணம்.∴ பாடசாலை சீருடை) | | | | |
| c)ஊதியம் வழங்கப்படுவதில்லை. (உணவு மற்றும் தங்குமிட வசதி மட்டுமே வழங்கப்படுகிறது)<br><br>14. சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டாலும் வீட்டு வேலை செய்யும் வளர்ந்தவர்களை விட குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது. | | | | |
| 15. பொதுவான சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கு | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| a) நியாயமான வேலை செய்யும் நேரம் | | | | |
| b) போதியளவு தூக்கத்திற்கான நேரம் (8 மணித்தியாலம்) | | | | |
| c) பாடசாலை செல்லத் தேவையான நேரம் | | | | |
| d) படிப்பதற்கு போதியளவு நேரம் | | | | |
| e) வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை | | | | |
| f) விடுமுறை தினங்களில் விடுப்பு | | | | |
| g) வருடாந்த விடுமுறை | | | | |
| h) மருத்துவ சுகாதாரக் காப்புறுதி | | | | |
| 16.விபத்து அல்லது நோய் ஒன்றினால் குறித்த சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் பாதிப்பிற்குள்ளாகும் போது அவர்களுடைய முதலாளிகளால் | | | | |
| a) மருத்துவர், மருத்துவமனை மருந்து என்பவற்றுக்கான கட்டணங்கள் செலுத்தப்படுகிறது. | | | | |
| b) மருத்துவர் மற்றும் மருந்துக்கான கட்டணம் செலுத்தப்படுகிறது. | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| c) மருந்துக்கான கட்டணங்கள் மட்டும் செலுத்தப்படுகிறது | | | | |
| d)எந்தவொரு கட்டணமும் செலுத்தப்படவில்லை. | | | | |
| 17. சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றனர். (தொழிலாளர் சட்டங்கள், சிறுவர் நல சட்டங்கள், மாகாண மாவட்ட கட்டளைகள்) ஆம் எனில் குறிப்பிடுக. | | | | |
| 18. சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை ஒழுங்கமைக்கவோ அல்லது சங்கங்களாக இணையவோ அவற்றுக்கு உரிமை உண்டு . | | | | |

**செயற்பாடு A1.6 வீட்டு வேலைத் தொழிலில் உள்ள சிறுவர்கள் இளம் வயதினர் தொடர்பில் தங்களுடைய அணுமுறைகள்.·. மனப்பாங்கினை பரீட்சித்தல்.**

**இலக்கு:** வீட்டு வேலைத் தொழிலில் உள்ள சிறுவர் மற்றும் இள வயதினர் தொடர்பாக எங்களுடைய சொந்த மனப்பாங்கினை அல்லது மனோ நிலையினைப் பரீட்சித்தல்.

வீட்டு வேலைத் தொழிலாளர்களாக உள்ள சிறுவர்கள் மற்றும் இள வயதினர் தொடர்பாக உள்ள எங்களுடைய மனப்பாங்கினை.·.கருத்தினை பொதுவான சமூகக் கண்ணோட்டம் பராம்பரிய கலாசாரம் எங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப்

புரிந்து கொள்வதோடு வீட்டு வேலைத் தொழிலில் உள்ள சிறுவர் மற்றும் இள வயதினரின் உறவுகளைப் புரிந்து கொள்ளல்.

**நேரம் 60 நிமிடம்**

**கையேடு**

H1.2 சிறுவர் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் என்றால் என்ன?

**தேவையான பொருட்களும் முன் ஆயத்தங்களும்**

**படிமுறை 1 ற்கானது**

- அறிக்கையின் 10 பிரதிகள் (ஒவ்வொரு சூழலுக்கும் 2 பிரதிகள்)
- அறிக்கையில் உள்ள 10 விடயங்களை கடனி ஊாயசவ தாளில் பட்டியலிட வேண்டும். இதன் போது ஆம், இல்லை என்பதைக் குறிப்பிடுவதற்காக இடை வெளியிட வேண்டும்.

**செயன்முறை**

குழு வேலையினைத் தொடர்ந்து பொதுவான கலந்துரையாடல் நடாத்தப்பட வேண்டும்.

**படிமுறை1- தெரிவு 1 குழு கலந்துரையாடலும் கருத்துக்ளை வெளிக்கொணர்தல்.**

1. பயிற்சியாளர் செயற்பாட்டின் நோக்கம் தொடர்பாக தெளிவுபடுத்துவதுடன் அறிக்கையில் பட்டியல் படுத்த வேண்டிய கூற்றுக்களை நேரம் கிடைப்பதை பொறுத்து தீர்மானித்துக்கொள்ள முடியும்.

2. பயிற்சியாளர் பங்குபற்றுனர்கள் அனைவரையும் மண்டபத்தின் ஒருபக்கத்தில் ஒன்று சேர்க்க வேண்டும்.
3. பயிற்சியாளர் பட்டியலிலுள்ள ஒவ்வாரு கூற்றினையும் சத்தமாக வாசிக்க வேண்டும்.வாசிக்கபட்ட கூற்றினை பங்குபற்றுனர்கள் ஏற்றுக் கெபள்வார்களாயின் எதிரே உள்ள சுவரை நோக்கி இடது கைபுறகாக செல்ல வேண்டும். கூற்றை ஏற்றுக்கொள்ளாதவராக இருப்பின் வலது புறமாக செல்ல வேண்டும. இரண்டிற்கும் நடுவில் இருப்பவர்கள் குறிப்பிட்ட கூற்றை ஏற்றுக் கொள்ளாதவராக கருதப்படுவர்.

4. தொடர்ந்து பயிற்சியாளர் பங்குபற்றுனர்களிடம் அவர்கள் குறித்த கூற்றினை ஏன் ஆதரித்தனர்/ஆதரிக்கவில்லை என சுருக்கமாக கேட்டறிவதுடன்

ஆரோக்கியமான விவாதத்திற்க்கு ஊக்கப்படுத்த வேண்டும். தொடர்ந்து அடுத்த கூற்றினை வாசித்து அதே நடைமுறையினை பின்பற்ற வேண்டும்.

5. பயிற்சியின் முடிவிலே வீட்டுவேலைத் தொழிலில் உள்ள சிறுவர் மற்றும் இளவயதினர் தொடர்பாக உங்களது கண்ணோட்டத்தில் எத்தகைய மனப்பாங்குகள் எவ்வாறான கண்ணோட்டங்கள் சமூக கலாச்சார பாரம்பரியங்கள் என்பன குடும்பம் மற்றும் சமூகத்தில் காணப்படுகின்ற வீட்டுவேலைத் தொழிலில் சிறுவர் மற்றும் இளவயதினர் எந்த வகையில் பாதிக்கப்படுகின்றனர் என்பது தொடாபாக பங்குபற்றுனர்களிடம் கேட்க்க வேண்டும். பின் முக்கிய குறிப்புக்களை சுருக்கமாக தெளிவுபடுத்திய பின்னர் குறித்த அத்தியாயத்தை நிறைவு செய்ய வேண்டும்.

**படிமுறை1-தெரிவு2 குழுவேலை 30 நிமிடம்**

1. பயிற்சியாளர் செயற்பாட்டின் நோக்கம் தொடர்பாக பங்குபற்றுனர்களுக்கு தெளிவுபடுத்திய பின்னர் அவர்களை 5-8 பேர் கொண்ட குழுக்களாக பிரிக்க வேண்டும்.

2. பயிற்சியாளர் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரே மாதிரியான 10 கூற்றுக்கள் அடங்கிய அறிக்கையை கொடுக்க வேண்டும்.

3. குழுக்கள் தங்களுக்கென மதிபபீட்டாளரையும் அறிக்கை இடுபவரையும் நியமிக்க வேண்டும்.

4. குழுவிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு கூற்றுக்களையும் கவனமாக அவதானித்து குழுவாக எந்தக் கூற்றை ஆதரித்தல் எதை நிராகரித்தல் என தீர்மானிக்க வேண்டும். அறிக்கை இடுபவர் கலந்துரையாடலின் முக்கிய செய்திகளை குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும்.

**படிமுறை 2- தெரிவு2- அறிக்கை இடலும் பொதுவான கலந்துரையாடலும்.**

5. பயிற்சியாளர் காட்சிப்படுத்தப்பட்ட கூற்றுக்களில் முதலாவது கூற்றை வாசிப்பர். ஒவ்வொரு குழுவின் அறிக்கை இடுபவர்களும் தங்களுடைய குழுவின் கருத்துக்களை சுருக்கமாக விளக்க வேண்டும். பயிற்சியாளர் குழுக்களினுடைய கருத்துக்களை சுருக்கமாக கூற வேண்டும். பின்னர் பங்குபற்றுனர்கள் அனைவரும் குறித்த கூற்றுடன் உடன்படுகின்றனரா இல்லையா என தீர்மானிக்க வேண்டும். அவர்களின் தீர்மானம் ் காட்சிப்படுத்தப்பட்ட தாளிலே குறிக்கப்பட வேணடும்.

6. பயிற்சியாளர் குறித்த செயல்முறையினை ஒவ்வொரு கூற்றிற்கும் கடைப்பிடிக்க வேண்டும்.

7. பயிற்சியின் முடிவிலே வீட்டுவேலைத் தொழிலில் உள்ள சிறுவர் மற்றும் இளவயதினர் தொடர்பாக உங்களது கண்ணோட்டத்தில் எத்தகைய மனப்பாங்குகள் எவ்வாறான கண்ணோட்டங்கள் சமூக கலாச்சார பாரம்பரியங்கள் என்பன குடும்பம் மறறும் சமூகத்தின் காணப்படுகின்ற வீட்டுவேலைத் தொழிலில் சிறுவர் மற்றும் இளவயதினர் எந்த வகையில் பாதிக்கப்படுகின்றனர் என்பது தொடர்பாக பங்குபற்றுனர்களிடம் கேட்க்க வேண்டும். பின் முக்கிய குறிப்புக்களை சுருக்கமாக தெரிவுபடுத்திய பின்னர் குறித்த அத்தியாயத்தை நிறைவு செய்யலாம்.

## முக்கிய செய்திகள்

- குடும்பத்திலும் சமூதாயத்திலும் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக காணப்படுகின்ற சிறுவர் மற்றும் இளவயதினர் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் என்பன ஒரே மாதிரியான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

- பொதுவாக வீட்டுவேலைத் தொழில் என்பது பெண்களுக்கான ஒரு வேலையாகவே கருதப்படுகிறது. இதற்கு மேலதிக பயிற்சியோ அல்லது திறன்களோ எதிர்பார்க்கப்படுவதில்லை. குறைந்த ஊதியம்/ ஊதியமற்ற பெண்களுக்கும் விருப்பமான ஒரு வேலையாக காணப்படுவதுடன் அவர்கள் இதற்கான பயிற்ச்சியினை ஏற்கனவே தங்களுடைய வீடுகளில் பெற்றிருக்கின்றனர்.

- ஏனைய வீடுகளில் பணியாற்றும் போது வீட்டு உரிமையாளர்களில் சிறுவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சிறந்த சூழல் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் தங்களுடைய குடும்பத்தை போல நடாத்தப்படுவது போன்ற ஒரு மாய தோற்றமானது அல்லது மாயை ஆனது உருவாக்கப்படுகிறது.
- சிறுவர்கள் கல்வியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு மற்றும் சிறுவர் வீட்டு வேலையில் இருந்து வெளியேறுவதும் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. கல்வியானது சிறுவர்களுக்கு கட்டாயமானதாகும். இலவசமானதாகவும் தரமானதாகவும் வழங்கபடும் பட்சத்தில் இது சிறுவர் தொழிலானது எண்ணிக்கையினை குறைப்பதற்கு பெருமளவு உதவி புரியும்.

- வீட்டுவேலைத் தொழிலிலே பாலினம் வர்க்கம் சாதி இனம் என்பவற்றின் அடிப்படையிலே பாகுபாடுகள் நிறைந்து காணப்படுகின்றன.

- சிறுவர்களை வீட்டுவேலைத் தொழிலுக்கு அனுமதிப்பவாகளுக்கும் ஆட்களை கடத்துபவர்களையும் இடையில் அதிகமான தொடர்புகளும் காணப்படுகின்றன. (குறித்த முகவரால் கைப்பற்றபடுகின்றவர்களை அவர்கள் தொழிலுக்கு ஆட்களை வாங்குபவர்களிடம் அல்லது பாலியல் தேவைகளுக்காக அவர்களை விற்றுவிடுகின்றனர்

- பொதுவாக வீட்டுவேலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் சிறுவர் மற்றும் இளவயது தொழிலாளர்கள் தொடர்பாக சமூகத்தினது கண்ணோட்டம் மற்றும் மனப்பாங்கினை மாற்றுவதற்கான விழிப்புணர்வுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

## பயிற்சியாளாருக்கான குறிப்புக்கள்

- உணவு இடைவேளையின் பின்னர் செயலமர்வை உற்சாகத்துடன் ஆரம்பிக்கவும்

- உங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாக பகிர முடியும். குறிப்பாக உங்களுடைய தீர்க்கமான உண்மை கருத்துக்கள் அல்லது உங்கள் நாடு நிறுவனம் சார்ந்த கருத்துக்களாக இருக்கலாம்.

- ஆரோக்கியமான திறந்த கலந்துரையாடலை ஊக்கப்படுத்துவதோடு பங்குபற்றுனர்களிடமிருந்து உதாரணங்கள் மற்றும் அவர்கழுடைய அனுபவங்களை பகிர செய்யுங்கள்

- சர்ச்சைக்குரிய கருத்துக்கள் மற்றும் விவாதம் தொடர்பில் குறித்துக் கொண்டு அவற்றின் மேலதிக கருத்துக்காக அவற்றை மீண்டும் முனவைத்தல்.

## அறிக்கைக்கான உதாரணங்கள்

1. சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்களது வாழ்க்கை நிலைமையானது தங்களுடைய முதலாளியுடன் வாழ்வதை விடவும் தங்களுடைய வீட்டிலேயே சிறப்பாக உள்ளது.

2. வீட்டுவேலைக்கு தயார்ப்படுத்தப்பட்டவாடகளாகவும் பொருத்தமானவர்களாகவும் பெண்களே காணப்படுகின்றனர்.

3. வீட்டுவேலைத் தொழிலிற்கு குறைந்தளவான திறன்கள் போதுமானது என பரந்த அளவிலே கருதப்படுவதால் பெரும்பாலும் இவ்வேலைக்கு குறைந்த அல்லது கீழ், சாதி, கீழ் மட்ட பெண்கள் மற்றும் சிறுபான்மையினரே இதில் ஈடுபடுகின்றனர்.(இனரீதியில் பழங்குடி மதம்)

4. பெரும்பாலான சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் வீடுகளில் பண்ணை லேைகளில் ஈடுபடுவதையே வரும்புகின்றனர்.

5. பெரும்பாலன சிறுவர்கள் தங்களுடைய வீடுகளில் வேலைசெய்வதைவிட தங்கழுடைய கிராமபுறங்களில் வீட்டுவேலைத்தொழிலாளர்களாக இருப்பது இலகு என கருதுகின்றார்கள்

6. சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக வேலை செய்யும் போது அவர்களுடைய முதலாளிகளின் பாதுகாப்பின் கீழ் பாதுகாப்பாக இருக்கமுடியும்.

7. வீட்டுவேலைத் தொழிலில் ஈடுபடுகின்ற பெரியவர்கள் சிறுவர்களை பாதுகாப்புடன் தொடர்ந்து அந்த வீட்டிலேயே எந்த பிள்ளை அவர்களுடன் சேர்ந்து வேலை செய்யப் போகின்றது என்பது தொடர்பில் கவனிக்க வேண்டும்.

8. சிறுவர்கள் சிறுவயதிலேயே வெளியே வேலைக்கு செல்வது இதன்மூலம் அவர்கள் தங்களை எதிர்கால வாழ்க்கைக்கு தயார்ப்படுத்திக் கொள்ள முடியும்.

9. வீட்டுவேலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் தாங்கள் வேலைக்கு செல்லும் போது தங்களுடைய பெண்பிள்ளைகளையோ தங்களுடைய மகன்களையோ அல்லது உடன்பிறந்த சகோதரர்களையோ தங்களுடன் அழைத்துச் செல்லுதல்.

10. பெரும்பாலான சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் போனறே நடத்தப்படுகின்றனர்.

11. பாடசாலைக்கு செல்வதால் ஒரு நல்ல வாழ்க்கை கிடைத்து விடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

12. சிறுவர்கள் எதிர்பார்க்கின்ற சிறப்பான வாழ்க்கை மேம்படுத்துவதற்கு கல்வி முக்கியமானது.

13. குடும்பத்தில் இருந்து விலகி இருக்கும் நிலை சிறுவர்களுக்கு வேதனையான ஒன்று.

14. குடும்பத்தில் இருந்து விலகி இருப்பது சிறுவர்களுக்கு பெரிய சவாலான விடயமாகவே காணப்படும்.

15. சிறுவர்களை வீட்டுவேலைத் தொழிலுக்கு அனுப்புவது ஏழைப் பெற்றோருக்கு இலகுவான தீர்வாக அமைகின்றது.

16. 5 வயது முதல் வீட்டுவேலைத் தொழிலாளர்களாக ஏனைய வீடுகளில் வேலை செய்யும் சிறுவர்கள் சாதாரண அல்லது இலகுவான வேலைகளை மட்டுமே செய்கின்றனர்.

17. ஏழைப் பெற்றோர்கள் மட்டும் சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலுக்கு அனுப்புகின்ற தெரிவினை மேற்கொள்ளவில்லை.

18. வீட்டுவேலைத் தொழிலாளியாக வேலை செய்யும் ஒருவர் சிறுவர் மீது நேரான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

19. பெரும்பாலான சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் அவர்கள் வளர்ந்த பின்னரும் அதே வேலையினையே தொடர்ந்து செய்கின்றனர்.

20. சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்களுக்கும் வீட்டு வேலை செய்கின்ற பெரியவர்களுக்கு வழங்குகின்ற அதே அளவு கூலி வழங்கப்படுகின்றது.

21. சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்களுக்கு பாடசாலை செல்வதற்கான நேரம் தேவையானது.

22. ஏனைய வீடுகளில் வேலை செய்யும் சிறுவர்கள் உண்மையில் சிறுவர் தொழிலாளர்களாக? இல்லை அவர்கள் பாடசாலை செல்கின்றனர்.

23. சிறுவர் தொழிலாளர் தொடாபான அசம்பாவிதங்கள் தொடர்பில் தலையிடவோ அல்லது முறையிடவோ சமூக அங்கத்தவர்களுக்கு சட்டரீதியாக அதிகாரம் இல்லை.

24. பொதுவாக குழந்தைகள் இலகுவான வேலைகளை செய்வதால் அவர்களுக்கு வேலையிடத்திலே குறைவான விபத்து சம்பவங்கள் காணப்படுகின்றன.

**செயற்பாடு A1.7 சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் தொடர்பிலும் இளவயது வீட்டுவேலைத் தொழிலாளர்களை பாதுகாத்தல் தொடர்பிலும் எங்களுடைய சட்டங்கள் என்ன கூறுகின்றன.**

**இலக்கு** - சிறுவர் மற்றும் இளவயது வீட்டுவேலைத் தொழிலாளர்களை பாதுகாப்பது தொடர்பான சட்டங்கள் அறிதல்.

சிறுவர் உரிமை தொடர்பான தேசிய சட்டதிட்டங்களையும்ˆ ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு தீர்மானம் மற்றும் சர்வேதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் தீர்மானங்களுடன் ஒப்பிட்டு அவற்றிற்கு இடையிலான பிரதான இடைவெளிகளையும் நடைமுறை சிக்கல்களையும் இனங்காணுதல்.

**நேரம் - 30 நிமிடம்**

**கையேடு**

- சிறுவருக்கான ˆஉரிமைகள் சிறுவர் தொழிலாளர் மற்றும் சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் தொடர்பான சர்வதேச மற்றும் தேசிய சட்டங்கள்.

**பொருட்களும் தயார்ப்படுத்தலும்**

- படிமுறை1 இற்காக சிறுவர் உரிமையுடன் தொடர்புபட்ட சர்வதேச மற்றும் தேசிய சட்டதிட்டங்கள் காட்சிப்படுத்தல் ஒன்றை தயார் செய்ய வேண்டும் அல்லது படிமுறை1 இற்காக ஒரு வளவாளரை அழைத்து கலந்துரையாடல் செய்தல்.
- குறித்த படிவத்தின் பிரதியை ஒவ்வொரு குழுவிற்கு ஒன்று என்றவாறு வழங்கல்.
- அறிக்கை இடுபவருக்கான மாக்கர்கள்

**செயன்முறை**

- காட்சிப்படைப்பு குழுவேலை பொதுவான கலந்துரையாடல்.

**படிமுறை 1- அறிக்கையிடலும் பொதுவான கலந்துரையாடலும்.**

1. பயிறச்சியார் செயற்பாட்டின் நோக்கத்தை தெரிவுபடுத்துவதுடன் கடந்த அமர்வில் கலந்துரையாடப்பட்டதற்கு இணங்க சிறுவர் தொழிலாளர் மற்றும் அவர்களுடைய உரிமைகள் தொடர்பான பிரதான குறிப்புக்களை மீளக் கூற வேண்டும்.

2. பயிற்றுவிப்பாளர்கள் தயார்படுத்தப்பட்ட அறிக்கையை காட்சிப்படுத்த வேண்டும். அல்லது வளவாளர் ஒருவரை அழைத்து அவரது கருத்துக்களை கூற வைக்க வேண்டும். பங்கேற்பாளர்கள் அறிக்கை தொடர்பாக தங்களுக்கு தேவையான தெரிவுபடுத்தல்களை கொடுப்தற்கு அறிக்கையிடலின் போது ஊக்கப்படுத்த வேண்டும்.

3. பயிற்சியின் board இல் குறித்துக்கொண்ட முக்கிய குறிப்புக்களை மையப்படுத்தியதாக பொதுவான கலந்துரையாடலானது(கேள்வி விடை/பகிர்தல்) இடம் பெற வேண்டும்.

4. பயிற்றுவிப்பாளர் சுருக்க உரையின்போது அவர்பங்குபற்றுனர்கள் தொடர்பாக பின்வருசனவற்றை உறுதி செய்யவேண்டும்

- சிறுவர் உரிமைகளை பாதுகாக்கின்ற குறிப்பாக வீட்டுவேலைத் தொழிலிலுள்ள சிறுவர் தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கின்ற சர்வதேச மற்றும் தேசிய சட்டங்கள் தொடர்பாக புரிந்து கொள்ளல்.

- சிறுவர்கள் பாதுகாப்பு தொடர்பில் குறிப்பாக வீட்டுவேலைத் தொழிலிலுள்ள சிறுவர்களை பாதுகாப்பது தொடர்பில் அவர்களுடைய நாட்டு சட்டதிட்டங்கள் முக்கிய குறிப்புக்களை தெரிந்து கொள்ளல்.

**படிமுறை2- குழுவேலை 30நிமிடம்**

5. பங்குபற்றுனர்களை 5-8 பேர் கொண்ட குழுக்களாக பிரிக்க வேண்டும். குழுக்கள் தங்களுக்கென மதிபபீட்டாளரையும் அறிக்கை இடுபவரையும் நியமிக்க வேண்டும்.

6. வீட்டுவேலையிலுள்ள சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பான எங்களுடைய சட்டங்களை தொடர்புபடுத்திப் பார்ப்பதுடன் சர்வதேச சட்ட மாநாட்டு தீர்மானங்களை செயலப்படுத்தி பார்த்தல். இதற்கென இணைக்கப்பட்ட படிவத்தின் பிரதியை பயிற்றுவிப்பாளர் பங்குபற்றுனர்களுக்கு வழங்க வேண்டும். அத்துடன் குறித்த பெரிய அளவான படிவத்தின் பிரதியினையும் மாக்கர்களையும் அறிக்கை இடுபவரிடம் வழங்கல்.

7. பயிற்றுவிப்பாளர் வழங்கப்பட்ட படிவத்தின் வேறுவேறு பிரிவுகளிலிருந்து 3 குறிப்புக்களை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்க வேண்டும். சில பிரச்சனைகளுக்கு உள்ளூர் மற்றும் தேசிய ரீதியில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. ஆனால் அவற்றை சர்வதேச சட்டத்திற்கு கொண்டு செல்லும் போது அவற்றிற்கு அதிகளவான முக்கியத்துவம் அளிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்பதை குறித்துக் கொள்ளவும். பயிற்றுவிப்பாளர் அல்லது வளவாளர் இருக்கும் பட்சத்திலும்

குழுவினருக்கு தேவை ஏற்படும் பட்சத்திலும் அவர்கள் குழுக்களுக்கு உதவலாம்.

8. ஒவ்வொரு குழுக்களும் கலந்தாலோசிப்பதற்கான பகுதியை தெரிவு செய்து கொடுக்கவும்.

a) சிறுவர் மற்றும் இளவயது வீட்டுவேலைத் தொழிலாளர்கள் தொடர்பாக தற்போது காணப்படுகின்ற தேசிய மற்றும் உள்ளூர் சட்டதிட்டங்கள் என்பவற்றின் மூலம் எமது நாட்டில் சிறுவர் மற்றும் இளவயதினர் போதுமான பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியுமா?

b) ஆம் எனின்

- குறித்த பிரிவை அல்லது சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளில் பிரிவு தொடர்பு உங்களுக்கு தெரிந்தவற்றினை குறிப்பிட்டு கூறுக.(4ம் நிரல்)
- இந்த சட்டம் மற்றும் ஒழுங்குகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.(5ம் நிரல்)
- அதிலே காணப்படுகின்ற இடைவெளிகள் எவை? அவற்றினை எவ்வாறு நிரப்பமுடியும்?

இல்லை எனின் எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குறித்த இடைவெளிகளை நிரப்பலாம்..(5ம் நிரல்)

9. குறித்த கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டதன் முக்கிய கருத்துகளை குறித்த படிவத்திலே ஒவ்வொரு நிரலிலும் அறிக்கை இடுபவர் நிரப்ப வேண்டும்.

**படிமுறை 3- அறிக்கையிடலும் பொதுவான கலந்துரையாடலும்**

10. அறிக்கை இடுபவர் தங்களது குழுக்களிலே கலந்துரையாடப்பட்ட படங்களின் பிரதான குறிப்புக்களையும் பெரிய படிவத்தினையும் அறிக்கை செய்வார்கள்(5நிமிடம்) பயிற்சியாளர் அல்லது வளவாளர் பங்குபற்றுனர்கள் கேட்கும் பட்சத்தில் மேலதிக விபரங்களை வழங்குவதோடு தெளிவுபடுத்தலையும் செய்வார்கள்.

11. பயிற்சியாளர் 2/3 முக்கிய செய்திகளை சுருக்கமாக கூறவேண்டும். குழுக்கள் தாங்கள் பூர்த்தி செய்த படிவங்களை அடுத்த அமர்வு தேவைக்காக தாங்களே வைத்திருக்கலாம்.(உதாரணம் செயற்பாடு 2.4)

**முக்கிய செய்திகள்**

- வீட்டுவேலைத் தொழிலில் இருந்து சிறுவர் தொழிலாளர்களை நிறுத்துவதற்கும் இளவயது வீட்டுவேலைத் தொழிலாளர்களுக்கு உயர்ந்தளவான பாதுகாப்பினை உறுதி செய்து கொள்வதற்கும் சட்டதிட்டங்களானவை மிக முக்கியமான ஒன்றாகும். இதனால் தான் வீட்டுவேலைத் தொழிலாளர்களும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களும் சிறுவர் மற்றும் இளவயது வீட்டுவேலைத் தொழிலாளர்களுக்கான சட்டதீதியான பாதுகாப்பு தொடர்பாக அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும். இதற்காக அவர்கள் தொழிற்சங்கங்கள், மனித உரிமை சார் நிறுவனங்கள் விசேடமாக சிறுவர் உரிமை தொடர்பாக கவனம் செலுத்துவார்கள். சிறுவர் உரிமை தொடர்பாக செயலாற்றும் அரச திணைக்களங்கள் என்பவற்றின் மூலம் உதவியை தேடிக்கொள்ளலாம்.

- ஆசிய பசுபிக் பிராந்தியம் உட்பட்ட பல நாடுகளில் பிரதான பிரச்சனையாக காணப்படுவது அத்தகைய சட்டதிட்டங்களானவை நடைமுறையில் செயற்படுத்தப்படாமையே அவற்றை கடந்து செல்வதற்கு பல்வேறு தடைகளாக காணப்படுகின்றன.

1. **மேலோங்கி மனப்பான்மை** பிள்ளைகள் தொடர்பான அனைத்து முடிவுகளையும் பெற்றோர்(பாதுகாவலர்) தாமே எடுக்க வேண்டும் என்கின்ற பரந்துபட்ட மனப்பான்மையானது பரவலாக காணப்படுகின்றது. பிள்ளைகள் உடல் ரீதியாக, உள ரீதியாக மற்றும் நல்வாழ்வு சார்ந்து ஆபத்தான சூழ்நிலைகளில் இருந்தால் கூட பெற்றோரே சிறுவர்களது விருப்பின்றி தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

2. **குழந்தைகளின் பலவீனமான மற்றும் அடிமட்ட நிலை** குழந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட செலவிற்குள் அவர்களின் உரிமைகளை பெறுவதில் உள்ள சிரமங்கள் தொடர்பாக சிறுவர்கள் குரல் எழுப்ப முடியாத நிலை.

3. **கொள்கை மற்றும் சட்ட ரீதியான கடமைகள்** பொதுவாக சிறுவர்கள் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் முறைசாரா பொருளாதாரத்தின் ஒரு அம்சமாகவே பார்க்கப்படுகின்றனர். இதனால் இது தொடர்ந்தும் ஒருநாட்டினுடைய சட்டதிட்ட நோக்கங்களிற்கு வெளியே இருப்பதனையே நினைவுபடுத்துகின்றது. ஏன் குறித்த சட்டங்கள் சிறுவர் தொழிலாளர்களுக்கும் பொதுவானதாகவே இருக்கின்றது. பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நாடுகள் சர்வேதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் இல 182வது சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர் தொழிலாளர்கள் என்ற மோசமான கருத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளன. ஆனால் சிறுவர்களுக்கான மோசமான வேலைகளை பட்டியல்ப்படுத்துவதற்கு பெரும்பாலானவர்கள் உடன்படவில்லை. மேலும் 16-

17 வயதிற்கிடைப்பட்டவர்களை wfcl மூலம் பாதுகாப்பு பெறுவதற்கு உள்வாங்கப்படவில்லை.

4. **அமுலாக்கம் மற்றும கண்காணிப்பு** பெருமளவான தொழிலாளர்களுக்கு தேவையான வளங்களானவை பற்றாக்குறையாக காணப்படுகின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர் விடயத்தில் மிக பெரிய பிரச்சனையாக காணப்படுவது தனியார் வீடுகளில் வேலை செய்பவர்களது வேலைச் சூழலை கண்காணிப்பதாகும்.

5. **வீட்டு வேலைத்கான அங்கிகாரம் இன்மையும் குறைந்தளவான மதிப்பீடும்** சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்களுடைய சூழலானது வீட்டுவேலையில் உள்ள பெரியவர்களுடைய நிலமையுடன் நெருக்கமான தொடர்பை கொண்டிருக்கின்றன. யாருடைய வேலையானது தொடர்ந்து குறைத்து மதிப்பிட்டு மோசமான முறையில் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் யார் அதிகளவான வேலை செய்து குறைந்தளவான சம்பளத்தையும் குறைந்தளவான பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

- இத்தகைய சவால்களை இனங்காண்பதற்கு பங்காளி நிறுவனங்களுடன் பணியாற்ற வேண்டும். இதன்மூலம் வீட்டுவேலைத் தொழிலாளர்களாகவும் அவர்களுடைய நிறுவனங்களும் எந்த எந்த இடங்களில் வினைத்திறனாக பணியாற்றுகின்றன என்பதனை அடையாளப்படுத்த முடியும். உதாரணமாக அமுலாக்கம் மற்றும கண்காணிப்பிலுள்ள சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்களை இனங்காணவும் அவர்களுடைய நிலமையினை கண்காணிப்பதற்கும் அவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதும் அவசியமாகும். நிறுவனமயப்படுத்தப்பட்ட சமூக கண்காணிப்பு அமைப்புக்களை அவசரமாக உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அரச நிறுவனங்கள் வீட்டு உரிமையாளர்கள் மத ரீதியிலான பாதுகாப்பு நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலான ஒத்துளைப்பும் கூட்டுறவு, கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு என்பன கட்டாயம் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அவர்களே சிறுவர் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர் என்பவர்களுடன் தொடர்பில் இருப்பவர்களாகவும் அவை தொடர்பான அறிவினை பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். இங்கே வயதுவந்த வீட்டுவேலைத் தொழிலாளர்கள் குறிப்பாக தங்களுடைய குழந்தைகளுடன் வீட்டுவேலைக்கு செல்பவர்கள் இங்கே பிரதான இடத்தைப் பெறுகின்றனர்.

- இதேபோன்று வீட்டுவேலைத் தொழிலாளர்களாளவும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களையும் வீட்டுவேலை மற்றும் அதனை அங்கிகரித்து வீட்டுவேலையினது முக்கியத்துவத்தை தெரிவிப்பது தொடர்பாக விழிப்புணர்வு

செயற்பாடுகளுக்கு முன் நிற்கின்றன. வீட்டுவேலையானது உண்மையான வேலை என அங்கிகரிப்பதுடன் தேசிய உழைப்பு மற்றும் சமூக ……. வகுப்பில் ஒரு வழிகாட்டியாகவும் இருப்பதுடன் வீட்டுவேலைத் தொழிலில் இருந்து சிறுவர்களை வெளியேற்றுதல் வீட்டுவேலைத் தொழிலுக்கு அனுமதியாது விடல் மற்றும் ' வீட்டுவேலைத் தொழிலில் உள்ள இளவயது தொழிலாளர்களுக்கு சிறந்த பாதுகாப்பு வழங்கல் என்பவற்றுக்கான ஆரம்ப புள்ளியிடலாகவே இது காணப்படுகின்றது..

**பயிற்றுனருக்கான குறிப்புக்கள்**

- இச் செயற்பாடானது சிறுவர் உரிமை மற்றும் சிறுவர் தொழிலாளர் தொடர்பான கலந்துரையாடல் அல்லது செயற்பாட்டுக்கு முன்னதாக இருக்க வேண்டும்.

- சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் தொழிலாளர் தொடர்பான உங்களுடைய நாட்டு சட்டதிட்டங்களினது ஒரு பிரதியை உங்கள் கையிலே வைத்திருக்கவும் (சில சமயம் தொழிலாளர் சட்டத்தில் கூறப்பட்டிருக்கலாம்.)உங்களுடைய நாடு ஒப்புதல அளித்த 4 பிரதான சர்வதேச மாநாட்டு தீர்மானங்கள் தொடர்பில் கண்டறிவதோடு கையேட்டிலே வழங்கப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கவும்

  a. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அறிக்கையில் 138வது சாசனத்தின் பிரகாரம் வேலை செய்வதற்கான ஆக குறைந்த வயதெல்லை

  b. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அறிக்கையில் 182வது சாசனத்தின் பிரகாரம் சிறுவர் தொழிலாளரது மோசமான நிலை

  c. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அறிக்கையில் 189வது சாசனத்தின் பிரகாரம் வீட்டுவேலைத் தொழில்

  d. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரையின் பிரகாரம் சிறுவர் உரிமைகள் என்பது

தேவையான தகவல்களை இணையத் தளங்களிலும் தொழிலாளர் சங்கங்கள் மூலமாகவும் சிறுவர் பிரச்சனைகள் தொடர்பாக பணியாற்றுகின்ற தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் அரச திணைக்களங்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

- இயலுமாயின; power point மூலமாக சுருக்கமான அறிக்கையினை செய்யவும் அல்லது உங்களுடைய நாட்டிலே சிறுவர் மற்றும் சிறுவர் தொழிலாளர்

தொடர்பாக சட்டதிட்டங்கள் என்ன சொல்கின்றன என்பது தொடர்பாக நன்கு அறிந்த ஒருவரை வளவாளராக அழைத்து இதனை மேற்கொள்ளவும். குறித்த power point அனைவருக்கும் விளங்கக் கூடியது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

- நேரம் கிடைப்பவை மற்றும் பங்குபற்றுனர்களது ஆர்வத்தை பொறுத்து படிமுறை2 படிமுறை3 என்பன தவிர்க்கப்படலாம் ஆனால் முக்கிய செய்தியினை கட்டாயமாக தெரியப்படுத்தவும். துலைமைத்துவ பயிற்சிகளுக்கு இச்செயற்பாடு முக்கியமானதாகும்.

**இணைப்பு A1.7** –வீட்டுவேலைத் தொழிலில் உள்ள சிறுவர் மற்றும் இள வயதினரை பாதுகாத்தல். எங்களுடைய சட்டங்களை சர்வதேச சட்ட நடைமுறைகளுடன் ஒப்பிட்டு பாத்தல்

| | |
|---|---|
| | சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அறிக்கையில் 138வது சாசனத்தின் பிரகாரம் வேலை செய்வதற்கான ஆக குறைந்த வயதெல்லை<br>c182வது சாசனத்தின் பிரகாரம் சிறுவர் தொழிலாளரது மோசமான நிலை<br>ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரையின் பிரகாரம் சிறுவர் உரிமைகள் என்பது |

| | |
|---|---|
| சிறுவர் எனப்படுபவர் யார்?<br><br>வீட்டு வேலை தொழிலாளர் எனப்படுபவர் யார? | 18 வயதிற்கு குறைந்த அனைவரும் சிறுவர்களே<br><br>தொழிலாளர் என்ற நிலையின் கீழ் வீட்டு வேலையில் ஈடுபடுகின்ற அனைவரும் வீட்டு வேலை தொழிலாளர்களே<br>• பகுதிநேரமா, முழுநேரமாக, நாள் தொழிலாளி<br>• வேலை இடத்தில் வசிப்பவர்கள், வெளியே வசிப்பவர்கள்<br>• குறித்த நாட்டு, வேற நாட்டு தொழிலாளர்கள் ,குடிபெயர்ந்த தொழிலாளர்கள் |
| அடிப்படை உரிமைகள் | பொருளாதார ரீதியான சுரண்டல்கள், ஆபத்தான வேலைச் சூழல், அவர்களுடைய கல்வியிலே தலையீடு செய்யக் கூடிய வேலைச் சூழல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமையும் காணப்படுகின்றது. அல்லது அவர்களுடைய உடல், உள, மன, ஆன்மீக ரீதியாக பாதிக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கு அவர்களுக்கு முழு உரிமை உண்டு.<br><br>சிறுவர்கள் தங்களது குடும்பத்துக்கு வெளியே பண்ணையில் வியாபார பணிகளை செய்யும் போது அவை அவர்களுக்கு பாதுகாப்பானதாகவும் அவர்களுடைய வளர்ச்சிக்கு பொருத்தமானதாகவும் இருப்பதோடு தேசிய தொழிலாளர் சட்டங்களுக்கு இணங்கியதாகவும் இருக்க வேணடும் |

| | |
|---|---|
| | சிறுவர்களுடைய வேலையானது அவர்களுடைய ஏனைய உரிமைகளை பாதிக்கக் கூடாது. இதனுள் கல்வி கற்பதற்கான உரிமை, ஓய்வெடுப்பதற்கான உரிமை, விளையாடுவதற்கான உரிமை என்பன உள்ளடங்கும்<br><br>அனைத்து வீட்டு வேலை தொழிலாளர்களும் அடிப்படை கொள்கைகள், வேலை உரிமை என்பவற்றை கட்டாயமாக அனுபவிக்க வேண்டும். அதாவது<br>a. ஒன்றிணைவதற்கான கூட்டு பேரம் பேசுவதற்கான சுதந்திரம் அங்கீகரிக்கப்படுதல்.<br>b. கட்டாயப்படுத்தப்பட்ட மற்றும் கட்டட வேலை போன்ற அனைத்து நிலைகளில் இருந்தும் வெளியேற முடிதல்.<br>c. சிறுவர் தொழிலாளரை சிறப்பாக இல்லாமல் ஒழிப்பது.<br>d. வேலை மற்றும் வேலைநிலை என்பவற்றில் பாகுபாடு காட்டுவதை இல்லாமல் செய்தல். |
| வேலைக்கான ஆக குறைந்த வயதெல்லை<br><br>15 வயது | வேலை செய்வதற்கான ஆக குறைந்த வயதானது கட்டாய கல்விக்கான வயதினை விட குறைவாக இருக்காது.<br><br>எவ்வாறாயினும் வேலை செய்வதற்கான ஆக குறைந்த வயது 15ற்கு குறைவாக இருக்கமுடியாது. |
| சில கட்டுப்பாடுகளுடன் 14 வயதாக இருக்கலாம் | எந்த ஒரு நாடு அதனுடைய பொருளாதாரம், கல்வி, வசதி மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் போதுமான முன்னேற்றத்தை கொண்டிருக்காது விடின் குறிப்பிட்ட நிறுவன முதலாளிகள் மற்றும் தொழிலாளிகள் என்பவர்களுடன் ஆரம்பத்திலேயே கலந்தாலோசனை செய்து தொழிலுக்கான ஆக குறைந்த வயதினை 14 ஆக கொள்ளலாம். ஆனால் இந்த மாநாட்டின் பயன்பாடு குறித்த அவ் அறிக்கையில் உள்ளடங்கும்.<br>a. அவ்வாறு செய்வதற்கான காரணங்கள்<br>b. குறிப்பிட்ட திகதியில் இருந்து அது தன்னுடைய உரிமைகளை பெறுவதற்கு குறிப்பிட்ட விதிகள் |
| ஆபத்தான வேலைக்கு வயது18 | எந்த ஒரு வேலைக்கும் அனுமதிக்கப்படுவதற்கான ஆககுறைந்த வயது அல்லது அதன் தன்மை, அது இடம் பெறும் சூழ்நிலைகளில் அவர்களது உடல் ஆரோக்கிம் பாதுகாப்பை பாதிக்கும் வாய்ப்புக்கள் காணப்படின் 18 வயதிற்கு குறைந்தவர்களை அவ் வேலைக்கு அனுமதிக்க முடியாது. |

| | |
|---|---|
| குறிப்பிட்ட சில வேலைகளுக்கு கட்டுப்பாடுகளுடன் கூடிய வயதெல்லை 16 | தேசிய சட்டதிட்டங்கள் தகுதி வாய்ந்த அதிகாரசபைகள் என்பவற்றுக்கு இணங்க முதலாளி தொழிலாளர் சார் அமைப்புக்களுடன் கலந்தாலோசனை செய்த பின்னர் 16 வயதிலிருந்து கட்டுப்பாடுகளுடன் கூடிய முறையின் அடிப்படையில் குறிப்பிட்ட சில வேலைகளுக்கு அவர்களை அனுமதிக்க முடியும். ஆயினும் குறித்த தொழிலில் ஈடுபடும் இளைஞர்களது உடலநலம், பாதுகாப்பு மற்றும் அவர்களுடைய நலன்கள் அனைத்தும் பாதுகாப்பதோடு குறித்த தொழில் தொடர்பில் போதியளவான பயிற்சிகள் மற்றும் அறிவுரை என்பவற்றை வழங்கிய பின்னர் அவர்களை குறித்த வேலைக்கு அனுமதிக்க முடியும். |
| C189ல் வீட்டு வேலை | ஒவ்வொரு அங்கத்தவர்களும் உள்நாடட்டு தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச வயதெல்லையை நிறுவ வேண்டும்<br>சரியான குறைந்த வயது உறுப்புரை, 1973(இல138) சிறுவர் தொழிலாளர்களது மோசமான சூழ்நிலை உறுப்புரை 1999(இல182)<br>அத்துடன் பொதுவான தொழிலாளர்களுக்கு தேசிய சட்டதிட்டங்களால் ஒழுங்கமைக்கப்பட்டதை விட குறைவாக நிறுவ முடியாது |
| 14 15 மற்றும் 18 வயதிற்கிடைப்பட்ட வீட்டு வேலை தொழிலாளர்கள் | வீட்டு வேலையானது அவர்களுடைய கட்டாய கல்வியை தடுக்கவோ அல்லது அவர்களுடைய மேலதிக கல்விக்கான சந்தாப்பங்களிலோ அல்லது தொழிற் பறிற்சி சார்ந்த விடயங்களிலோ தலையிடாது |

**இணைப்பு A1.7** –வீட்டுவேலைத் தொழிலில் உள்ள சிறுவர் மற்றும் இள வயதினரை பாதுகாத்தல். எங்களுடைய சட்டங்களை சர்வதேச சட்ட நடைமுறைகளுடன் ஒப்பிட்டு பாத்தல்

| | |
|---|---|
| | சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் அறிக்கையில (ILO) மாநாட்டு இல (உ_138) வேலைக்கான குறைந்தபடச வயதெல்லை உ_ 182 சிறுவர் தொழிராளர்களுடைய மோசமான வடிவம் உ_189 வீட்டு வேலை மற்றும் ஐ.நா பேரவையின் சிறுவர்களுடைய உரிமைகள் |

| | |
|---|---|
| வேலையின் வகைகள் | சம்மந்தப்பட்ட முதலாளிகள மற்றும் தொழிலாளர்கள் அமைப்புடன் கலந்தாலோசித்த பின்னர் தேசிய சட்டங்கள் அல்லது ஒழுங்குபடுத்தல்கள் அல்லது தகுதிவாய்ந்த தன்மை ஆகியவற்றை தீர்மானிக்கப்படலாம். |
| 13-15 வயதுடையவர்களுக்கான நிபந்தனைக்குட்படுத்தப்பட்ட வேலை | தேசிய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் 13-15 வரையான நபர்கள் வேலைவாய்ப்பு அல்லது வேலைகளை அனுமதிக்கலாம். இது அவர்களின் உடல் நலத்திற்கோ அல்லது வளர்ச்சிக்கோ தீங்காக இருக்காது.<br><br>புாடசாலையில் தங்கள் வருகைக்கு தங்களின் பங்களிப்பு தகுதி வாய்ந்த அதிகாரியால் அங்கீகரிக்கப்படும் தொழில் சார் நோக்கு அல்லது பயிற்சிதிட்டங்களில் பங்கேற்கப்படுதல் அல்லது பெற்றோருக்கு வழங்கப்படும் அறிவுரைகளில் இருந்து அவற்றின் திறனைப் பாராட்டுதல் போன்றவை அல்ல |
| C182 கட்டுரை 3 (முழுமையான தடை) | மிக மோசமான வடிவய்களில் உள்ள குழந்தைத் தொழிவாளர்கள்<br>• ஆடிமைத்தனத்திற்கான அனைத்து வகையான அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்தை அடிமைத்தனத்திற்கு அடிமைப்படுத்தல். கடனளிப்போர் மற்றும் பாமரத்தனமாகவும் ஆயுதம் ஏந்தும் மோதலுக்கு குழந்தைகளை கட்டாயப்படுத்தல் போன்றன அடங்கும்.<br>• ஆபாச படங்களை தயாரிப்பதற்காகவும் விபச்சாரத்திற்காகவும் ஆபாச படிப்பிற்காகவும் குழந்தைகளை பயன்படுத்தல்.<br>• சுர்வதேச உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்ட மருந்து உற்பத்திகளில் மற்றும் கடத்தல்களிற்காக குறிப்பாக சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு குழந்தைகளை பயன்படுத்தல்.<br>• இயற்கை சூழ்நிலைகளினால் உடல் நலம் பாதுபாப்பு அல்லது குழந்தைகளின் அறநெறியை பாதிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. 3வது சட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள வேலை வகைகளை தேசிய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் அல்லது சம்மந்தப்பட்ட முதலாளிகள் மற்றும் ஊழியர்களின் அமைப்புகளுடன் தகுந்த அதழகாரிகளால் நிர்ணயிக்கப்படும். |

| | |
|---|---|
| கல்வியின முக்கியத்துவம் | ஒவ்வொரு உறுப்பினரும் கல்வியின் முக்கியத்துவத்தினையும் குழந்தைகளுக்கு அது எவ்வாறு பயன்படுத்த படுகின்றது என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். ஒரு நாடு குறிப்பிட்ட கால வரையறைக்குள் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.<br><br>a. குழந்தை தொழிலாளரின் உழைப்பில் இருந்து அவர்களை அகற்றவும் சமூகத்தில் குழந்தைகள் மறுகட்டமைப்புக்கு பாதுகாப்பினை மற்றும் ஆதரவினை உறுதி செய்தல்.<br>b. சிறுவர் உழைப்பில் இருந்து சில போசமான வடிவங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட சிறுவர்களுக்கு இலவச கல்விக்காக பாடசாலைகளுக்கு அனுப்புதல மற்றும் பயிற்ச்சி மூலம் திறன்களை வழங்குவதற்கான வாய்ப்புக்களை அளித்தல்.<br>c. கடுமையாக பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவி செய்தல்.<br>d. பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் உள்ள பெண்களை விசேடமாக கவனத்தில் கொள்ளல்<br><br>18 வயதிற்கு உட்பட்ட மற்றும் குறைந்த படச வயதிற்கு மேற்பட்ட வயதினராக உள்ள வீட்டு தொழிலாளர்களால் செய்யப்படும் வேலைகளை குறைப்பதோடு கல்வி கற்பதில் திறன் மற்றும் தொழிற் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ILO மாநாட்டு இல உ138 (வேலைக்கான குறைந்தபடச வயதெல்லை)ILO C182 சிறுவர் தொழிராளர்களுடைய மோசமான வடிவம் c189 (உள்நாடடு வேலை) மற்றும் ஐ.நா பேரவையின் சிறுவர்களுடைய உரிமைகள(CCR) |

| | |
|---|---|
| வேலை நேரங்கள் மணித்தியாலங்கள்<br><br>அனைத்து விதமான முறைகேடுகளுக்கும் எதிரான பாதுகாப்பு<br><br>C182 | ஒவ்வொரு வயதினருக்குமான வேலை நேரம் மற்றும் வேலைக்கான கோட்பாடுகள் பற்றி தொழிலாளிகள் முதலாளிகள் அமைப்புகளுடன் கலள்தாலோசித்து தகுதி வாய்ந்த அதிகாரியினால் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும்.<br><br>தவறாக நடத்தப்படும் வன்முறை மற்றும் வன்முறைக்கு எதிரான பாதுகாப்புக்களை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு பொறுப்பாளரும் நடவடிக்கை படுக்க வேண்டும்.<br><br>தொழிலாளர்கள் பொதுவாக நியாயமான வேலைகள் மற்றும் வேலை நிலமைகள் ஆகியவற்றை அனுபவிக்கிறார்கள். மற்றும் அவர்களின் தனியுரிமைகளை மதிக்கும் வீடு மாதிரியான நிலமைகளிலும் வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த ஒவ்வொரு வகுப்பினருக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| தனியார் வேலை வாய்ப்பு நிறுவனம் (189) | தனியார் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் செயற்பாட்டை சீர்ப்படுத்தல்.<br><br>உள்நாடடு தொழிலாளர்களுக்கு புகார்களை விசாரணை செய்வதற்கு தேவையான இயந்திரங்களை வழங்கல். |
| செயல்படுத்தல்<br><br>(உ_182)<br><br>தகுதி வாய்ந்த அதிகாரம்(182)<br><br>கண்காணிப்பு (உ_182) | ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மாநாட்டிற்கு அமுல்படுத்தக்கூடிய விதிமுறைகளை அமுலாக்க தேவையான அசயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.<br><br>ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மாநாட்டிற்கு ஆன விதியை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிக்க வேண்டும்.<br><br>ஒவ்வொரு உறுப்பினரும் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் நிறுவனத்துடன் ஆலோளனை செய்த பின்னா் இந்த பேரவைக்கு இட்டுச் செல்லும் விதியை நடைமுறைப்படுத்த கண்காணிப்பதற்கான சரியான வழிமுறைகளை நிறுவ வேண்டும் அல்லது குறிப்பிட வேண்டும். |

**செயற்பாடுA1.8- வீட்டு வேலை தொழிலில் சிறுவர்களை அனுமதிப்பதை நிறுத்தலும் வீட்டு வேலை தொழில் உள்ள இள வயதினரை பாதுகாத்தலும் : நானும் எனது நிறுவனமும் இதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமா? ஏன்?**

**இலக்கு** - வீட்டு வேலை தொழிலில் இருந்து சிறுவர்களை நிறுத்தல் தொடர்பிலும் இளம் வீட்டு வேலை தொழிலாளர்களை பாதுகாத்தல் தொடர்பிலும் வீட்டு வேலை தொழிலாளர்கள் அது சார்ந்த நிறுவனங்களினதும் வகுபினம் என்ன என்பதை ஆராய்தல்

**கையேடு**

- **H1.1**- சிறுவர் தொழிலாளர் என்றால் என்ன?
- **H1.2**- வீட்டு வேலை தொழிலில் சிறுவர் தொழிலாளர் என்றால் என்ன?
- **H1.3**- சிறுவர் உரிமை சிறுவர் தொழிலாளர் மற்றும் வீட்டு வேலை தொழிலில் உள்ள சிறுவர் மற்றும் இளவயதினர் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச சட்டதிட்டங்கள்

**பொருட்கள்-**

- வர்ண அட்டைகள்/குழுவேலைக்கான பாதியாக்கப்பட்ட A4தாள் மாக்கர்கள்
- flip chart, board,tape

**படிமுறை-**

- குழுவேலையும் பொதுவான கலந்துரையாடலும்

**படிமுறை 1 குழுவேலை 45 நிமிடம்**

1. பயிற்சியாளர் பயிற்சியின் நோக்கம் தொடர்பில் விளக்கவேண்டும். அத்துடன் முன்னைய கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டதையும் வீட்டு வேலை தொழிலில் சிறுவர்கள் தொடர்பாக உள்ள பிரச்சனைகள் பற்றி மீள நினைவுபடுத்த வேண்டும். அத்துடன் சிறுவர் வீட்டு வேலை தொழிலாளர்களை நிறுத்தல் மற்றும் வீட்டு வேலை தொழிலில் உள்ள இளவயதினரை பாதுகாப்பது தொடர்பில் ஒரு வீட்டு தொழிலாளியாகவோ அல்லது அத்தகைய அமைப்பு சார் ஒரு அங்கத்தவராகவோ அவர்களுடைய வகிபாகம் என்ன என்பது தொடர்பில் பயிற்சியாளர் பங்குபற்றுனர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாகவும் அவர்களது சிந்தனைக்கு விருந்ளிக்கும் விதமாகவும் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

2. பங்குபற்றுனர்களை 5-6 பேர் கொண்ட குழுக்களாக பிரிக்க வேண்டும். குழுக்கள் தங்களுக்கென மதிபபீட்டாளர் ஒருவரையும் அறிக்கை இடுபவர் ஒருவரையும்

நியமிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஒரே நிறத்தையுடைய 15 அட்டைகளை/ 15 A4 தாளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. குழுக்கள் பின்வருவன தொடர்பாக கலந்துரையாடி தங்களுடைய கருத்துக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

a. வீட்டு வேலை தொழிலில் இருந்து சிறுவர்கள் உடனடியாக நிறுத்தப்படுவதற்கான 3 காரணங்கள். அறிக்கை இடுபவர் ஒவ்வொரு காரணத்தையும் தனித்தனி அட்டையில் எழுத வேண்டும்.

b. வீட்டு வேலை தொழிலாளர்களையும் அவர்கள் சார்ந்த அமைப்புகளையும் வீட்டு வேலை தொழிலில் இருந்து சிறுவர்களை நிறுத்துவதற்கும் வீட்டு வேலை தொழிலில் உள்ள இளவயதினரை பாதுகாப்பதற்கும் அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டுமா? ஆம்/இல்லை. உங்களுடைய கருத்தை விபரிக்கவும்.

c. வீட்டு வேலை தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த அமைப்புக்களால் குறிப்பாக எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

1. தனிப்பட்ட வீட்டு வேலை தொழிலாளர்களாக(அவர்களுடைய குடும்பத்தில் வேலை இடத்தில் சமூகத்தில்)
2. வீட்டு வேலை தொழிலாளர் சார் அமைப்பு ரீதியாக

மீதமுள்ள 12 அட்டைகளைப் பயன்படுத்தி ஒரு கூட்டிற்கு ஒரு நடவடிக்கை என்றவாறு எழுதிக் கொள்ளவும். தனிப்பட்ட நடவடிக்கைக்கு 1எனவும் அமைப்பு ரீதியான நடவடிக்கைக்கு 2 எனவும் அட்டையில் மேலே குறிப்பிடவும்.

**படிநிலை2 - அறிக்கையிடலும் பொதுவான கலந்துரையாடலும்**

4. பயிற்சியாளர் அறிக்கை இடுபவர் ஒருவரிடமிருந்து வினா a ற்கான பதில் அடங்கிய அட்டையினை கோர வேண்டும். ஏனைய அறிக்கை இடுபவர்களும் அதே முறையில் தங்களுடைய பதில் அட்டைகளை வழங்க வேண்டும். தொடர்ந்து பயிற்சியாளர் பொதுவான ஒரு அடிப்படையில் அட்டைகளை ஒன்றாக்கி அவற்றை குறித்த board இல் காட்சிப்படுத்த வேண்டும். அனைத்து அட்டைகளையும் காட்சிப்படுத்திய பின்னர் பயிற்சியாளர் பங்குபற்றுனர்களிடம் வேறு விதமான கருத்துக்கள் கூற விரும்புகிறீர்கள்/மேலதிக விடயங்களை இணைக்க விரும்புகிறீர்களா? என கேட்க வேண்டும்.

5. வினா bற்கு குழுக்கள் எவ்வாறு பதிலளித்தன என்பது தொடர்பில் பயிற்சியாளர் வினாவ வேண்டும். அவர்களிடையே வேறுபட்ட கருத்து இருப்பின் அவர்கள் ஒரு நடுநிலையான முடிவுக்கு வரும் வரை விவாதத்தை தொடரலாம்.

6. வீட்டு வேலை தொழிலாளர்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியாக அவர்களுடைய குடும்பத்திலே, சமூகத்திலே குறிப்பிடப்படுபவற்றை காட்சிபலகையின் ஒரு பக்கத்திலும் வீட்டு வேலை தொழிலாளர் சார்பான அமைப்புகள் குறிப்பிடுபவற்றை காட்சிபலகையின் மறு பக்கத்திலும் காட்சிப்படுத்தும் படி பயிற்சியாளர் அறிக்கை இடுபவரிடம் கோர வேண்டும்

7. பங்குபற்றுனர்கள் தனிப்பட்டவர்கள் எடுக்ககூடிய நடவடிக்கைகள் தொடர்பான குறிப்பிட்ட அட்டைகளை கலந்துரையாடும் அதே வேளை பயிற்சியாளர் பின்வருவன தொடர்பாக தேவையானவற்றை ஒன்று சேர்க்க வேண்டும்.

- முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யதார்த்தபூர்வமானவையா அடைய கூடியவையா?
- சாத்தியமுள்ள தடைகள் எவை?
- இது தொடர்பாக பங்குபற்றுனர்களிடம் வேறு கருத்துக்கள் உள்ளனவா என பயிற்சியாளர் ஆராய வேண்டும்.

8. பங்குபற்றுனர்கள் அமைப்பு ரீதியாக எடுக்ககூடிய நடவடிக்கைகள் தொடர்பான குறிப்பிட்ட அட்டைகளை கலந்துரையாடும் அதே வேளை பயிற்சியாளர் பின்வருவன தொடர்பாக தேவையானவற்றை ஒன்று சேர்க்க வேண்டும்.

- முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யதார்த்தபூர்வமானவையா அடைய கூடியவையா?
- சாத்தியமுள்ள தடைகள் எவை?
- இது தொடர்பாக பங்குபற்றுனர்களிடம் வேறு கருத்துக்கள் உள்ளனவா என பயிற்சியாளர் ஆராய வேண்டும்.

9. பயிற்சியாளர் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு கலந்துரையாடல் தொடர்பாக சுருக்கமாக கூறவேண்டும். தொடர்ந்து பயிற்சியின் மூலம் குறிப்பிட்டதன் பிரகாரம் வீடடுவேலை தொழிலாளர்கள் மற்றும் அமைப்புக்கள் சிறுவர் தொழிலாளர்களை வெளியேற்றவும் இளவயது வீட்டு வேலை தொழிலாளர்களை பாதுகாக்கவும் எடுக்ககூடிய வினைத்திறனான நடவடிக்கை தொடர்பாக ஆராய வேண்டும்.

## முக்கிய செய்தி

- சிறுவர்களுடைய மிக முக்கியமான அடிப்படை உரிமைகளானவை மறுக்கப்படுகின்றமையினால் சிறுவர் தொழிலாளர்கள் அகற்றப்பட வேண்டும். கல்வி கற்பதற்கான உரிமை மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை இது சிறுவர்கள் தங்களுடைய திறன்களை வாழ்க்கை வேலை என்பவற்றில் வளர்த்து கொள்ள தடையாக இருப்பதோடு அவர்களை தங்களது குடும்பம், சமுதாயம், சூழல் என்பவற்றிற்கு ஒடடுமொத்தமாக செய்ய செய்கிறது ஆகவே சிறுவர் தொழிலாளர்கள்
    - இது அடிப்படை மனித உரிமையுடன் தொடர்புபட்ட ஒன்று
    - பால்நிலை சமத்துவத்திற்கான சவால்
    - ஆட்கடத்தல் தொடர்பான பிரச்சனை
    - வறுமை மற்றும் ஏனைய காரணிகளே பெரியவர்களை வெளியேற வைக்கின்றது.( வறுமை மற்றும் ஏனைய காரணிகளே தொழிலில் தொடர்ந்து வைத்திருக்க காரணமாகின்றது.)

- வீடடுவேலை தொழிலில் இருந்து சிறுவர்களை வெளியேற்றுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் முயற்சியும் அவசியமானதாகும். குறிப்பாக பெற்றோர், சமூகம், சமயத் தலைவர்கள், அனைத்து மட்டங்களிலும் உள்ள அரச மற்றும் பொது திணைக்களங்கள், தொழில் வழங்குணர்கள், வேலையாட்களும் அவர்கள் சார்ந்த அமைப்புகளும், மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றினது மிக அவசியமான ஒன்றாகும்.

- முதலிலே பாதிக்கப்பட்டவர்கள் வீடடுவேலை தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த அமைப்புகளிற்கு இந்த முயற்சியிலே முக்கிய பங்கு காணப்படுகின்றது. தனிப்பட்ட ரீதியாகவோ/அமைப்பின தலைவர்/உறுப்பினர் என்ற வகையிலோ அவாகள் இவற்றிற்கு கூடிய முக்கியத்துவம் அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

- வீட்டுவேலையிலே உள்ள பொதுவான ஆபத்துக்கள் தொடர்பாகவும் சிறுவர்களுடைய உரிமைகள் மீறப்படுவது தொடர்பாகவும் அவர்களுடைய குடும்பங்களிற்கும், நண்பர்களுக்கும், சமூகத்தில் உள்ள ஏனையவர்களுக்கும் அது தொடர்பான விழிப்புணர்வுகளை அதிகரிதத்தல்.

- அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சனைகளை ஒன்றிணைத்து உங்களது நிகழ்ச்சி நிரலிலே அதற்கு முக்கியமான ஒரு இடத்தை அளிக்க வேண்டும். (பிரச்சார வேலை மற்றும்

அதற்கான இடவசதியை வழங்குவது சிறுவர் மற்றும் இளவயது வீட்டுவேலை தொழிலாளர்களை உங்களது அமைப்பில் உறுப்பினராக இணைய ஊக்கப்படுத்துவது.

- சிறுவர் மற்றும் இளவயது வீட்டுவேலை தொழிலாளர்களை பாதுகாப்பவர்களையும் இனங்கண்டு குறிப்பாக அவர்களுடன் அயல் சுற்றுபுறங்களில் உள்ளவாகளுடனும ் பணிபுரியுங்கள்

**Tackling child labour in domestic work. Tamil transilated version. page 85 to 123**

**செயற்பாடு- 2.1 வீட்டு வேலைக்கு சிறுவர்கள் வருவதை நிறுத்த முடியுமா?**

**இலக்கு** - வீட்டு வேலையில் சிறுவர்கள் வருவதை நிறுத்துகின்ற இலக்கினை அடைய முடியுமா?

வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்களை நிறுத்த முற்படும் போது ஏற்படும் சவால்களை அடையாளம் கண்டு கொள்ளல்.

**நேரம்- 100 நிமிடம்**

**கையேடு**

- H2.1 உடனடி செயற்பாடு! வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்களை நிறுத்தல் மற்றும் அவர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தல்

**தேவையான பொருட்கள்**

- ஒவ்வொரு குழுவின் தலைவருக்கும் பிலிப் சாட் தாள்(flip chart paper) மற்றும் மாக்கர்கள் வழங்கப்படுதல்.
- பங்குபற்றுனர்களுக்கான அறிக்கைப் படிவ பிரதி மற்றும் பேனைகள்

**செயற்பாடு**- பொதுவான கலந்துரையாடலும் குழு வேலையை மேற்கொள்தலும்

**படிமுறை - 1 40 நிமிடம் குழு வேலை**

1. பயிற்சியாளர் செயற்பாட்டினுடைய நோக்கம் தொடர்பாக விளக்கமளித்தல். முன்னைய கலந்துரையாடலில் கலந்துரயாடப்பட்ட வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பாக ஒரு சில விடயங்களை நினைவுபடுத்துவதுடன் குறிப்பாக வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்களை உருவாக்கும் அதற்கான காரணிகளான இழுவிசை மற்றும் தள்ளுவிசை காரணிகளையும் நினைவுபடுத்துவர்.( H1.2, A1.2மற்றும் A1.3) பங்குபற்றுனர்கள் அத்தியாயம் ஒன்றினுடாக போகவில்லை என்றால் (அத்தியாயம் இரண்டுக்கான வழிகாட்டிப் பக்கத்தை பார்க்கவும் -பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு)

2. பங்குபற்றுனர்கள் 5-8 நபர்கள் அடங்கிய குழுக்களாக பிரிக்கப்படுவர். குழுக்கள் தங்களுக்கென மதிபபீட்டாளரையும் அறிக்கை இடுபவரையும் நியமிக்க வேண்டும்.

3. குழுக்கள் பின்வரும் வினாக்களை கலந்துரையாடி அதற்கு பதிலளிப்பர்.
    - வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்கள் ஏன் வெளியேற்றப்பட வேண்டும்? 3 காரணங்கள் தருக
    - வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்களை நிறுத்தல் என்பதை இப்பொழுது அடைய முடியுமா? ஆம் இல்லை. உங்களது விடைகளை தெளிவுபடுத்துக
    - வீட்டு வேலையில் ஈடுபடும் சிறுவர் தொழிலாளர்களை நிறுத்துதல் போராட்டத்தில் உள்ள 3 சவால்களும் என்ன?

4. கீழ்வருகின்ற படிவத்தின் அடிப்படையில் அறிக்கையாளர்கள் பிலிப் சாட் தாளில்(flip chart paper) குழுவினுடை விடைகளை எழுதுவர்.

**படிமுறை - 2 60நிமிடம் - பொதுவான கலந்துரையாடலும் அறிக்கையிடலும்**

5. அறிக்கையாளர்கள் பிலிப் சாட் தாளை சுவரிலோ கரும்பலகையிலோ ஒட்டுவர். வினாக்களை குழுவினுடைய விடைகளை கலந்துரையாடுமாறு பயிற்றுவிப்பாளர் குறிப்பிடுவர். தொடர்ந்து ஏனைய குழுவினுடைய விடயங்களை விபரிக்குமாறு பயிற்றுவிப்பாளர் ஊக்கமளிப்பர். வீட்டு வேலையில் ஈடுபடும் சிறுவர் தொழிலாளர்கள் ஏன் அதிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பதற்கான பிரதான காரணங்களை பயிற்றுவிப்பாளர்களுடைய ஒருமித்த கருத்தாக பெற்றுக் கொள்ளல்.

6. அறிக்கையாளர்கள் தொடர்ந்து வினாக்களுக்கான தமது குழுவினுடைய பதில்களை விபரிப்பர். குழுக்களுக்கிடையில் ஏதாவது கருத்து வேறுபாடு இருக்குமானால் பயிற்றுனர் எதிர்தரப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை வழங்ககூடியதாக இருக்கின்றார்களா என்று உறுதிப்படுத்துவதுடன் விவாதத்தினை மதிப்பிடுவார். சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளால் ஏற்பட்ட பெறுபேறுகளை சுட்டிக்காட்டி பயிற்றுவிப்பாளர் தனது தொகுப்பினை வழங்குவர் (H2.1இனுடைய பெட்டி 2ஐ பார்க்க)

7. அவர்களுடைய குழுக்களால் அடையாளம் காணப்பட்ட 3 பிரதான காரணங்கள் தொடர்பாக அறிக்கையாளர்கள் விளக்கமளிப்பர் (கேள்வி c) பயிற்றுவிப்பாளர்கள் அறிக்கையாளர்களுடைய பிரதான கருத்தினை வெளியில் எடுப்பதுடன் ஏனைய குழுக்களுடைய விடையங்களையும் விபரிக்குமாறு கேட்பார். சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான ‘போராட்டத்தில் பிரதான

சவால்கள் தொடர்பான பொதுவான கருத்துக்களைப் பெறுவதற்கு அவன்/ அவள் பங்குபற்றுனர்களை ஊக்குவிப்பார்கள்.

8. பயிற்றுவிப்பாளர் முக்கிய செய்திகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக தொகுப்புரை வழங்குவார்கள். அவன்/ அவள் அவர்களுடைய எல்லா செயற்பாடுகளுக்கும் நன்றி கூறுவர்.

## முக்கிய செய்திகள்

- சிறுவர் தொழிலாளர் என்பது தீமை மற்றும் வறுமை நீக்கப்பட்டாலே சிறுவர் தொழிலாளர் வீட்டுத் தொழிலில் ஈடுபடுவதை தவிர்க்கலாம் என்ற கருத்துக்கள் பொதுவாக உண்மையல்ல.
- வறுமையை சிறுவர் தொழிலாளர் உருவாகுவதற்கான காரணம் என குறை கூறுவதை விட வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர் ஈடுபடுவதற்கு அரசியல் சமூக பொருளாதார கட்டமைப்பு மற்றும் கலாசார பாரம்பரியங்கள் என்பன பங்களிப்பு வகிக்கின்றது. என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டியது அவசியமாகும்.
- இளைஞர்களுக்கு நியாயமான சம்பளத்துடன் கூடிய ஆரோகியமான வேலைகள் இருக்குமானால் அவர்கள் அவர்களுடைய பிள்ளைகளை வெளியில் வேலைக்கு அனுப்புவது கணிசமான அளவு குறையும்.
- வீட்டுவேலைத்தொழிலில் இருந்து சிறுவர்களை நிறுத்துதல் என்பதனால் கருதப்படுவது சிறுவர் தொழிலாளருக்கான இழுவிசை மற்றும் தள்ழுவிசை காரணிகளை நிறுத்துவதாகும்.
- பெற்றோர்கள் சமூக மற்றும் மத தலைவர்கள், அரசாங்கம் ஆசிரியர்கள் ,வர்த்தக தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புக்கள், வீட்டு தொழிலாளர்கள் மற்றும் வீட்டு தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் ஏனைய நிறுவனகள் இணைந்து முயற்சி எடுப்பது என்பது ஒரு பெரிய சவாலாகவே உள்ளது.
- 
- சட்டங்கள் பெரும்பாலும் காணப்படுகின்ற போதும் சிறுவர் அநீதி போன்ற சுரண்டல்களை தடுத்தல் மற்றும் கண்காணிப்பு ......... போன்றவற்றில் இந்த சட்டங்கள் பலவீனமாகவே உள்ளன. பொருளாதார மற்றும் அரசியல் விடயங்களும் மேம்படுத்தப்பட வேண்டும்.

**செயற்பாடு- 2.1**

**குழுவேலைக்கான அறிக்கைப் படிவம் வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்களை நிறுத்த முடியுமா?**

| | | | |
|---|---|---|---|
| கேள்வி a) வீட்டு வேலையிலிருந்து சிறுவர் தொழிலாளர்கள் ஏன் வெளியேற்றப்பட வேண்டும் | காரணம் 1 | காரணம் 2 | காரணம் 3 |
| கேள்வி b) வீட்டு வேலையிலிருந்து சிறுவர் தொழிலாளர்களை என்பதை இப்பொழுது அடைய முடியுமா? | ஆம் | இல்லை | ஏன் |
| கேள்வி c) சிறுவர் தொழிலாளர்களை வீட்டு வேலையிலிருந்து நிறுத்தல் போராட்டத்தில் உள்ள 3 சவால்களும் என்ன? | சுவால் 1 | சுவால் 2 | சவால் 3 |

**பயிற்றுவிப்பாளர்களுக்கான குறிப்புகள்**

செயற்பாடு A2.4 ற்க்காக பங்குபற்றுனர்களால் குறிப்பிடப்பட்ட சவால்கள் தொடர்பாக பட்டியலிட்டு வைத்திருப்பதை உறுதிப்படுத்தவும்

**செயற்பாடு- 2.2 வீட்டு வேலையில் உள்ள சிறுவர் தொழிலாளர்களை நிறுத்தல் மற்றும் இளம் வீட்டுவேலை தொழிலாளர்களை பாதுகாத்தல் : பொறுப்புக்களினுடைய வட்டம்.**

**இலக்கு-** வீட்டு வேலையில் இளம் மற்றும் சிறுவர் தொழிலாளர்களுடைய தேவைகள் பற்றி ஆழமாக ஆராய்ந்து விளங்கிக் கொள்ளுதல்.

இந்த தேவைகள் சட்டத்துக்கான முக்கிய நபர் மற்றும் குழுக்களுடைய பொறுப்புக்களை அடையாளம் காணுதல்

**நேரம் 120 நிமிடங்கள்**

**கையேடு**

- H1.2 வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர் என்றால் என்ன?
- H1.3 சிறுவர்களுடைய உரிமைகள் : வீட்டு வேலையில் இளைஞர் மற்றும் சிறுவர்கள் அத்துடன் சிறுவர் தொழிலாளர்களுடைய சர்வதேச மற்றும் தேசிய சட்டங்கள்

**தேவையான பொருட்கள்**

- படிமுறை 2ற்காக தெரிவு A: பொறுப்புக்களுடைய வட்டம் உள்ளடங்கிய வரைபடம் உள்ளடங்கக்கட்ட பிரதி நீண்ட பிலிப்சாட் தாள் பேனைகள் மற்றும் மாக்கர்கள் போன்றவற்றை பங்குபற்றுனர்களுக்கு வழங்குவதற்காக வைத்திருத்தல்.
- படிமுறை 2ற்காக தெரிவு B : கீழுள்ள அறிக்கையின் படி அறிக்கையாளர்களுக்கான நீண்ட பிலிப்சாட் தாளை தயார்ப்படுத்தல் மாக்கர்கள்.

**செயல்முறை**

ஆழமாக சிந்தித்தல் தனியான பயிற்ச்சி அல்லது குழுவேலை பொதுவான கலந்துரையாடல்.

**படிமுறை-1- (40நிமிடங்கள்) ஆழமாக சிந்தித்தல்**

1. பயிற்றுவிப்பாளர் செயற்பாட்டினுடைய செயல்முறைகள் இலக்குகளை விபரித்தல். அவன் /அவள் சிறுவர் உரிமைகள் மற்றும் வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்கள் எனறால் என்ன? என்பது தொடர்பான பங்குபற்றுனர்களுடைய புரிந்துணர்வினை மீளாய்வு செய்த பின்னர் கலந்துரையாடலை ஆரம்பிப்பர். பின்பு அவள்/அவன் வீட்டு வேலையில் இளம் மற்றும் சிறுவர் வேலையபளர்களுடைய கவலைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக அடையாளம் காணுமாறு கேட்டுக்கொள்வார். அத்துடன் யாரெல்லாம் முன்பு வீட்டு வேலை செய்யும் சிறுவர் தொழிலாளர்களாக இருந்தார்களோ அவர்களுடைய அனுபவங்களை மீட்டுப்பார்க்குமாறு கூறுவர்.

2. பயிற்றுவிப்பாளர்கள் அவர்களுடைய கவலைகள் மற்றும் தேவைகளை கரும்பலகையில் குறிப்பிடுவதுடன் அதனை தொகுதிகளாகப் பிரிப்பர். அவன் /அவள் மிகவும் பொதுவாக உள்ள விடயங்களை தவிர்பார். உதாரணமாக கல்வி என்பதை அடிப்படைக் கல்வி மற்றும் விடுமுறைக்காக பயிற்சி என இரண்டாக வகைப்படுத்த முடியும். முக்கியமான பிரச்சனைகளாக இருந்தால் அது போதுமான விடயங்களை உள்ளடங்கியிருப்பது அவன்/அவள் அவைகள் தொடர்பாக பங்குபற்றுனர்கள் கலந்துரையாடுவர்.

3. பயிற்றுவிப்பாளர் தொகுதியாக பங்குபற்றுனர்களுடைய விவாதங்களை தொகுத்து இலக்கமிடுவர்.

## படிமுறை - 02 –பொறுப்புக்களுடைய வட்டத்தினை உருவாக்குதல்

4. இச் செயற்பாட்டிற்க்குள் உள்ளடங்கக்கூடிய நபர்கள் மற்றும் குழுக்கள் அத்துடன் முக்கிய தேவைகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை இனங்கண்டு அவற்றில் முதன்மயானவற்றை இனங்காண்பதற்கு பயிற்றுவிப்பாளர் விளக்கமளிப்பார். அவன் /அவள் மாக்கர்கள் மற்றும் பிலிப்சாட் தாள் மற்றும் மாதிரி வரைபடம் போன்றவற்றை ஒவ்வொரு பங்குபற்றுனர்களுக்கும் வழங்குவர்.

5. பயிற்றுவிப்பாளர்கள் பின்வரும் விளக்கங்களை பங்குபற்றுனர்களுக்கு அளிப்பர்.
   a) ஆழமாக சிந்தித்தல் பகுதியில் அடையாளம் காணப்பட்ட பட்டியலை தொகுதியாக தெரிவு செய்வர்.

   b)உங்களுடைய பிலிப்சாட் தாளில் வரைபடத்தை பிரதி செய்யவும். 1வது வட்டம் உங்களுடைய தொகுதியில் நீங்கள் விரும்பி குறிப்பிட்ட தேவையை அடையாளப்படுத்த வேண்டும்.

   c)அவசரமாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாட்டுகளை சிந்தித்தல். இந்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக முக்கிய நபர்கள் மற்றும் குழுவினுடைய அத்துடன் தேவைகளை அடைவற்காக இது மேற்கொள்ளலாம். முக்கிய சொற்களைப் பயன்படுத்தி இரண்டாவது வட்டத்தை நிரப்பலாம். போதுமான இடம் தாளில் இல்லையெனின் உங்களுடைய தாளின் இடது பக்கத்தில் குறிப்புக்களை எழுதவும்.

d)ஏனைய செயற்பாடுகளை யார் மேற்கொள்கிறார்களோ 2வது வட்டத்தில் குறிப்பிட்ட செயற்பாடுகளில் உள்ளங்கப்படுகின்ற முக்கிய நபர்கள் குழுக்களை 3வது வட்டத்தில் எழுதுக.

e)விரைவாக முடித்ததன் பின்பு பயிற்றுவிப்பாளர்களிடம் உங்களுடைய தாளை கொடுக்கவும்

**தெரிவு- b 40நிமிடம் குழுவேலை**

6. 5-8 பேரை உள்ளடக்கிய குழுக்களாக பங்குபற்றுனர்கள்பிரிக்கப்படுவதுடன் ஒவ்வொரு குழுவும் தங்களுக்கென மதிபபீட்டாளரையும் அறிக்கை இடுபவரையும் நியமிக்க வேண்டும். பயிற்றுவிப்பாளர்கள் சில விடயங்களில் குழுவாக கவனம் செலுத்துமாறு ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு விடயத்தை வழங்குவார்.

7. குழு கலந்துரையாடல் மற்றும் ஒப்புதல்
   - ஒதுக்கப்பட்ட தொகுதியின் கீழ் 3 முக்கிய வசனங்கள்
   - ஒவ்வொரு தேவையை அடைவதற்கு என்ன செயற்பாடுகள்/அளவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
   - யுார் அந்த முக்கிய நபாகள் முக்கிய குழுக்கள் நிறுவனங்கள் மத ஸ்தாபனங்கள். இந்த செயற்பாடுகள்/அளவீடுகள் மேற்கொள்வதற்கான அந்நிறுவனங்களின் பொறுப்புக்கள

   .

8. அறிக்கையாளர்கள் பிலிப்சாட் பேப்பரில் கீழுள்ள படிவத்தினை நிரப்பி கரும்பலகையில் ஒட்டுவர்.

**படிமுறை-3- (40நிமிடங்கள்) அறிக்கையிடலும் பொதுவான கலந்துரையாடலும**

9. **தெரிவு-a** பயிற்றுவிப்பாளர்கள் வேறுபட்ட குழுக்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பங்குபற்றுனர்களிடம் அவர்களுடைய வரைபடத்தை அறிக்கை செய்யுமாறு கேட்பார். அவன்/அவள் அந்த குழுவிலுள்ள ஏனையவர்களை வரைபடம் தொடர்பாக கருத்துக்களை வழங்குமாறு உற்சாகப்படுத்த வேண்டும். தோடர்ந்து அவன்/அவள் பங்குபற்றுனர்களிடம் அவர்களை இந்த வட்டத்தினுடைய வரைபின் படி எந்த இடத்தில் இருக்கிறார்கள் என கேட்பதுடன் அதற்கான காரணங்ளையும் கேட்பார்.

**தெரிவு-b** பயிற்றுவிப்பாளர்கள் அவர்களுடைய குழுவினுடைய பிலிப்சாட் தாளை தெளிவுபடுத்துமாறு சில அறிக்கையாளர்களிடம் கேட்பார். தொடர்ந்து பயிற்றுவிப்பாளர்கள் பிலிப்சாட் தாளினுடைய 3வது நிரலில் தொடர்பான கருத்துக்ககளை வழங்குமாறு குழுவினுடைய உறுப்பினர்களை அழைப்பதுடன் அவர்கள் அவர்களுடைய நிறுவனங்களில் ஒரு தனிநபராக மற்றும் குழுவாக எந்தப் பகுதிக்கு இருக்கிறார்கள் என்பதை தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்வார்கள். இது மிகவும் வினைத்திறனாக இருக்கும்.

10. பயிற்றுவிப்பாளர் பங்குபற்றுனரிடம் இந்த செயற்பாட்டிலிருந்து முடிவுகளை எடுக்க முடியும் என வினாவுவார். பின்பு அவன்/அவள் கொடுக்கப்படுகின்ற முக்கிய செய்திகளின் அடிப்படையில் தொகுப்புரை வழங்குவார்.

## முக்கிய செய்திகள்

- சிறுவர் தொழிலாளர் சூழ்நிலைகளில்(சட்டரீதியான ஆகக் குறைந்த வயதுக்குகீழ் அவர்களுடைய பௌதீக மனநல ரீதியான காயங்கள் மற்றும் அனர்த்த நிலைகள்) சிறுவர்களின் வேலையினுடைய தேவைகள் மற்றும் கவலைகள்
    - முதலில் பாதுகாப்பு மற்றும் அவசரமான வெளியேற்றம் குறிப்பாக wfcl சூழ்நிலைகளில்
    - அவர்களுடைய வாழ்க்கையை மீளகட்டியெழுப்புவதற்காக ஆதரவளித்தல் மற்றும் பாதுகாப்பான இடம்
    - கல்வி மற்றும் பயிற்ச்சிகள்
    - அவர்களுடைய குடும்பத்திற்கு திரும்பிச் செல்லுதல் மற்றும் தேவையேற்படின் ஆற்றுப்படுத்தல்கள் வழங்குதல்
    - குறிப்பிட்ட வளர்தவர்களை இனங்கண்டு அவர்கள் மூலம் இளவயதினர்களுக்கு உதவுதல் மற்றும் வழிநடத்தல்
- இளம் வீட்டு வேலைக்காரர்களின் (14, 15-17 க்கு இடைப்பட்டவர்கள்) தேவைகள்
    - அவர்களுடைய முதலாளிகளால் உரிய முறையில் நடாத்தப்பட வேண்டும்.
    - நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டும்.
    - பாடசாலை செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன் அவர்கள் அவர்களுடைய வீட்டு வேலையைச் செய்வதற்கான நேரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
    - ஓய்வு, நித்திரை மற்றும் மன மகிழ்ச்சிக்கான நேரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

- ஓய்வெடுப்பதற்கும் நித்திரை கொள்வதற்கும் வசதியான பாதுகாப்பான சுத்தமான இடம் காணப்படுதல்.
- அவர்களுடைய குடும்பத்துடன் வசித்தல் அல்லது அப்படியில்லையெனில் அவர்களை குடும்பத்தினர் வழக்கமாக சென்று பார்த்தல்.
- போதுமான உணவு கிடைக்ககூடியதாக இருத்தல்.
- ஒழுக்கமான மற்றும் சுத்தமான ஆடைகளைக் கொண்டிருத்தல்.
- சுரண்டல் மற்றும் காயப்படுத்துகின்ற வேலைகளில் இருந்து பாதுகாக்கப்படுதல்.
- சிறந்த உடல் நலத்துடன் இருத்தல் மற்றும் அவர்கள் நோயற்று இருக்கும் பொழுது உரிய முறையில் பராமரிக்கப்படுதல்.
- அவர்கள் தங்களுடைய விருப்பங்களையும் காயப்படுத்தப்பட்டதையும் வெளிப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- ஏனைய குழு மற்றும் சிறுவர்களுடன் இணைந்து செயற்ப்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல்.
- இவர்களுடைய சொந்த கலாசாரம் மற்றும் ஏனைய கலாசாரங்களை கற்றுக் கொள்ளுதல் மற்றும் பின்பற்றுதல்.
- எல்லா பாலியல் நெருக்கடிகள் மற்றும் துஸ்பிரயோகங்களில் இருந்து பாதுகாக்கப்படுதல்.
- குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இளைஞர்கள் அவர்களுக்கு உதவுதல் மற்றும் அவர்களை வழிப்படுத்தல்.

▪ இந்த தேவைகளை அடைவதற்கு பெரிய சவாலாகவே உள்ளது. பெற்றோர்கள் சமூக மற்றும் சமய தலைவர்கள் எல்லா மட்டங்களிலும் உள்ள அரச மற்றும் பொது அதிகார சபைகள், சிறுவர்கள் பெரியவர்கள் மற்றும் மனித உரிமைக்கான சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் வர்த்தக தொழிற்ச்சங்கங்கள், தொழில் வழங்குனர்கள், சட்டத்தரணிகள், மற்றும் ஏனையவர்களுடைய கருத்தொருமித்த முயற்சிக்கு இது தேவையானாகும். ஆகையால் வீட்டு வேலையில் இருந்து சிறுவர் தொழிலாளர்களை நிறுத்துதல் மற்றும் இளம்

தொழிலாளர்களைப் பாதுகாத்தல் போன்றன வேறு மட்டங்களில் உள்ள வேறுபட்ட களங்களில் கூட்டிணைந்த அணுகுமுறையுடன் தொடர்புபடுகின்றது.

- முதலில் வீட்டு வேலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் வீட்டு வேலையில் ஈடுபடும் ஏனைய சிறுவர் தொழிலாளரை நிறுத்துதல் மற்றும் இளம் தொழிலாளர்களைப் பாதுகாத்தல் போன்றவற்றில் முக்கிய பங்கினைக் கொண்டிருக்கின்றனர். உலகினுடைய பல பாகங்களிலுமுள்ள வீட்டு வேலைக்காரர்களின் வாழ்க்கை நிலைகள் மற்றும் அவர்களுடைய கஸ்டங்களிலும் அவர்கள் இந்த சவால்களை முகங்கொடுப்பதற்கு செயற்றிடனுடன் செயற்பட்டமையினால் வெற்றியினை அடைந்துள்ளனர். (கையேடு H2,3 ஐப் பார்க்க- சிறந்த பயிற்சிகள்)

**பயிற்சியாளர்களுக்கான குறிப்பு**

UN மற்றும் ILO மாநாடுகளின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் சிறுவர் என்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தை ஆரம்பத்தில் பங்குபற்றுனர்களுக்கு ஆரம்பத்தில் நிலை நாட்ட வேண்டும். பல நாடுகளின் சட்டத்தின்படி பெரும்பாலும் 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர் என அழைக்கப்படுகின்றனர். வேலைக்கான ஆகக் குறைந்த வயதாக 18 என்பது காணப்படுகின்றது. எப்படியாயினும் ஆசிய/பசுபிக் நாடுகள் உள்ளடங்கலாக சில நாடுகளில் பெரும்பாலும் 14, 15 வயதிலிருந்து சிறுவர் வேலை செய்வதை அனுமதிக்கின்றன. (H1.1 பார்க்க)

சிறுவர் தொழிலாளர்களுடைய மோசமான நிலையிலிருந்து இந்த சிறுவர்கள் குழுவைப் பாதுகாப்பதற்கு பல நாடுகளில் கடினமான நடைமுறைகள் போடப்பட்டுள்ளது. இது அவர்களுடைய பௌதீக, உள, ஒழுக்க நல்வாழ்வுக்கு ஆபத்தை ஏற்ப்படுத்தக்கூடிய வேலையை உள்ளடக்கியுள்ளது. இந்த செயற்பாடு செய்கையில் 2 முக்கிய செயற்பாடுகள் எண்ணத்தில் தோன்றும்.

1. ஆகக் குறைந்த அனுமதிக்கக்கூடிய வயதைவிட குறைந்த வயதை உடைய சிறுவர்கள் வேலை செய்ய முடியாது. அவர்கள் சிறுவர்கள் தொழிலாளர்கள் என்ற சூழ்நிலைக்குள் இருக்கின்றார்கள். அவர்கள் உடனடியாக

வெளியேற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும் சில தடைப்பட்ட வேலைகளை விட சில லேசான வேலைகளுடன் சிறுவர்கள் தொடர்புபடுகின்றார்கள். ஆனாலும் அந்த வேலைகள் அவர்கள் பாடசாலைக்கு சமூகமளிப்பதில் பாதிப்பை ஏற்ப்படுத்துவதில்லை. அத்துடன் அவர்களுடைய சுகாதார பாதிப்பிலும் தலையிடுவதில்லை.

2. யாரெல்லாம் சட்டரீதியாக வேலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்களோ அவர்கள் மோசமான தொழிலாளர் வடிவத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

**செயற்பாடு 2.2**

**சிறுவர் தொழிலாளரை நிறுத்துதல் மற்றும் இளம் வீட்டுத்தொழிலாளர்களைப் பாதுகாத்தல்**

பொறுப்புக்களுடைய வட்டம்



நபர்கள் அல்லது குழுக்களை அடையாளப்படுத்தவும்.

**செயற்பாடு- 2.2**

**சிறுவர் தொழிலாளர்களை நிறுத்துதல் இளம் வீட்டு வேலைக்காரர்களைப் பாதுகாத்தல்.**

குழு வேலை அறிக்கைப் படிவம்

தொகுதி………………………………………………..

| வீட்டு வேலையில் சிறுவர் மற்றும் | இந்த தேவைகளை அடைய என்ன | ஒவ்வொரு செயற்பாட்டிலும் பொறுப்புடைய முக்கிய |
|---|---|---|

| இளைஞர்களுடைய தேவைகள் | செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | நபர்கள் மற்றும் குழுக்கள் யார்? |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

**செயற்பாடு 2.3 வீட்டு வேலையிலிருந்து சிறுவர் தொழிலாளரை நிறுத்துவதில் -- வீட்டுத் தொழிலாளர்களின் வினைத்திறனான சட்டத்தரனிகளாக அவர்களின் பங்கு மற்றும் இளம் சிறுவர் தொழிலாளர்களுக்கான பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அவர்களின் பங்கு**

**இலக்கு-** ஆலோசனைகள் என்றால் என்ன சட்டத்தரணிகளின் ருமே என்ன என்பதை விளங்கிக்கொள்ளுதல்.

வீட்டுவேலைச் சிறுவர் தொழிலாளரை நிறுத்துதல் மற்றும் இளம் வீட்டுத்தொழிலாளர்களைப் பாதுகாப்பதில் எவ்வாறு வீட்டு வேலைத்தொழிலாளர்கள் ஒரு வினைத்திறனான சட்டத்தரணிகளாக இருக்க முடியும் என ஆராய்தல்.

நேரம் : 210 நிமிடங்கள்

**கையேடு**

H1.2 வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்கள் என்றால் என்ன?

H1.3 சிறுவர்களது உரிமைகள்

H2.1 உடடின செயற்பாடு: வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்கள் ஈடுபடுவதில் நிறுத்துதல் மற்றும் இளம் வீட்டுத் தொழிலாளர்களுக்கான மரியாதை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

**தேவையான பொருட்கள்**

படிமுறை 1 : மதிப்பீட்டாளர்கள் மற்றும் அறிக்கையிடுபவர்களுக்கான குழு வினாக்களுடைய பகுதி

படிமுறை 2 : ஒவ்வொரு குழுவுக்குமான flip Chat தாள் மாக்கர்.

படிமுறை 3 : தேவையான சம்பவ ஆய்வுப் பகுதிகள் எல்லா குழு உறுப்பினர்களும் சம்பவ ஆய்வுப் பகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**செய்முறை**

- ஆழமாகச் சிந்தித்ததல், குழு வேலை, பொதுவான கலந்துரையாடல், நாடகம் நடித்தல்

**படிமுறை 1 30 நிமிடங்கள்**

1. பயிற்றுவிப்பாளர் ஆழமாகச் சிந்தித்தல் முன்னைய கலந்துரையாடல்களினுடைய முக்கிய விடைகளை நினைவுபடுத்தல் போன்றன தொடர்பாக விளக்கமளிப்பார்.
2. ஆலோசனை மற்றும் வழக்கறிஞர்கள் போன்ற 2 சொற்களுக்கும் இடையிலான வேறுபாட்டை பஙகுபற்றுனர்கள் எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளனர் என பயிற்றுவிப்பாளர் வினவுவார். ஆவன்? ஆவள் பங்குபற்றுனர்களை வரையறுக்கலாம், விாரணம்.˙. உதாரணங்களுடன் வருமாறு கேட்பார். ஆவன்.˙.அவள் பங்குபற்றுனர்களாக ஆலோசனைறினுடைய முக்கியமான கூறுகளைக் கலந்துரையாடி வழிப்படுத்துவதுடன் முக்கிய சொற்களைக் கரும்பலகையில் எழுதுவார்.( கையேடு 0.1 ஐ பார்க்கவும்)
3. முக்கிய சொற்களின் அடிப்படையில் அவன்/ அவள் பல பங்கு பற்றுனர்களுடைய ஒருமித்த கருத்தைப் பார்த்து ஆலோசனை என்ற சொல்லுற்கான வரைவிலக்கணத்தை முன்வைப்பார். இந்த வரைவிலக்கணம் கரும்பலகை/ Flipchart தாளில் எழுதப்படும்.

**படிமுறை 2- 40 நிமிட குழு வேலை**

4. பங்குபற்றுனர்கள் 5-8 நபர்கள் உள்ளடங்கலாக குழுக்கள் பிரிக்கப்படும். ஒவ்வொரு குழுவும் மதிப்பீட்டாளர் மற்றும் அறிக்கையாளர்களைத் தெரிவு செய்வர்.
5. குழு உறுப்பனர்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி தமது பொதுவான கருத்துக்களை முன்வைப்பார்.

    a. பொதுவாக தொழில் வழங்குனர்கள் சிறுவர் வீட்டு வேலைக்காரர்களை நன்றாக நடத்துகின்றார்களா? உங்களுடைய விடைகளை விபரிக்க

    b. வீட்டு வேலை செய்பவருடைய அணுகு.முறை அவர்களுடன் வேலை செய்யும் போது வேறு சிறுவர் அல்லது இளம் வீட்டுத் தொழிலாளர்கள் எவ்வாறு காணப்பட வேண்டும்.

    c. குறித்த சிறுவா் வீட்டுவேலைத்தொழிலாழி முதலாழியினால் துஸ்பிரயோகத்திற்கு அல்லது பாதிப்பிற்க்கு உள்ளாகும் போது அங்கே பணிபுரிகின்ற வீட்டுவேலைத்தொழிலாளா் என்ன நடவடிக்கயினை மேற்க்கொள்ளலாம்? ஏனையவா்களதும் சமூகத்தினதும் அணுகுமுறை எவ்வாறானதாக இருக்கும்? ஏன்?

    d. ஒரு வினைத்திறனான சட்டத்தரணியினுடைய 3 பண்புகள் அல்லது திறன்களைப் பட்டியலிடுக

**படிமுறை- 3 40 நிமிடம் பொதுவான கலந்துரையாடல்**

6. பயிற்றுவிப்பாளர் முதலாவது கேள்விக்கு ஒரு குழுவினுடைய கருத்துக்களைத் தெரிவிக்குமாறு ஒரு அறிக்கையாளரிடம் கேட்பார் ஏனைய குழுக்கள் அதை ஏற்றுக்கொள்கின்றதா இல்லையெனில் ஏன்? அவன்/அவள் பங்குபற்றுனர்களுக்கிடையிலான ஒருமித்த கருத்தினைக் கண்டறிவார்.
7. தொடர்ந்து அவன்/அவள் மற்றய அறிக்கையாளர்களிடம் இரண்டாவது கேள்விக்கான அவர்களுடைய ஒருமித்த கருத்துக்களை வழங்குமாறு மற்றய அறிக்கையாளர் தமது கூறப்பட்டட விடயங்களைக் குறிப்படுவார். இதில் பங்குபற்றுனர்களுக்கிடையில் அந்தக் கருத்துக்கள் தொடர்பில் உடன்பாடு இருப்பின் பயிற்றுவிப்பாளர் 3.. தொடர்வார்.

8. 3 வது அறிக்கையாளர் அவன்/ அவளுடைய குழுவினுடைய … கருத்துக்களை வழங்குதல் ஏனைய குழுக்கள் அதனுடன் உடன்படவில்லையாயின் அவர்களுடைய அறிக்கையாளர்கள் ஏன் என்பதை விளக்கமளிப்பார்கள்.
9. பயிற்றுவிப்பாளர் 13 வது அறிக்கையின்படி 4வது கேள்விக்கான தமது குழுவினுடைய கருத்துக்களை பட்டியல் இடுமாறு கேட்பார். அத்துடன் முக்கியமான சொற்களை கரும்பலகையில் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்வார். ஏனைய அறிக்கையாளர்களும் ஏனைய கருத்துக்களையும் அதில் கேட்பார்கள். பட்டியலானது முழுமைப்படுத்தப்படும் போது பயிற்றுவிப்பாளர் பங்குபற்றுனர்களை இந்த செயற்பாட்டினுடைய அடுத்த படிமுறைகளில் இந்த விடயங்களை நினைவில் வைக்குமாறு கேட்டுக்கொள்வார்.

**படிமுறை 4 நாடகம் 40 நிமிடம் குழுத் தயார்ப்படுத்தல்**

10. பங்குபற்றுனர்கள் 3 குழுக்காளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் மதிப்பீட்டாளர்களைத் தெரிவு செய்வர்.
11. ஒவ்வொரு குழுவுக்கும் சம்பவ ஆய்வு ஒதுக்கப்படும். (Case study) (இணைக்கப்பட்டுளதைப் பார்க்க)
12. அவர்களுடைய நாடகத்தைதிட்டமிட முன்பும் நாடகப் பங்கினை ஒவ்வொருவருக்கும் ஒதுக்க முன்பும் மதிப்பீட்டாளர் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் இந்த சம்பவத்தை விளங்கிக் கொண்டுள்ளனரா என்பதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவன் / அவள் குழுவினுடைய பண்புகளையும் வினைத்திறனான சட்டத்தரணி கொண்டிருக்க வேண்டிய திறமைகள் தொடர்கில் நினைவு படுத்துவார். (9 வது குறிப்பைப் பார்க்க)

**படிமுறை 5 – 60 நிமிட அறிக்கை பொதுவான கலந்துரையாடல் மற்றும் சுருக்கம்**

13. முதல் குழு நாடகத்தை நடித்துக்காட்டுவார் (ஆகக் கூடிய அளவு நேரம் 5-8 நிமிடம்) தொடர்ந்து ஏனைய 2 குழுக்களும் தமது நாடகத்தை நிகழ்த்துவார். ஏனைய பங்குபற்றுனர்கள் அவர்களை அவதானித்து தமது கருத்துக்களைக் குறிப்பிடுவார்.

14. நூலகம் தொடர்பாக இப்படியான கருத்துக்களை பங்குபற்றுனர்கள் கொண்டிருக்கின்றார்கள் என பயிற்சியாளர் வினவுவார். வீட்டுத் தொழிலாளர்களுடைய விவாதம் வசப்படுத்தக் கூடியதா? தொடர்ந்து அவர்கள் கருத்துக்களை வெளிப்பட அமைத்தல். அவர்கள் மிகவும் தயாராக இருந்தார்கள். எண்ணத்தை அவர்கள் அடைந்தார்கள்? அவர்கள் விளைத்திறனான சட்டத்தரணிகளா? என்ன விடயங்கள் மேம்படுத்தப்பட வேண்டும்? யாவெல்லாம் இந்த சம்பவத்தைக் கையாண்ட அனுபவத்தைக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களைத் தங்களுடைய கருத்துக்களைப் பகிருமாறு பயிற்றுவிப்பாளர் வேண்டுகோள் விடுப்பார்.
15. பயிற்றுவிப்பாளர் எல்லாக் குழுக்களுக்கும், அவதானித்துக் கருத்துத் தெரிந்தவர்களுகக்கும் நன்றி கூறுவார். அவன்/ அவள் பங்குபற்றுனரிடம் என்ன பாடத்தை இந்தக் குழுச் செயற்பாட்டிலிருந்து கற்றுக்கொண்டுள்ளீர்கள் என வினவுவார் பின் கற்ற பாடத்தை கரும்பலகையில் பட்டியலிடுமாறு கேட்டுக்கொள்வார். தொடர்ந்து அவர் முக்கிய செய்தியைத் தெரிவிப்பதுடன் முடிவுகளை வழங்குவார்.

## முக்கிய செய்திகள்

- வீட்டு வேலையிலிருந்து சிறுவர்களை வெளியேற்றுதல் மற்றும் இளம் வீட்டு வேலையாட்களுடைய உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல் போன்ற முக்கிய விடயங்கள் பற்றி பொதுமக்கள் அல்லது தீர்மானங்கள் எடுப்பவர்களுக்கிடையில் அது தொடர்பான உணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடும் ஆலோசனை எனப்படும். இந்த செயற்பாட்டுடன் இணைந்த நபர் வழக்கறிஞர் என அழைக்கப்படுவர். பின்வரும் விடயங்களுக்கு சட்டத்தரணி சிறுவர் வீட்டுத் தொழிலாளர்களுக்கு உதவுவார்.
    - அவர்களுக்கு என்ன தேவை எனக் கூறுதல்
    - அவர்களுடைய உரிமைகளைப் பெறுதல்
    - அவர்களுடைய ஆர்வங்களை வெளிப்படுத்தல்
    - அவர்களுக்கு தேவையான சேவைகள் மற்றும் நடைமுறை ஆதரவினை (pratical support ) வழங்குதல்.
- ஆலோசனை ஒருவராலான தனிப்பட்ட அர்ப்பணிப்புடன் ஆரம்பிக்கின்றது.
    - உங்களுடைய நாட்டில் சிறுவர் தொழிலாளரின் நிலை தொடர்பாக கற்றுக்கொள்ளல்.

- பிரச்சனைகள் தொடர்பாக துஸ்பிரயோககங்கள் மற்றும் அவர்கள் தொடர்பாக அறிந்து கொள்வதுடன் வேலை செய்யும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களையும் தெரிந்து வைத்துக் கொள்ளுதல்.
- உங்களுக்கு தெரிந்த விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல். உங்களுடைய குடும்பம் நண்பர்கள் உங்களுடைய முதலாளி போன்றவர்களை இளம் தொழிலாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலாளர்களை நிறுத்துவதற்காக நடைபெறும் போராட்டங்களில் இணைந்து ஊக்கமளித்தல்.

- ஒரு வீட்டு வேலைக்காரராக அவர்கள் வேலை செய்கின்ற இடத்தில் வேலையாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்டவர்கள் அங்கு வசிக்கின்ற அயலவர்கள் மற்றும் சிறுவர் மற்றம் இளம் வீட்டு வேலைக்காரர்களுடன் தொடர்புபடுவதற்கு சிறந்த சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அத்துடன் அவர்களை விளங்கிக் கொண்டு சம மரியாதை அளிக்கவும் முடிகின்றது.

- பெரும்பாலான சிறுவர் வீட்டுத் தொழிலாளர்கள் பற்றாக்குறையான கல்வி வசதி மற்றும் குறைந்த தன்னம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். அவர்கள் அந்த சூழ்நிலைகளை விளங்கிக் கொண்டு அதிலிருந்து விடுபடுவதற்கான வழியை அடையாளம் கண்டு கொள்வது ஒரு முக்கியமான விடயமாக இருக்கிறது. அவர்களை வெளியில் தேடுவதற்கு நேரம் ஒதுக்குதல் மற்றும் அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுதல் அத்துடன் அவர்களுடைய கவலைகள் மற்றும் கனவுகளைப் பற்றி கதைப்பதற்கு இடமிளித்தல். சிறுவர்கள் சொல்வதை செவிமடுத்தல்.

- சிறுவர் வீட்டுத் தொழிலாளர்கள் வெளிப்படுத்துவதற்கும் துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு பெரியவர்களை எதிர்பார்ப்பதும் உள்ளடங்கலாக சிறுவர்கள் கொண்டிருக்கின்ற உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வற்ற பெரியவர்கள் மற்றும் சிறுவர்களை உள்ளடங்கலாக பெருமளவிலான மக்கள் இருக்கின்றனர்.

- ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களைச் சுற்றி இருக்கின்ற பெரியவர்களுடன் வீட்டு வேலையில் ஈடுபடும் சிறுவர் தொழிலாளர் தொடர்பாக அவர்கள் கொண்டிருக்கின்ற மனப்பாங்கு மற்றும் நடத்தைகளை மாற்றுவதற்கு அவர்களுடன் கதைத்தல். சிறுவர்கள் மட்டுமல்ல அவர்களுடைய குடும்பங்கள் சகோதரங்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகமும் அதனுடைய .... விளைவுகளைப் பற்றி விளக்கிக் கொள்வதற்கு அவர்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

- அதே நேரம் வீட்டு வேலையிலிருந்து சிறுவர்களை நிறுத்தல் மற்றும் இளம் வீட்டுத் தொழிலாளர்களைப் பாதுகாத்தல் என்பவற்றில் அவர்கள் கொண்டுள்ள முக்கிய பங்கு தொடர்பாக வலியுறுத்தல்.

- சிறுவர் தொழிலாளர்க்கு எதிரான போராட்டத்தில் உங்களுடைய மற்றும் ஏனைய முதலாளிகள் கொண்டுள்ள அடிப்படைப் பங்கு தொடர்பாக வலியுறுத்தல். அவர்கள் சிறுவர்களை தொழிலுக்கு சேர்ப்பதை தவிர்ப்பதுடன் ஏற்கனவே சிறுவர்கள் வைத்திருந்தால் பொறுப்புணர்வின் அடிப்படையில் தொழிலில் இருந்து அகற்றவும் முடியும். சிறுவர்கள் ஆபத்தான சூழலில் வேலை செய்யவில்லை என்பதை அவர்களால் உறுதிப்படுத்த முடியும் அத்துடன் அவர்களை பாதுகாக்கின்ற சட்டங்களுக்கு மதிப்பளிக்கவும் முடியும்.

- துஸ்பிரயோகம் மற்றும் சுரண்டல் சம்பவங்கள் தொடர்பாக எப்பொழுதும் அவதானித்தல். மறைக்கப்பட்ட வீட்டு வேலையினுடைய இயல்பானது வேலையாளர்களுக்கான குறிப்பாக முதலாளியினுடைய கையிலிருக்கும் சிறுவர்களுக்கான துஸ்பிரயோகம் செய்யப்படுவதற்கான ஆபத்து நிலையை அதிகரிக்கின்றது. வேலை செய்கின்ற சிறுவர்களை பாதுகாப்பதற்கான சட்டங்கள் பற்றிக் கற்றுக்கொள்வதுடன் இது போனற துஸ்பிரயோகங்களுக்கு எதிராக என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பாக பயிச்சி எடுத்தல்.

- உங்களுடன் வேலை செய்கின்ற சிறுவர்களை பாதுகாத்தல். வீட்டு வேலையில் ஈடுபடும் பெரும்பாலான வளர்ந்தவர்கள் அவர்களுடன் வேலை செய்கின்ற சிறுவர்களை தங்களுடைய இளைய சகோதரர்களை போல நடத்துகின்றனர். அத்துடன் அவாகளுக்கான வழிகாட்டிகளாகவும் பாதுகாப்பாளர்களாகவும் செயற்படுகின்றனர். எவ்வாறாயினும் பெரியவர்கள் இந்த சந்தர்ப்பங்களை தமக்கு சாதமாக பயன்படுத்தி அவர்களுடன் வேலை செய்பவர்களை துஸ்பிரயோகமும் செய்கின்றார்கள். அதை அனுமதிக்க முடியாது.

### பயிற்சியாளருக்கான குறிப்புக்கள்

- பங்குபற்றுனர்கள் சிறுவர்களாக வீட்டு வேலைத்தொழிலில் இருக்கும்போது அவர்கழுடைய அனுபவங்கள் எவ்வாறாக இருந்தது என்பது தொர்பில் அவர்கழுடைய நினைவுகனை மீட்டிபார்க்கசெய்யவும். இச்செயற்ப்பாடானது சற்று அவதானமாக முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமாகும்.

- வளர்ந்த வீட்டுவேலைத் தொழிலாளர்களாடு சிறுவர்கள் வீட்டு வேலைத்தொழிவாளர்களாக வேலை செய்யும் போது அவர்கழுடைய அனுபவம் எவ்வாறாக இருந்தது. நேரான மற்றும் எதிரான அனுவவங்கள்
- அவர்களுடன் வேறு சிறுவர்கள் வேலை செய்கின்றார்களா? அவர்களுக்கிடையில் எவ்வாறான உறவு முறை இருந்தது?
- வளர்ந்த வீட்டு வேலைக்காரர்கள் அவர்களுடன் வேலை செய்யும் சிறுவர்களை உரியமுறையில் நடத்தாத சம்பவங்கள் காணப்படுகின்றது. இதனை அனுமதிப்பது கடினமாக இருக்கலாம். ஏன் அவ்வாறு உள்ளது?

- துஸ்பிரயோகம் மற்றும் நெருக்கடி சம்பவங்கள் பற்றி சிறு குழுக்ககள் குடும்பங்கள் தனிநபர்களின் அனுகுமுறையினால் ஏற்படும் சாதக மற்றும் பாதக விளைவுகளுக்கான உதாரணங்களை குறிப்பிடுமாறு பங்குபற்றுனர்களை கேட்டல்.
- சம்பவ ஆய்வுகளை மாற்றுவதை இலகுவாக உணர்தல்.

செயற்பாடு- 2.3

**வீட்டு வேலையில் இருந்து சிறுவர்களை நிறுத்தல் மற்றும் இளம் வீட்டுத் தொழிலாளர்களுக்கான மரியாதை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்றவற்றில் ஒரு வினைத்திறனான வழக்கறிஞ்ஞர்களாக உள்ள வீட்டுத் தொழிலாளர்களின் பங்கு.**

**நாடகத்துக்கான சம்பவங்கள்**

கஸ்ராவுக்கு 7வயதாக இருக்கும் போது அவளுடைய பெற்றோர் புரிந்துணர்வின் அடிப்படையில் அவளை சின்கா வீட்டிற்கு வேலைக்கு அனுப்பினார்கள். கஸ்ரா பாடசாலைக்கும் செல்லக்கூடியதாக இருந்தது. 4 வீட்டு வேலைக்காரர்கள் அந்த வீட்டில் வேலை செய்தார்கள். ரவி வீட்டு சமையல்காரன் அவனுடைய மனைவி யசோதா ஒரு தலமைப் பணிப்பெண். 30 வயதான சம்பா சலவை செய்து வருகிறார்.

அத்துடன் 3 பிள்ளைகளையும் பராமரிக்கின்றாள். (கஸ்ரா வீட்டு வேலைக்கு வரும் போதுஅவர்களுக்கு 1, 8 மற்றும் 11 வயதாகும்) ஆனாலட் ஒரு வாகனசாரதி அல்லது தோட்டக்காரன். கஸ்ராவினுடைய வேலை என்னவெனில் யசோதா மற்றும் சம்பாவிற்கு உதவிபுரிவதாகும் இரண்டு மாதங்களாக கஸ்ரா தனது வீட்டில் இருந்ததை விட மிகவும் சந்தோசமாக இருந்தாள். அவளுக்கு மோசமான சாப்பாடு கிடைத்தது மற்றும் வீட்டினுடைய மூலை யன்னல் கரையில் உள்ள அறையின் மூலையில் தூங்கினாள். சம்பாவுடன் தனது விடயங்களை பகிர்ந்து கொண்டாள். அவள் தனக்கு அளிக்கப்பட்ட வேலையை விட அதிகமாக கஸ்ரப்பட்டு வேலை செய்யப் பழகிக்கொண்டாள். வீட்டில் உள்ள அனைவருக்கும் பொருட்களை

வழங்குதல், ஆடைகளை அயன் செய்தல், தூசு தட்டுதல், சிலவேளைகளில் சம்பா வேலையாக இருக்கும் பொழுது குழந்தைகளை பராமரித்தல் போன்ற வேலைகளையும் செய்து வந்தாள். பாடசாலை ஆரம்பித்த பின்னர் கஸ்ரா பாடசாலைக்கு செல்ல வேண்டும் என எதிர்பாத்தாள். ஆனால் சம்பா அதிக வேலைகளை கொண்டிருக்கிறபடியால் குழந்தைகளை பராமரிக்க ஒருவர் தேவை என சின்கா கூறினாள். கஸ்ரா ஏமாற்றமடைந்நதாள். ஆனால் எதுவும் சொல்லவில்லை. சிறப்பாக முன்பு சின்கா கஸ்ராவிற்கு அடுத்த வருடம் நீ பாடசாலைக்கு போவாய் என உறுதியளித்திருந்தாள். ஆனால் அவளை பாடசாலைக்கு அனுமதித்திருக்கவில்லை.

இது 3 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. அப்பொழுது கஸ்ராவுக்கு வயது 10. அவள் சந்தோசம் இல்லாமல் அவளுடைய குடும்பத்தை இழந்து வாழ்கிறாள். அவள் அங்கு வந்ததில் இருந்து அவளுடைய குடும்பத்தைப் பார்க்கவே இல்லை. இப்பொழுது அவளுக்கு வேலைகளும் அதிகரித்து விட்டது. அவள் ஒரு வளர்ந்த பிள்ளையாக இப்பொழுது 4 வயதுப் பிள்ளையை பராமரிக்க வேண்டும்.

அத்துடன் அவளுடைய வேலையையும் பார்க்க வேண்டும். அவளுடைய ஒவ்வொரு நாளும் காலை 6 மணிக்கு ஆரம்பித்து இரவு 10 மணிக்கு முடிவடைகின்றது. அவளுக்கு நித்திரை வந்தாலும் யசோதா மற்றும் சம்பாவிற்கு வேலை செய்ய வேண்டியில்லாமல் இருந்தால் மட்டுமே தூங்க முடியும். இது அடிக்கடி நடைபெறுகின்றது. கஸ்ரா தொடர்ந்து சின்காவிடம் தான் தனது குடும்பத்துக்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்காக கேட்டுக் கொண்டிருந்தாலும் அதனை தொடர்ச்சியாக மறுத்து வருகிறாள். கஸ்ரா ஒரு நாள் அவளும் ஒன்றாக இருக்கின்ற மற்றும் அவளை ஒரு இளய சகோதரியாக நடத்துகின்ற சம்பாவிடம் தனக்காக பரிந்து பேச சம்பாவைக் கேட்டால் சம்பா என்ன செய்திருப்பாள்?

**முக்கிய கதாபாத்திரம்**- கஸ்ரா, சம்பா, திருமதி சின்கா குழுவிலுள்ள ஏனைய நபர்கள் ஏனைய சிறுவர்கள் அல்லது ஏனைய வீட்ட வேலைக்காரர்கள் போன்ற இரண்டாம் நிலையில் பாத்திரங்களை எடுக்க முடியும்.

**சம்பவம்2**

பொப்கா 9 வயதாக இருக்கும் பொழுது அனாதையா இருந்ததால் அவளும் அவளுடைய 4 சகோதரர்களும் கம்போடியாவில் செயப் றிசப் என்ற இடத்தை சுற்றி வேறுபட்ட இடங்களில் இருக்கின்ற அவர்களுடைய உறவினர்களால் தத்தெடுக்கப்பட்டனர். ஏனைய 4 சகோதரர்களை விட பொப்கா அதிஸ்டக்காரி ஏனெனில் அவளுடைய அன்ரி மற்றும் மாமா அவளைப் பாடசாலைக்குச் செல்ல அனுமதித்திருந்தனர். கல்வி கற்றுக்கொள்வதற்கு அவளுக்கு விருப்பம். பாடசாலை 7 மணிக்கு ஆரம்பித்ததிலிருந்து அவள் நல்ல மாணவியாக திகழ்ந்தாள். அவள் எப்பொழுதும் களைப்படைந்திருப்பாள். ஏனெனில் அவள் ஒவ்வொரு நாளும்

அதிகமான வீட்டு வேலைகள் செய்ய வேண்டியிருந்த அதே நேரம் சந்தையில் சொந்தமாக கடை வைத்திருந்த அவளுடைய அன்ரிக்கும் உதவி செய்யவேண்டி இருந்தது. இதனால் அடிக்கடி பாடசாலைக்குச் செல்லாமல் இருந்தாள். இதன் காரணமாக தரம் 3 மற்றும் 4 இனை திரும்பிக் கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பொழுது அவளுக்கு 13 வயதாகும். அவளை விட வயது குறைந்த இளவயது சிறுவர்களுடன் ஒரே வகுப்பில் இருந்து கற்க அவளுக்கு வெட்கமாக இருந்தது. எனவே அவள் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி ஒரு நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் அவளிடம் எந்த திறமைகளும் இருக்கவில்லை. அவள் அரச சார்பற்ற நிறுவனத்தால் நகரத்தில் இயங்கி வரும் கம பாடசாலை பற்றி கேள்வியுற்றாள். அங்கே தையல் மற்றும் சமையல் பயிற்ச்சி போன்றன கற்பிக்கப்படுவதுடன் கணிதம் எழுதுதல் மற்றும் வாசித்தல் போன்றனவும் கற்பிக்கப்படுகின்றது. அந்த பாடசாலை மிக குறைந்த கட்டணத்தையே மாணவர்களிடம் இருந்து பெறுகின்றது. அவள் பாடசாலைக்குச் செல்வதுடன் முன்பு வீட்டு வேலையில் ஈடுபட்டு இப்பொழுது பாடசாலையில் ஆசிரியராக கடமை புரியும் பாலாவை சந்தித்தாள். பாலா பொப்காவை பாடசாலையில் பதிவு செய்யும்படி ஊக்கப்படுத்தினாள். ஆனால் பொப்கா தனது அன்ரியுடன் இதைப் பற்றி கதைக்க தயக்கமாக உள்ளது என கூறினாள். எனவே பாலா என்ன நடவடிக்கை இதற்கு எடுத்தாள்?

**முக்கிய கதாப்பாத்திரம்** பாலா, பொப்கா, அன்ரி

**சம்பவம்3**

பிலிப்பைன்சில் லெய்ரியிலிருந்து வந்திருக்கும் லோறிக்கு 15 வயதாகும். அயல் மாநிலத்திலுள்ள லோபஸ் வீட்டில் ஒரு வருடமாக வேலை செய்து வருகிறாள். சற்றிறோ மற்றும் அன்னபெல் அனைவரும் அதேவீட்டில் லோறியுடன் வேலை செய்கின்றார்கள். அவர்கள் இருவரும் அந்த வீட்டில் 3 வருடங்களாக வேலை செய்கின்றார்கள். 3 பேருக்கும் வேலைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றது. லோறி 2வயதை உடைய இரட்டைக் குழந்தைகளை பராமரிப்பதுடன் அவர்கள் நித்திரை கொள்ளும் நேரத்தில் லோறி துப்பரவு செய்தல், சமைத்தல், சலவை செய்தல், சந்தைக்குச் செல்லுதல் போன்ற வேலைகளுக்கு சறிற்ரோ மற்றும் அன்னபெலுக்கு உதவுவாள்

சறிற்ரோ மற்றும் அன்னபெல் அடிப்படைச் சம்பளத்தினை உரிமையாக பெறுகின்றார்கள். லோறி ஆகக்குறைந்த சம்பளத்தையே பெறுகின்றாள். ஒரு மாதத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமையில் மாத்திரமே அவர்களுக்கு விடுமுறை வழங்கப்படுகின்றது. சறிற்ரோவினுடைய கணவர் தோட்டக்காரனாக அதற்கு பக்கத்து வீட்டில் வேலை செய்கின்றார். சிலவேளைகளில் லோறியின் விடுமுறைகளில் சறிற்ரோ தனது கணவருடன் வெளியில் சென்று வரும் வரை சில

மணித்தியாலங்கள் வேலை செய்யுமாறு கேட்டாள். உள்ளூர் வீட்டு வேலைகாரர்களுடைய அமைப்பின் உறுப்பினராக உள்ள அன்னபெல் தொடர்ந்து அதனை மறுக்குமாறு லோறிக்கு வலியுறுத்துவார். அத்துடன் சறிற்ரோவையும் பேசுவார். குடும்பத்தாரை பிரிந்து வாழும் லோறி அவர்கள் இருவரையும் மூத்த சகோதரிகளாக கருதுவதுடன் அவர்களின் கருணையில் இருக்க வேண்டும் என நினைப்பாள்.

திருமதி லோபெஸ் அவர்கள் தமது வீட்டுப் பணத்தை வைக்கும் லாச்சியில் இருந்து லோறி 500 பெசோஸ் இனைக் களவெடுத்ததாகக் குற்றம் சாட்டினார். உண்மையில் சறிற்றோ அந்த பணத்தைக் கடனாக வாங்கியிருந்தார். அவருக்கு ஊதியம் கொடுக்கப்பட்ட அடுத்த நாள் அதனை மீள செலுத்த உத்தேசித்திருந்தார். ஆனால் இதைப்பற்றி லோறிக்கோ அன்னபெலுக்கோ தெரியாது. லோறி தான் எடுக்கவில்லை எனக் கூற திருமதி லோபெஸ் கோவத்துடன் லோறியை அடித்ததுடன் ஒப்புத்கொள்ளவில்லை என்றால் வேலையிலிருந்து நீக்கப்படுவாய் எனக் கூறினார். லோறி அதனை செய்வதற்கு மறுத்தாள். தொடர்ந்து திருமதி லோபெஸ் அவளை அடித்தால் அன்னபெல் தலையிட வேண்டுமா? ஏன்? ஏப்படி? சறிற்ரோ என்ன செய்வாள்?

**பாத்திரங்கள்** லோறி அன்னபெல் சறிற்ரோ மற்றும் திருமதி லோபெஸ்

**செயற்பாடு 2.4**

வீட்டு வேலையில் ஈடுபடும் சிறுவர்கள் மற்றும் இளம் தொழிலாளர்களுடைய உரிமைகளுக்காக வீட்டுவேலைக் காரர்கள் மற்றும் அதனுடைய அமைப்புக்கள் எப்படி ஒரு வினைத்திறனான சட்டத்தரணியாக இருக்க முடியும்?

**இலக்கு-** வீட்டு வேலையிலிருந்து சிறுவர் தொழிலாளரை வெளியேற்றுவதற்காகவும் இளம் வீட்டுத்தொழிலாளர்களை பாதுகாப்பதற்காகவும் வீட்டுவேலைத் தொழிலாளர்களுடைய அமைப்புக்கள் எவ்வாறு ஒரு வினைத்திறனான சட்டத்தரணியாக இருக்க முடியும் என ஆராய்தல்.

**நேரம்- 120நிமிடம்**

**கையேடு**

- H2.1 - இப்பொழுது செயற்படும் வீட்டு வேலையில் ஈடுபடும் சிறுவர்களை வேலையிலிருந்து நிறுத்தல். மற்றும் இளம் வீட்டுத்தொழிலாளர்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- H2.2- வீட்டு வேலையிலிருந்து சிறுவர்களை நிறுத்தல். இளம் வீட்டுத்தொழிலாளர்களை பாதுகாத்தல் ஒரு ஆலோசனை திட்டத்தை வரைதல்

**தேவையான பொருட்கள்**

- படிமுறை 1ற்காக எல்லா பங்குபற்றுனர்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் செயற்பாடு 2.1 இல் அடையாளம் காணப்பட்டு பட்டியலிடப்பட்ட சவால்கள் உள்ள பிரதிகளை வைத்திருத்தல்.
- அறிக்கைப் படிவத்தின் படி பயிற்றுவிப்பாளர்கள் அதனை நிரப்புவதற்கான பிலிப்சாட் தாள்கள்

**செயல்முறை**

குழுவேலை பொதுவான கலந்துரையாடல்.

**படிமுறை 01 – 60 நிமிட குழுவேலை**

01. பயிற்றுவிப்பாளர் செய்த செயற்பாடடினுடைய இலக்கினைப் பற்றி விளக்கமளிப்பதுடன் முன்னைய செயற்பாடு A2.1 மற்றும் A2.3 போன்ற கலந்துரையாடல்களின் முக்கிய விடயங்களை நினைவுபடுத்துவார். வீட்டு வேலையிலிருந்து சிறுவர்களை நிறுத்துவதுடன் போராட்டத்திலுள்ள சவால்களைப் பற்றி பயிற்றுவிப்பாளர் பங்குபற்றுனர்களிடம் வினாவுவதுடன் அவற்றை பிலிப்சாட் தாளில் எழுதுமாறு கேட்டுக் கொள்வார். பின்பு பயிற்றுவிப்பாளர் ஆலோசனை என்றால் என்ன என்ற வரைவிலக்கணத்தை விளக்கமாக தெரிவிப்பதுடன் அதனை பங்குபற்றுனர்கள் தெளிவாக விளங்கியுள்ளனர் என உறுதிப்படுத்திக் கொள்வார்.

02. 5-8 குழுக்களாக பங்குபற்றுனர்கள் பிரிக்கப்படுவர். சவால்களின் பட்டியலில் உள்ள ஒவ்வொரு பிரதான சவாலும் ஒவ்வொரு குழுவுக்கும் கலந்துரையாடலுக்காக ஒதுக்கப்படும்.

03. குழுக்கள் பின்வரும் விடயங்களை கலந்துரையாட வேண்டும்.

- வீட்டு வேலையிலிருந்து சிறுவர்களை நிறுத்தல். மற்றும் இளம் வீட்டுத்தொழிலாளர்களை பாதுகாத்தலில் ஏன் வீட்டுத்தொழிலாளர்களுடைய அமைப்பு ஒரு முக்கிய சட்டத்தரணிகளாக இருக்க வேண்டும் என்பதற்கான 3 காரணங்கள்
- சிறுவர் தொழிலாளரை வீட்டு வேலையிலிருந்து நிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் உங்களுடைய நிறுவன வினைத்திறனான வழக்கறிஞர் உருவாக்க கூடிய 3 வழிகள்.
- குழுவுக்கு ஒதுக்கப்பட்ட ……… வீட்டு வேலையாட்களுடைய அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் ஆலோசனை 3 முன்னுரிமைகளும் என்ன?

04. அறிக்கையாளார்கள் இணைக்கப்பட்ட படிவத்தில் முழுமையான தகவல்களையும் நிரப்புதல் வேண்டும்.

**படிமுறை 2 60 நிமிட அறிக்கையிடல் மற்றும் பொதுவான கலந்துரையாடல்**

05. பயிற்றுவிப்பாளர் அறிக்கையாளரிடம் அவன்/ அவளினுடைய குழுவின் வினா a க்கான கருத்துக்களை வழங்குமாறு கேட்பதுடன் அவற்றை பிலிப்சாட் தாளில் கரும்பலகையில் பட்டியலிடுவதற்கு கேட்டுக் கொள்வார். காரணங்களின் படடியல் முழுமைப்படுத்தப்பட்டதன் பின்பு பயிற்றுவிப்பாளர் அது தொடர்பாக வேறு எதாவது கருத்துக்கள் அல்லது கேள்விகள் இருந்தால் கேட்குமாறு கேட்பார்.

06. வினா b ஐயும் அதே முறையில் பயிற்றுவிப்பாளர் மேற்கொள்வார்.

07. பயிற்றுவிப்பாளர் அறிக்கையாளரிடம் வினா c க்கான குழுவினுடைய கருத்துக்களை வழங்குமாறு வேண்டுகோள் விடுவார். அத்துடன் பங்குபற்றுனர்களிடம் அவர்களின் கருத்துக்களை வழங்குமாறு வேண்டுகோள் விடுவார்.

08. பயிற்றுவிப்பாளர் அந்த செயற்பாடுகளினுடைய பெறுபேறுகள் தொடர்பாக தொகுப்புரை வழங்குவதுடன் பங்குபற்றுனர்கள் அனைவரும் அது தொடர்பான முக்கிய விடயங்களை விளங்கிக் கொண்டுள்ளனரா என்பதை உறுதிப்படுத்துவார். அவன்/ அவள் பங்குபற்றுனர்களின் எல்லா செயற்பாடுகளுக்கும் நன்றி கூறுவர்.

**முக்கிய செய்திகள்**

- ஆலோசனை என்பது மாற்றத்துக்கான சக்திவாய்ந்த ஆயுதமாகும். இது பொதுமக்களுடைய அணுகுமுறை மற்றும் நடத்தைகளை மாற்றும். பொதுமக்களின் கொள்ளைகள் மற்றும் திட்டங்கள் மேம்படுத்தப்படுவதை ஊக்குவிக்கும் அத்துடன் சுரண்டல்களுக்கு எதிரான போருக்கு வினைத்திறனான தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்ய வழிநடத்தும். இது சிறுவர்கள் மற்றும் இளம் தொழிலாளர்களுக்கு பேசுவதற்கும் குழுவாக வேலை செய்வதற்குமான இடத்தினை வழங்குவதுடன் அவர்களுடைய உரிமைகளை பாதுகாத்து ஊக்கமளிப்பதற்கான அவர்களுடைய திறமைகளை அபிவிருத்தி செய்ய இடமளிக்கின்றது.
- உண்மையில உங்களுடைய அமைப்பானது ஏற்கனவே வீட்டுத் தொழிலாளர்களுக்கான ஆரோக்கிய வேலையினுடைய உங்களுடைய இலக்கினை அடைவதற்கு ஆலோசனை செய்கின்றது. சட்டத்தை செயற்படுத்தி மேம்படுத்துவதற்கும் முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கும் ஊடகங்களில் வீட்டுத் தொழிலாளர்களுடைய உரிமைக்காக பிரச்சாரம் செய்வதற்கும் ILO மாநாட்டின் இல 189இல் கையொப்பமிடப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை நீங்கள் இணைந்து முன்னுரிமை அளிப்பது ஒருமுக்கிய இலக்கு ஆகும். சிறுவர்களை வேலையிலிருந்து வெளியேற்றுதல் மற்றும் வீட்டு வேலையில் ஈடுபடும் சிறுவர்கள் மற்றும் இளம் வீட்டுத்தொழிலாளர்களுடைய உரிமைக்கான முழு மரியாதையையும் வழங்குதல்.

- வீட்டு வேலையில் உள்ள சிறுவர் தொழிலாளர்களுடைய பிரச்சனைகளை குறிப்பிடுதல் மற்றும் இளம் வீட்டுத்தொழிலாளர்களுடைய பாதுகாப்பினை உங்களுடைய நிறுவனத்தின் நிகழ்ச்சி நிரலில் முதன்மைப்படுத்தல். மற்றும் ஆலோசனை திட்டத்தினை வரைதல். முதல் படிமுறையாக இப்பொழுது செயற்பாட்டுக்கான தேவை இருக்கின்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கிடையில் விழிப்புணர்வினை அதிகரித்தல். வர்த்தக தொழிற்சங்கங்கள் அரச சார்ற்ற நிறுவனங்கள் ILO உள்ளூர் அலுவலகம் மற்றும் அரச நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து வருகின்ற அலுவலர்கள் மற்றும் தலைவர்களுக்கு வளவாளர்களின் உதவியுடன் எந்த தாமதமும் இன்றி பயிற்ச்சிப்பட்டறைகள் மற்றும் ஆழமாக சிந்திக்கின்ற கூட்டங்களை ஒழுங்கமைத்தல். தொடர்ந்து உங்களுடைய நிறுவனம் எந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என கவனமாக சிந்தித்து அதன்படி திட்டங்களை உருவாக்குதல்.
- உங்கள் மற்றும் உங்களுடைய உறுப்பினர்கள் வீட்டுவேலைக்காரர்களாக இருந்தபோது மற்றும் சிறுவர் தொழிலாளர்களாக இருந்தபோது பெற்ற முதல் அனுபவம் அறிவினைப் பயன்படுத்தல்.
- உங்களுடைய வேலையை ஒழுங்கமைக்கப்பட்ட இளம் வீட்டுத்தொழிலாளர் மேல் சிறப்பான கவனம் செலுத்துதல். உங்களுடைய தொழிற்சங்கம் அல்லது ( ) அவர்களை தத்தெடுப்பதற்கான பல வழிகளைப் பற்றிச் சிந்தித்தல். அவர்களுக்கு அது அவர்களுடைய வீடு மற்றும் பாடசாலை என்பதை வலியுறுத்திக் கூறுவதுடன் அவர்களுடைய கருத்துக்களை எப்பொழுதும் செவிமடுத்தல்.
- வீட்டுவேலை தொடர்பான ILO மாநாட்டினுடைய இயக்கம் 189 ஒப்புதலை பிரச்சாரம் செய்யும் பொழுது சிறுவர் தொழிலாளர் தொடர்பான கட்டுரை 4ன் கீழ் கோடிடுக.
- உங்களுடைய சர்வதேச வீட்டுத் தொழிலாளர் தின செயற்பாடுகளால் (தினம்-16) சிறுவர் தொழிலாளர்களுடைய பிரச்சனைகள் தொடர்பாக முன்னிலைப்படுத்திக் காட்டுதல். சிறுவர் தொழிலாளருக்கு எதிரான உலக தினத்தில் (ஜீன்-12) தீவிரமாக இணைந்து செயற்படல்.
- வீட்டு வேலையில் சிறுவர்கள் இல்லாத ஒரு வேலையாக மாற்ற மறந்தவர்களுடன் இணைந்து செயற்படுதல். வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளரை நிறுத்தல் என்ற இலக்கினை அடைவதற்கு ஒத்துழைப்பு அடிப்படையானது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும் தவறான வேலை மற்றும் வேலை நிலைமையிலிருந்து இளம் தொழிலாளர்களை பாதுகாத்தல் மற்றும் வீட்டு வேலைக்காரர்களுக்கான ஆரோக்கியமான வேலையினை ஊக்குவித்தல் போன்றவற்றிற்கும் இந்த ஒத்துழைப்பு அடிப்படையானதாகும்.

- உரிய ஊதியம் வழங்குகின்ற வேலையை பெரியவர்களுக்கு உருவாக்குதல். வீட்டு தொழிலாளர்களுக்கு அதிகாரம் வழங்குதல் மற்றும் அவர்களுடைய உரிமைகளுக்கு மதிப்பளித்தல் கட்டாய சிறை அடிப்படைக் கல்வியை அனைவருக்கும் வழங்குதல்.

- அனைவருக்கும் பருவகால பயிற்சிகளை பெறக் கூடிய கிடைப்பனவு சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுடைய உரிமைகளை பாதுகாப்பதற்கு சட்டத்தினை வினைத்திறனாக
- அமுல்படுத்தி மேம்படுத்தல் பெண் சிறுவர்கள் பால் நிலை சமத்துவம் தடை செய்யப்பட்ட கடத்தல்கள் போன்றன தொடர்பான செயற்றிட்டங்களை மேற்கொள்ளுதல் போன்றன உள்ளடங்கலாக சிறுவர் தொழிலாளருடைய பிரச்சனையை ஆழமாகத் தீர்ப்பதற்கு நிறுவனம் பிரச்சாரங்களுடன் ஒருபங்காளர்களாக இணைதல்.

- துகவல் குறித்த பிராந்தியத்துக்குள் மற்றும் உலகின் வேறுபாகங்களிளும் பகிர்ந்து கொள்ளுதல். ஒரு சிறந்த பயிற்சியாகும் இதன் ஊடாக கற்று கொள்ளுதல் ஒரு சிறந்த பயிற்சி ஆகும். இதனுடாக ஒருவரிலிருந்து ஒருவா் கற்றுக் கொள்வதற்கு சிறந்த வழி ஏற்படுகின்றது. அத்துடன் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு போன்றன ஊக்குவிக்கப்படுகின்றது.

**பயிற்றுவிப்பாளருக்கான குறிப்பு**

- நிறுவனத்தில் தலைவர்கள் பொறுப்பாளா்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் உறுதியான அா்ப்பணிப்புக்கான தேவையை வலியுறுத்தல். இது இல்லாமல் வினைத்திறனான ஆலோசனை வேலையை செய்வது என்பது சாத்தியமற்றதாகும். எப்படியெனினும் நேரம் வளம் ஏனைய முன்னுரிமைகள் போன்ற தாக்கம் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். எனவே ஆலோசனை திட்டங்களை கொண்டிருப்பது முக்கியமானதாகும். அத்துடன் உண்மையானதாகவும் நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும்( )
- பெற்றோா்கள் சமூகம் மத தலைவா்கள் அரசாங்கம் முதலாளிகள் வா்த்த அமைப்புக்கள் மற்றும் அரச சாா்பற்ற நிறுவனங்கள் போன்ற ஒவ்வொருவரினதும் ஒட்டுமொத்த பயிற்சியை கோரி வீட்டு வேலையில் இருந்து சிறுவா்களை நிறுத்தல் ஒரு பெரிய சவாலாகும். என்பதை பங்குபற்றுனா்களுக்கு நினைவுபடுத்தல் வேண்டும். வீட்டுவேலைக்காரா்கள் மற்றும் அதனுடைய அமைப்புக்கள் என்பன முக்கிய பங்காளா்களாவா். ஏனெனில் அவா்கள் முதலில் பாதிக்கப்பட்டவா்களாக இருப்பதுடன் அவா்கள்

பிரச்சனைகள் தொடர்பாக அனுபவம் மற்றும் அறிவினைக் கொண்டிருக்கின்றனர்.

- படிமுறை 1 பற்றி 3c புள்ளியில் முன்னதாகவே பட்டியலிட்ட சவால்களை சரி பார்த்தல். பயிற்ச்சிப்பட்டறையில் கலந்துரையாடியதன் அடிப்படையில் ஏனைய சவால்களையும் பங்குபற்றுனர்கள் விரும்பினால் இணைத்தல்.

- ஆலோசனை வேலைக்கான முன்னுரிமை இடத்தின் படடியலை செயற்பாடுa 2.7 ற்கு பங்குபற்றுனர்களுக்கு வழங்குவதற்காக தேவையான பிரதியை உருவாக்குதல்.

செயற்பாடு 2.4

**எவ்வாறு வீட்டு வேலையில் சிறுவர் மற்றும் இளம் வீட்டுத்தொழிலாளர்களுடைய உரிமைக்கான சட்டத்தரணிகளாக வீட்டு வேலையினுடைய அமைப்புக்கள் இருக்கமுடியும்?**

அறிக்கைப் படிவம்.............................

ஒதுக்கப்பட்ட சவால்கள்..............................

**அறிக்கையாளருக்கான குறிப்பு-** குழு 3 ஐ விட கூடுதலான விடையைக் கொண்டிருந்தால் அதனை வேறான தாளில் குறிப்பிடவும்.

| | | | |
|---|---|---|---|
| ஏன் ஆலோசனையானது ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும் | | | |
| இளம் வீட்டுத்தொழிலாளர்களை பாதுகாத்தல் மற்றும் வீட்டு வேலையில் சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் உங்களுடைய அமைப்பின் வினைத்திறனான வழக்கறிஞர்கள் உருவாக்கிய வழிகள் | | | |
| குழுக்களுக்கு வழங்கப்பட்ட அவர்களை எவ்வாறு எதிர் கொள்ளுதல் வீட்டு தொழிலாளர் அமைப்புக்களினுடாக முன்னுரிமை அளிக்கப் படவேண்டிய இடங்கள் எவை? | | | |

**செயற்பாடு 2.5 இளம் வீட்டு வேலை தொழிலாளர்களை ஒழுங்குபடுத்தல்.**

இலக்கு:- இளம் வீட்டுத் தொழிலாளர்களை ஒழுங்குபடுத்துவதில் உள்ள சவால்களை அடையாளம் காணுதல்.

இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான வழிகளை ஆராய்தல்.

நேரம் - 200 மணித்தியாலங்கள்

**கையேடுகள்**

- H2.3 சிறுவருடைய உரிமைகள்
- H2.1 இப்பொழுது செயற்பாடு. சிறுவர் தொழிலாளரை நிறுத்துதல் மற்றும் இளம் வீட்டுத் தொழிலாளர்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் பாதுகாத்தலை உறுதிப்படுத்தல்.
- H2.3:- சம்பவ ஆய்வு மற்றும் சிறந்த பயிற்சிகள்

தேவையான பொருட்கள்

- குழுக்களுக்கான நாடகக்காட்சிகளின் பிரதிகள்.
- பங்குபற்றுனர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான 2 நிறங்கள் கொண்ட A4 தாளின் பிரதி Or அட்டைகள்.
- மாக்கர்கள், பின் அல்லது ….. ரேப்

**செயல்முறை**

நாடகம் நடித்தல், தனி வேலை, குழு வேலை, பொதுவான கலந்துலையாடல்.

**படிமுறை – 1 நாடகம் மற்றும் தனி நபர் வேலை**

1.பயிற்றுவிப்பாளர் இந்த செயற்பாட்டினுடைய இலக்கு தொடர்பாக தெளிவுபடுத்துவார். அவன்/ அவள் வீட்டுத் தொழிலாளர்களை ஒழுங்குபடுத்துவதன் முக்கியம் தொடர்பாக தெளிவான அறிமுகத்தினை வழங்குவார்.

சிறுவர் உரிமைகள் தொடர்பான பல மாநாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய கலந்துரையாடலை அவன்/ அவள் நினைவுபடுத்துவார். சிறுவர்கள் குழுவாக சந்திப்பதற்கும், குழுக்கள் நிறுவனங்களில் இணைவதற்குமான உரிமையைக் கொண்டிருக்கின்றார்கள் என்று கட்டுரை 15 குறிப்பிடுகின்றது. இந்தச் செயற்பாடானது 18 வயதிற்கு குறைந்த சிறுவர் மற்றும் இளம் தொழிலாளர்கள் தொடர்பிலானது என அவன்/ அவள் விளக்கமளிப்பார். ஆனால் இளம் வீட்டுத் தொழிலாளர்கள் என்பது 20 வயதுகளின் ஆரம்ப தொழிலாளர்களைக் குறிப்பிடுகின்றது.

2. ஆகக் குறைந்த 2 குழுக்களில் 6 பங்குபற்றுனர்கள் இருக்க வேண்டும். குழுக்களுக்கான நாடகக் காட்சிகளின் பிரதிகள் எல்லா குழு உறுப்பினர்களுக்கும் வழங்கக்கூடிய வகையில் இருத்தல்.

3. சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குழுவும் 15 நிமிட நாடகத்தை தயார் செய்வர்.

4. பயிற்றுவிப்பாளர் இந்த நாடகத்திலில்லாத ஏனைய பங்குபற்றுனர்களுக்கு அட்டைகள்/ தாள் (3 நிறங்கள் கொண்ட) மற்றும் மாக்கர்கள் வழங்குவார். குழுக்கள் நாடகத்தினை தயார்ப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுது அவர்கள் இளம் வீட்டுத் தொழிலாளர்களை ஒழுங்கமைப்பதில் உள்ள ஒரு சவாலினை 3 அட்டைகள் or தாள்களில் (பிங் தாள்) குறித்துக் கொள்வார் (இளம் வீட்டுத் தொழிலாளர்களுக்கான மற்றும் வீட்டுத் தொழிலாளர்களுடைய அமைப்புக்கள்) ஏனைய 3 அட்டைகளிலும் () அவர்கள் வீட்டுத் தொழிலாளர் அமைப்புக்களில் இணைவதால் ( சங்கம், தொழிற்சங்கம், வலைப்பின்னல், குழு,) ஏற்படும் நன்மையினைக் குறிப்பிடுவர்.

**படிமுறை 2**

5.ஒவ்வொரு குழுவும் தமது நாடகத்தை 15 நிமிடங்கள் அளிக்கை செய்வர். பங்குபற்றுனர்கள் விவாதம் மற்றும் எதிர் விவாதம் தொடர்பாகக் குறிப்புக்களை எடுப்பதுடன் அதற்கு எதிராக அவர்கள் அட்டையில் என்ன எழுதியிருக்கின்றனர் என்பதை சரிபாப்பர்.

6.அனைத்து பங்கேற்பாளர்கள் சார்பாகவும் பயிற்றுவிப்பாளர் நாடகம் நடித்தவர்களுக்கு நன்றி கூறுவார். அவன்/ அவள் பின்வரும் விடயங்கள் தொடர்பாக நாடகம் தொடர்பான பங்குபற்றுனர்களின் கருத்துக்களைக் கலந்துரையாடுமாறு கேட்பார்.

- இளம் தொழிலாளர்களுடன் உறுப்பினர்கள் எவ்வாறு அணுகி உரையாடினர்.
- அவர்களுடைய விவாதம் மற்றும் பதில்களுடைய பலங்கள் மற்றும் பலவீனங்கள்.

7.அவன்/ அவள் நாடகத்தின் அப்படையில் இளம் வீட்டுத் தொழிலாளர்களை ஒழங்கபடுத்தவதிலுள்ள சவால்களை அடையாளப்படுத்துமாறு பங்குபற்றுனர்களைக் கோட்பார். அவன்/ அவள் சவால்களை பிங் (pink) அட்டைகளில் எழுதி கரும்பலகையில் அதை தொங்க விடுவதுடன் எண்ணங்கள் அடிப்படையில் அதனைத் தொகுப்பார். தொகுதியின் அடிப்படையில் ஏனைய அவதானங்களையும் அந்த அட்டையில் சேர்த்துக் கொள்வர். பின்பு அவன்/ அவள் இளம் வீட்டுத் தொழிலாளர்களை ஒழுங்கமைப்பதிலுள்ள 5 பிரதான சவால்களையும் ஒத்துக் கொள்கிறார்களா என பங்குபற்றுனர்களை வினவுவார். அவை அனைத்தும் கரும்பலகையில் பட்டியலிடப்படும்.

8.அவன்/ அவள் வீட்டுத் தொழிலாளர்கள் அமைப்பில் இளம் வீட்டுத் தொழிலாளர்கள் இணைவதால் இருக்கும் நன்மைகள் எழுதப்பட்ட நீல அட்டையை கரும்பலகையில் போடுமாறு குறிப்பிடுவார். அவர்கள் அதைச் செய்யும் பொழுது அவன்/ அவள் அவற்றைத் தொகுப்பார். நன்மைகள் கரும்பலகையில் / பிலிப் சாட் தாளில் பட்டியலிடப்படும்.

**படிமுறை- 3 40 நிமிடம் குழு வேலை**

9.பங்குபற்றுனர்கள் 5- 8 குழுக்களாகப் பிரிக்கப்படுவர். ஓவ்வொரு குழுவுக்கும் 5 சவால்களில் இன்று கலந்துரையாடலுக்காக ஒதுக்கப்படும். குழுக்கள் மதிப்பீட்டாளரையும், அறிக்கையாளரையும் நியமிப்பார்.

10.கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு குழுக்களைக் கேட்டுக் கொள்ளப்படும்.

a)சவால்களை தாண்டிச் செல்லக்கூடிய வழிகள். தீர்வுகள் நடைமுறைச் சாத்தியமான யதார்த்தமானதாக இருக்கவேண்டும். சாத்தியமாயின் குழு உதாரணங்களை முன்வைப்பர். அறிக்கையாளர்கள் தீர்மானங்களை முழுமையாக அறிக்கை செய்வதற்காக பிலிப்சாட் தாளில் எழுதுவார்.

b)சிறுவர் மற்றும் இளைஞர்களை ஒழுங்குபடுத்துதல், (18 வயதுக்கு குறைந்த)

I. அவர்கள் அவர்களுடைய சொந்த நிறுவனங்களை உருவாக்க முடியுமா? ஏன்? என்ன நிலைமைகளின் கீழ்?

II. அவர்கள் வீட்டுத் தொழிலாளர்கள் அமைப்பில் இணைய முடியுமா? ஏன்? என்ன நிலமையின் கிழ்?

**படிமுறை- 4 60 நிமிடம் அறிக்கையிடல் மற்றும் பொதுவான கலந்துரையாடல்**

11. அறிக்கையாளர்கள் வினாவுக்கான பிலிப் சாட் தாளை கரும்பலகையில்/ சுவரில் ஒட்டி அவர்களுடைய சவால் பல்வகைப்பட்ட தீர்வுகளை விரிவாக தெளிவுபடுத்துவார். பயிற்றுவிப்பாளர் பங்குபற்றுனர்களிடம் தீர்மானங்கள் நடைமுறையில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாக இருக்கின்றதா என வினவுவார்.

12. வினா 6 இல் பிரிவு I தொடர்பான அவன்/ அவர்களுடைய குழுவில் கருத்துக்களை வழங்குமாறு பயிற்றுவிப்பாளர் பங்குபற்றுனரைக் கேட்பார். ஏனைய குழுக்கள் அவர்களுடைய கருத்துக்களை அதனுடன் முன்வைக்க விரும்பினால் அந்த முக்கிய விடயங்களை கரும்பலகையில் குறிப்பிடுமாறு அவன்/ அவள் கேட்பார். ஏனைய குழுக்கள் அந்த தீர்வுகளை ஒத்துக்கொள்ளவில்லையெனில் அவன்/ அவள் அவர்களுடைய குழுவின் கருத்துக்கள் தொடர்பாக விளக்கமளிக்குமாறு அறிக்கையிடுபவர்களைக் கேட்டுக் கொள்வார். அவன்/ அவள் அதே நடைமுறையை விவாதிக்கும் மேற்கொள்வார். அவன்/ அவள் வீட்டுத் தொழிலாளர்கள் வீட்டுத்தொழிலாளர் அமைப்பில் இணைதல், ஒன்று கூடுதல் மற்றும் அவர்களுடைய குழு, அமைப்புக்களை உருவாக்குதல் போன்ற விடயங்களை உதாரணமாக எடுத்துக்காட்டி அவன்/ அவள் விவாதத்தின் தொகுப்புரையை வழங்குவார். (கையேடுகள் H1.4 மற்றும் H2.3 ஐப் பார்க்க)

13. பயிற்றுவிப்பாளர் பங்குபற்றுனர்களுக்கு அவர்களின் பங்களிப்பிற்காக நன்றி கூறுவதுடன் முக்கிய செய்திகளை தொகுத்து செயற்பாடுகள் தொடர்பான முடிவுரையை வழங்குவார்.

**முக்கிய செய்திகள்**

- அவர்களுடைய பொதுவான ஆர்வத்தினை வெளிப்படுத்துதல் மற்றும் ஒருவருக்கு ஒருவர் ஆதரவளித்தல் போன்ற நோக்கங்களுக்காக வேலையாட்கள் ஒரு பரந்த உணர்வின் அடிப்படையில் ஒன்று கூடலை ஒழுங்கமைத்தல். அவர்களுடைய சூழ்நிலைகளை மாற்றுவதற்கு கூட்டிணைந்த இயலுமையில் நம்பிக்கை மற்றும் உறுதியினைக் கட்டியெழுப்புதல் மற்றும் வேலையாட்கள் அவர்களுடைய கருத்துக்களை இருவருக்கிடையில் பகிர்ந்து கொள்ளல் மற்றும் செவிமடுத்தல் போன்றன ஒழுங்கமைத்தல் செயன்முறையில் .. க்கு மையவிடயமாக உள்ளது.
- நீண்ட காலமாக உலகெங்கும் உள்ள வீட்டு வேலைக்காரர்கள் பின்வரும் அமைப்புக்களை ஒழுங்கமைத்துவருகின்றனர். தொழிற்சங்கங்கள், அயலவர் சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு (Cooperatives) நகர மட்ட வலையமைப்புக்கள், கூட்டுறவுகள், தேசிய, இன, சமய ரீதியிலான குழுக்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த அமைப்புக்களுக்கு தொழிற்சங்கங்களினாலும், சமுதாய அமைப்புக்களாலும் ஆதரவளிக்கப்படுகின்றனர். குறிப்பாக இந்த அமைப்புக்களை பெண்கள் மற்றும் குடியேறுபவர்கள் போன்றவர்களின் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றது.
- பல நாடுகளில் தொழிற்சங்கங்களில் உருவாக்கலாம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்ட உறுப்பினர்கள் ஒரு சட்டத்திற்குட்பட்டதாகவே இருக்கின்றது. இதில் உறுப்பினர்களாக இணைவதற்கான ஆகக்குறைந்த வயதெல்லையானது அதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. (வழமையாக 18 வயது)
- எனவே 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் இந்த அமைப்புக்களில் இணைய எந்த தடைகளும் இல்லை.

எப்படியாயினும் வீட்டுத் தொழிலாளர்களுக்கு குறிப்பாக அமைப்புக்கள் பற்றி விழிப்புணர்வற்ற நிலை காணப்படுகின்றது. இந்த சவால்களை வெளிப்படுத்தப்பட வேண்டும். இது வீட்டுத் தொழிலாளர் அமைப்புக்களையே பொறுத்தவரை இளம் தொழிலாளர்களை அடைவதற்கு முக்கியமானதாகும். இளம் தொழிலாளர்களைக் கவரக்கூடிய புது வழிகளைக் கண்டறிந்து அவர்கள் அமைப்புக்களின் உறுப்பினர்களாக வருவதற்கு வழிகாட்டுதல்.

- ஒழுங்கமைத்தலால் பல நன்மைகள் ஏற்படுகின்றது. வீட்டுத் தொழிலாளர்கள் பின்வருமாறு இருக்க முடியும்
    - ஒன்றிணைந்து வந்து தமது பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்வதுடன் தீர்வுகளைக் கண்டறிவர். அத்துடன் இருவரிடம் இருந்து ஒருவர் கற்றுக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும்.
    - அவர்களுடைய குழுக்கள், அமைப்புக்கள், தொழிற்சங்கங்களை உருவாக்கி பொதுவான பிரச்சினைகளை முதலாளிகள், அரசு, உள்ளுர் அமைப்புக்களுடன் பேச முன்வருவர்.
    - இப்பொழுது இருக்கின்ற உரிமைகள் தொடர்பாக விளம்பரப்படுத்துவதுடன் துஷ்பரயோகத்திலிருந்து பாதுகாப்பதற்கு கூட்டாகச் செயற்படுவர்.
    - தேவையேற்படின் வீட்டுத் தொழிலாளர்களுக்கான உதவிச் செயற்பாடுகளை நிறுவுதல் மற்றும் ஆலோசனை வேலைகளை வழங்குதல்.
    - நியாயமான ஊதியம், ஆரோக்கியமான வேலை நிலைமைகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் குழந்தைபேற்றுக் காலங்களில் போதியளவு பாதுகாப்பு போன்றவற்றுக்கு அழுத்தம் கொடுத்தல்.
    - சமூக சேவைகள், சேமிப்பு மற்றும் காப்புறுதித் திட்டங்களை அபிவிருத்தி செய்ய உதவுதல்.
    - பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் போன்றவற்றினூடாக புதிய திறமைகளைப் பெறுதல்.

- ○ அவர்களுடைய வேலைக்காக தன்னம்பிக்கை, அங்கீகாரம் மற்றும் மதிப்பினை உறுதிப்படுத்துதல்.

- வளர்ந்து வருகின்ற நாடுகளில் பெரும்பாலும் 14 -17 வயதை உடைய 18 வயதுக்கு குறைந்த இளம் வீட்டுத் தொழிலாளர்கள் NGO க்களின் உதவியுடன் இணைந்து தங்களுடைய குழுக்களை உருவாக்கி வருவதுடன் அவர்கள் விடுமுறை நாட்களில் என்று கூடுவதற்கான பாதுகாப்பான இடத்தினை அங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. இந்த குழுக்கள் சமூக இளைஞர் குழுக்களை ஒத்ததாகும். இவை இளம் வீட்டுத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து அவர்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கலந்துரையாடவும், அவர்களுடைய வினைத்திறன் ஆளுமைகளை (பாடுதல், வரைதல், நடித்தல், கதை சொல்லுதல்) வெளிப்படுத்தவும், அவர்களை ஒத்த நண்பர்களுடன் அவர்களை சமூகமயப் படுத்துவதற்கும் பெரியவர்கள் யாரெல்லாம் அவர்களுடைய சமூக நலம் மற்றும் விருப்பங்களில் கவனம் செலுத்துகிறார்களோ அவர்களுடன் தொடர்புபடுவதற்கும் அவர்களுடைய உரிமைகள் தொடர்பான பல விடயங்களை அவர்கள் கற்றுக் கொள்வதற்கும் ஏகமாக இடமளிக்கின்றது. இந்த அனுபவங்கள் குறிப்பாக வீட்டுத் தொழிலாளர்களினுடைய சுய மரியாதை, நம்பிக்கைளை அதிகரித்தல் போன்ற சாதகமான பெறுபேறுகளைக் கொண்டுள்ளன. குறித்த எண்ணிக்கையிலான வீட்டுத் தொழிலாளர்கள் சிறுவர் உரிமை தொடர்பாக பேசக்கூடிய சக்திவாய்ந்த நபர்களாக உருவாகியுள்ளதுடன் சிறுவர்களுடைய உரிமைக்கான பொதுவான சட்டத்தரணிகளையும் உருவாக்கியுள்ளனர்.

**பயிற்றுவிப்பாளர்களுக்கான குறிப்பு**

- இந்தச் செயற்பாட்டை 02 பகுதிகளுக்குள் பிரிக்கமுடியும்.
  படிமுறை 1, 2 ஆகியன முதலாவது பகுதிக்குள்ளும்,
  படிமுறை 3,4 என்பன 2வது பகுதிக்குள்ளும் எனப் பிரிக்கலாம்.

- உற்சாகமான விவாதமானது 18 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் அவர்களுக்கான அமைப்புக்களை உருவாக்குதல் or வீட்டுத் தொழிலாளர்

அமைப்பில் இணைத்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கமுடியும். சிறுவர்களுடைய உரிமைகளில் இதனை இணைத்தல் அத்துடன் பல மாநாட்டில் இதனை இணைத்து எல்லா நாடுகளுக்கும் அதைப் பின்பற்றுதல், சிறுவர்கள் என்றுகூறி சந்திப்பதற்கும் குழுக்கள் மற்றும் அமைப்புக்களில் ஒன்றிணைத்தல் போன்ற உரிமைகளை கொண்டிருக்கின்றனர் என்று அமைப்புக்களின் சுதந்திரம் தொடர்பான கட்டுரை குறிப்பிடுகின்றது. உதாரணமானது H2. 3 இருந்து எடுக்கப்பட்டது.

**செயற்பாடு 2.5**

**இளம் வீட்டுத் தொழிலாளர்களை ஒருங்கமைத்தல்**

**நாடகத்துக்கான சூழ்நிலைகள்**

**பாத்திரங்கள்**

ஜோய்லான்டி (Joyland) னுடைய வீட்டு வேலைக்காரர்களின் தேசிய அமைப்பினுடைய உறுப்பினர் (NDWAJ)

- Pemba வயது 22 நிறுவன உறுப்பினர் மற்றும் NDWAJ இன் தலைவர் அவர் 14 வயதிலிருந்து வீட்டுத் தொழிலாளராக உள்ளார்.
- றிரா (Rita) வயது 17 இடம் பெயர்ந்தவர், 10 மாதங்களாக உறுப்பினராக உள்ளார். அவர் 13 வயதிலிருந்து வீட்டுத் தொழிலாளராக உள்ளார்.
- ஆகமட் (Ahmed) வயது- 20 2 வருடங்களாக உறுப்பினராக உள்ளார். இவர் 16 வயதிலிருந்து வீட்டுத் தொழிலாளராக உள்ளார்.

இளம் வீட்டுத் தொழிலாளர்கள்.

- மாலே (Malee) வயது 20, அவள் 15 வயதிலிருந்து வீட்டுத் தொழிலாளராக உள்ளார்.
- கறிமா (Karima) வயது 16, அவள் 13 வயதிலிருந்து வீட்டுத் தொழிலாளராக உள்ளார்.

- செப்கோன் (Sophorn) வயது 15, இவன் 12 வயதிலிருந்து வீட்டுத் தொழிலாளராக உள்ளார்.
- காட்சி

